இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள்: 28

சுடர் 32 | கதிர் 216 | வள்ளுவர் ஆண்டு 2048 | ஆனி 16 வெள்ளிக்கிழமை 30.06.2017

## தலைதூக்குகிறது புலிகள் இயக்கம்

**மைத்திரியின் ஆட்சி அதற்கு சிறந்த வாய்ப்பு என்கிறார் விமல்**

கொழும்பு, ஜூன் 30
விடுதலைப் புலிகள் இயக்கம் மீண்டும் தலை தூக்குவதற்குச் சாதகமான ஒரு யுகம். >> 06

# வித்தியா கூட்டு வன்புணர்வின் பின் கொலை துஷாந்தின் தலைமையிலேயே அரங்கேறியது

## முக்கிய இரு சாட்சிகள் தீர்ப்பாயத்திடம் சாட்சியம்

யாழ்ப்பாணம், ஜூன் 30
"6ஆம் எதிரி சிவதேவன் துஷாந்தின் தலைமையிலேயே மாணவி வித்தியா கடத்தப்பட்டு கூட்டு வன்புணர்வுக்குட்படுத்தப்பட்டு, படுகொலை செய்யப்பட்டார். துஷாந்த் திருமணம் முடிப்பதாகக் கூறி வித்தியாவைக் கடத்திச் சென்று பாழடைந்த வீட்டுக்குள் வைத்து நண்பர்களுடன் கூட்டு வன்புணர்வுக் குட்படுத்திவிட்டு வித்தியாவை கூட்டாகவே கொலை செய்தனர். அவர்களின் திட்டத்தின் பின்னணியில் சுவிஸ் குமாரும் இருந்துள்ளார்" இவ்வாறு தீர்ப்பாயம் முன்னிலையில் 2 முக்கிய சாட்சிகள் நேற்றுச் சாட்சியமளித்தனர்.
மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன் தலைமையில் மேல் நீதிமன்ற நீதிபதிகள் >> 25

## வடக்கு அமைச்சர்கள் அனந்தி, சர்வேஸ்வரன் ஆளுநரிடம் பதவியேற்பு



யாழ்ப்பாணம், ஜூன் 30
வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சராக க.சர்வேஸ்வரனும், கூட்டுறவு, உணவு வழங்கலும் விநியோகமும், தொழில்துறை, தொழில் >> 06

## விகாரை அமைக்க தையிட்டியில் காணி

*பிக்குகள் முன்னிலையில் நேற்று அளவீடு*

யாழ்ப்பாணம், ஜூன் 30
வலி.வடக்கில் அண்மையில் விடுவிக்கப்பட்ட தையிட்டிப் பிரதேசத்தில் விகாரைக்கான காணி அளவீடு மூன்று பிக்குகள் முன்னிலையில் நேற்று இடம்பெற்றுள்ளது.
1983ஆம் >> 25

## கொக்கிளாய் மீன்பிடி விவகாரம்;

# தென்பகுதி மீனவர்களுக்கு சாதகமான தீர்வு முன்வைப்பு

## முல்லை. அதிகாரிகளும் இணக்கம் >> 06

## யாழ். முஸ்லிம்கள் பிரச்சினை குறித்து சிறப்புக் கலந்துரையாடல் இன்று

யாழ்ப்பாணம், ஜூன் 30
யாழ்ப்பாண முஸ்லிம் மக்களின் மீள்குடியமர்வு, அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் சிறப்புக் கலந்துரையாடல், யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் அமைச்சர் ரிசாத் பதியுதீன் தலைமையில் இன்று நடைபெறவுள்ளது.
யாழ்ப்பாண மாவட்டத்தில், >> 06

## பன்னாட்டு நீதிபதிகள் வருவது உறுதியானதே



*கூறுகின்றார் மகிந்த ராஜபக்ச*

கொழும்பு, ஜூன் 30
நாட்டை இரண்டாகப் பிரிக்கும் புதிய அரசமைப்பும் படையினரைத் தண்டிக்கும் பன்னாட்டு நீதிபதிகள் குழுவும் வரப்போவது உறுதியென முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.
குருநாகலில் இடம்பெற்ற >> 25

## ஒற்றுமையாகச் செயற்படுங்கள்;

## வடக்குக் குழப்பங்களுக்குப் பின்னர் முதல்வருக்கு இந்தியத் தூதுவர் புத்திமதி

யாழ்ப்பாணம், ஜூன் 30
ஒற்றுமையாகச் செயற்படுமாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனைச் சந்தித்த, இந்தியத் தூதுவர் தரன்ஜித் சிங் சந்து அறிவுரை கூறியுள்ளதாக அறிய முடிகின்றது.
இந்தியத் தூதுவராகப் பதவியேற்ற பின்னர் யாழ்ப்பாணத்துக்கு முதல் தடவையாக வருகை தந்த >> 25

## கொங்கிறீற்றில் பொருத்து வீடு

*இந்திய நிறுவனம் ஆராய்வு*

யாழ்ப்பாணம், ஜூன் 30
பொருத்து வீட்டை வடக்கு மக்கள் நிராகரித்துள்ள நிலையில், கொங்கிறீற்றிலான பொருத்து வீட்டை யாழ்ப்பாணத்தில் அமைப்பது தொடர்பில் இந்திய நிறுவனம் ஆராய்வுகளை மேற்கொண்டுள்ளது. இந்த நிறுவனத்தின் பிரதிநிதிகள், யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் இது தொடர்பில் கலந்துரையாடல்களை நடத்தியுள்ளதாக அறிய முடிகின்றது.
சீன முறைமையிலான தகரப் பொருத்து வீடுகளை >> 06

## பிரபாவைப் போன்ற தலைவர் தமிழரிடம் இப்போது இல்லை

*சுமணரத்ன தேரர் கூறுகின்றார்*

கொழும்பு, ஜூன் 30
விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனைப் போன்று அரசுக்கு சவால் விடுக்கும் தமிழ் தலைமைகள் தற்போது இல்லை என்று கூறியுள்ளார் மட்டக்களப்பு மங்களராமய விகாரையின் விகாராதிபதி அம்பிட்டியே சுமணரத்ன தேரர்.
அவர் நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.
அதில் உள்ளதாவது: >> 06

## காணி விடுவிப்பு விவகாரம்

## கூட்டமைப்புடன் படைத்தரப்பு திங்களன்று மீண்டும் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 30
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், பாதுகாப்புத் தரப்பினர் இடையே காணிகள் விடுவிப்புத் தொடர்பான இரண்டாவது கலந்துரையாடல் எதிர்வரும் திங்கட்கிழமை யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ளது. யாழ்ப்பாண மாவட்ட இராணுவத் தளபதி உள்ளிட்டோர் இதில் கலந்து கொள்ளவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
மக்களின் காணி விடுவிப்புத் தொடர்பில், பாதுகாப்பு அமைச்சின் செயலருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளு >> 06

## இந்தியத் தூதுவர் சந்திப்பு, பதவியேற்பு; இரு அமைச்சர்களுக்கு அழைப்பில்லை

யாழ்ப்பாணம், ஜூன் 30
வடக்கு மாகாண சபையின் புதிய அமைச்சர்களின் பதவியேற்பு மற்றும் இந்தியத் தூதுவருடனான சந்திப்புக்கு சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் மற்றும் போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை.
வடக்கு மாகாண சபையின் புதிய அமைச்சர்களின் பதவியேற்பு, ஆளுநர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்றது. கூட்டுறவு, உணவு வழங்கலும்விநியோகமும், >> 06



## யாழ். வந்த இந்தியத் தூதுவர் பல தரப்புக்களுடனும் சந்திப்பு

*பொது நூலகத்துக்கு நூல்களும் அன்பளிப்பு*

யாழ்ப்பாணம், ஜூன் 30
இந்தியத் தூதுவர் தரன்ஜித் சிங் சந்து நேற்று யாழ்ப்பாண மாவட்டத்துக்கு வந்து பல்வேறு தரப்பினருடன் கலந்துரையாடினார்.
வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை >> 06

## போராட்டத்தை தொடர அனுமதி!

கொழும்பு, ஜூன் 30
சைட்டம் தொடர்பான பிரச்சினையை முன்னிறுத்தி, எதிர்வரும் தினங்களில் தொடர்ச்சி >> 25

## சட்டவலுவான விசாரணைக்கு முகங்கொடுப்பதற்குத் தயார்

*அமைச்சர் டெனீஸ்வரன் மீளவும் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஜூன் 30
"கடந்த காலத் தவறுகளை மீளவும் விடமுடியாது. விசாரணைக்கு முகம்கொடுக்க மறுத்து ஓடி ஒளியவில்லை. எந்தச் சட்டரீதியான - சுயாதீனமான விசாரணையை >> 06

Vardhana சஹய

சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிக் கடன்

DFCC வங்கியின் வர்தன சஹய கடனைப் பெற்று உங்கள் வியாபாரத்தை அபிவிருத்தி செய்யுங்கள்

- வியாபாரமொன்றை ஆரம்பித்தல்
- வியாபாரத்தை விரிவுபடுத்தல், புதிய இடத்திற்கு மாற்றுதல், வியாபாரத்திற்கு அவசியமான இயந்திர வகைகளை கொள்வனவு செய்தல்
- தொழிற்படு மூலதன வசதி
- பிணை முறிகளைப் பெறும் வசதி

கடன் பெற்றுக் கொள்ளும் வாடிக்கையாளர்களுக்கு இலவசமாக காப்புறுதி வசதி செய்து கொடுக்கப்படும்.

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

24 மணி நேர அழைப்பு மையம் : 011 2350000
www.dfcc.lk

DFCC வங்கி உங்கள் வளர்ச்சிக்கு

DFCC வங்கி ... AA-(lka) தரப்படுத்தலைப் பெற்றுள்ளது ... உரிமம் பெற்ற ஒரு வர்த்தக வங்கியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாரதிகளுக்குச் சலுகை

கொழும்பு, ஜூன் 30
தபால்ஊழியர்களின்பணிப்புறக் கணிப்புக் காரணமாக வீதிப் போக்குவரத்துப் பொலிஸாரால் வாகனங்களுக்கு விதிக்கப்பட்ட தண்டப் பணத்தைச் செலுத்த முடியாதுள்ள சாரதிகளுக்குச் சலுகை வழங்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் போக்குவரத்து மற்றும் குற்றப் பிரிவின் பிரதிப் பொலிஸ்மாஅதிபர்கமல்சில்வா தெரிவித்தார்.

"வீதிப் போக்குவரத்தின் போது தவறு விளைவித்த சம்பவம் தொடர்பாக குற்றப் பத்திரிகை வழங்கப்பட்ட சகல சாரதிகளும் பொலிஸ் நிலையங்களுக்குச் சென்றுபோக்குவரத்துப்பிரிவின் பொலிஸ்நிலையப்பொறுப்பதிகாரியைச்சந்திக்க வேண்டும். அங்குள்ள பொலிஸ் பொறுப்பதிகாரியின் மூலம் அந்த குற்றப் பத்திரிகையில் உரிய முத்திரையிடப்பட்ட அடையாளத்தைஉறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ள குற்றப் பத்திரிகை வைத்திருக்கின்ற சகல சாரதிகளும் சாரதி அனுமதி அடையாள அட்டையை நீதி மன்றுக்குச் சமர்ப்பிக்கத் தேவையில்லை.

தபால்ஊழியர்களின்பணிப்புறக் கணிப்பு முடிவடைந்த பின்னர் தண்டப் பணத்தைச் செலுத்தி சாரதி அனுமதி அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்ள முடியும்"எனவும்அவர்மேலும்தெரிவித்தார். (ஜ-10)

# இலங்கைக் கடற்பரப்பில் மீன்பிடிக்க பன்னாட்டு மீனவர்களுக்குத் தடை

மட்டக்களப்பு, ஜூன் 30
இலங்கைக் கடற்பரப்பில் பன்னாட்டு மீனவர்கள் மீன் பிடித்தலைத் தடுத்தல், தடை செய்யப்பட்ட மீனவ உபகரணங்களைப் பயன்படுத்தி மீன்பிடித்தல் உள்ளிட்டவைகளைத் தடுப்பதற்கு உரிய சட்டம் நாடாளுமன்றில் அடுத்த வாரம் இயற்றப்படும். பன்னாட்டு மீனவர்கள் நமது கடலில் மீன்பிடித்தால் அவர்களுக்கு 10 மில்லியன் ரூபா அபராதமும், அவர்களின் சொத்துக்களை அரசுடமையாக்குவதும் அந்தச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு கடற்றொழில் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார். ஐரோப்பிய ஒன்றியத்தின் மாவட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ்142 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் கடற்றொழில் நீரில் வள அபிவிருத்தி அமைச்சு, மற்றும் இலங்கை தேசிய நீர் வாழ் உயிரின வளர்ப்பு அதிகாரசபையால் அமைக்கப்பட்ட



செட்டை மீன்குஞ்சு உற்பத்தி நிலையம் மட்டக்களப்பு தாம்புரத்தில் உத்தியோக பூர்வமாக நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் கடல் மீன் வளர்ப்புத்திட்டம் முதன் முதலாக மட்டக்களப்பில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இங்கு ஒரு தடவையில் 8 லட்சத்துக்கும் அதிகமான கொடுவா மீன் குஞ்சுகளை உற்பத்தி செய்ய முடியும். இந்தத் திட்டத்திலிருந்து வருடத்துக்கு 3 ஆயிரத்துக்கும் அதிகமான மெற்றிக் தொன் மீனைப் பெறலாம் என எதிர்பார்க்கின்றோம். மட்டக்களப்பு மாவட்டத்தை விவசாயத்துறையில் மாத்திரமின்றிமீன்பிடித்துறையிலும்முன்னேற்ற முடியும் என நாங்கள் நம்புகின்றோம்.

2020 ஆம் ஆண்டில் பன்னாட்டு வருமானத்தை இலங்கைக்கு ஈட்டிக்கொடுக்கும் 3 ஆவது துறையாக மீனவத்துறை காணப்படும். - என்றார். (ஜ-10, 46)

## சைட்டம் விவகாரம்:

# இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் அரசுக்கே உண்டு

### மருத்துவ அதிகாரிகள் சங்கத்துக்கு அதிகாரம் இல்லை என்கிறார் அஜித்

கொழும்பு, ஜூன் 30
சைட்டம் எனப்படும் மாலபே தனியார் மருத்துவக் கல்லூரித் தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கும்



பொறுப்பு அரசிடமே உள்ளது. அரசவைத்திய அதிகாரிகள் சங்கத்துக்கு அதிகாரம் இல்லை.

இவ்வாறு மின்வலு மற்றும் எரிசக்தி பிரதி அமைச்சர் அஜித் பி பெரேரா தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
தற்போதைய அரசு தொடர்பில் மக்கள் முழுமையாக மகிழ்ச்சியடையாவிடினும் கடந்த அரசு தொடர்பில் சிந்தித்துப் பார்க்க வேண்டும். சைட்டம் தொடர்பான விவகாரம் தற்போது நாட்டில் பூதாகரமாகி யுள்ளது.

கடந்த அரசின் காலத்திலேயே இந்தக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டிருந்தது. நெவில் பெர்ணாந்து வைத்தியசாலையை அரசுடமையாக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. சைட்டம் நிர்வாகத்தை விரிவாக்குவது தொடர்பில் கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன.

சைட்டம் தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்க வேண்டிய கடமையும், பொறுப்பும் அரசிடமே காணப்படுகிறது. மாறாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்திடம் இல்லை என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்" என்றார். (த)

# வாகனசாரதிக்கு ரூ.20 ஆயிரம் அபராதம்

சாவகச்சேரி, ஜூன் 30
வழித்தட அனுமதிப் பத்திரமின்றிபயணிகளைஏற்றிவந்த வாகனச் சாரதிக்கு சாவகச்சேரி நீதிமன்றால்நேற்று20ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

கடந்த மே 18 ஆம் திகதி முதன்மைச் சாலையில் பயணிகளுடன்வந்தவாகனத்தைப்பரிசோதனை செய்த போது பயணிகளை ஏற்றுவதற்கான வழித்தட அனுமதிப் பத்திரம் இல்லாதமை கண்டு பிடிக்கப்பட்டது.

அதனையடுத்து பொலிஸார் சாரதிக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர். அந்த வழக்கு நேற்று வரை ஒத்தி வைக்கப்பட்டிருந்தது. வழக்கு நேற்றுவிசாரணைக்கு எடுக்கப்பட்ட போது வாகனச் சாரதிகுற்றத்தைஒப்புக்கொண்டதையடுத்து 20 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (ஜ)



# நிர்ணய விலையில் மணல் விற்காதோர் மீது நடவடிக்கை

### கிளி. மாவட்டச் செயலர் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஜூன் 30
கிளிநொச்சிமாவட்டத்தில்மாவட்டச் சுற்றாடல் பரிந்துரைக் குழுவால் நிர்ணயிக்கப்பட்ட விலையில் மணல் விநியோகிக்கப்பட வேண்டும். மீறுவோர் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று கிளிநொச்சி மாவட்டச் செயலர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

மணல் அகழ்வை மேற்கொள்வதற்குப்பரிந்துரைசெய்யப்பட்டுள்ள சங்கங்கள் மற்றும் நபர்களுடன் மணல் அகழ்வு தொடர்பான கலந்துரையாடல் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

மாவட்டத்தில் மணல் அகழ்வை மேற்கொள்ளும்பகுதியில்10கிலோமீற்றருக்குஉட்பட்டசுற்றுவட்டாரத்தில்ஒருஉழவுஇயந்திரப்பெட்டி3/4 கியூப்மணலின்பெறுமதி4ஆயிரம் ரூபாவாகவும், மணல் அகழ்வுப்பிரதேசத்தின் 10 கிலோ மீற்றர் சுற்றுவட்டாரத்துக்கு அப்பால் உள்ள ஒவ்வொரு கிலோமீற்றருக்கும் 70ரூபாவீதம் அறவிடப்படும். என்றார். இந்தக் கலந்துரையாடலில் மாவட்ட சுற்றாடல் பரிந்துரைக் குழுவின்அனுமதியின்றிஎந்தவித மணல் அகழ்வையும் மேற்கொள்ள முடியாது. புதிய இடங்களில்மணல்அகழ்வைமேற்கொள்வதற்கு ஆய்வுகள் மேற்கொள்ளப்படும். அத்துடன் சட்ட விரோதமாக மணல்அகழ்வைமேற்கொள்வோருக்கு எதிராக கடுமையான நடவடிக்கைஎடுக்கப்படும்எனவும்தீர்மானிக்கப்பட்டது.

மேலதிக மாவட்டச் செயலர் சத்தியசீலன், கரைச்சி மற்றும் கண்டாவளைப்பிரதேச செயலர்கள், மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர், பிராந்திய அகழ்வுப் பொறியியலாளர், மாவட்ட வனவள அலுவலர், நீர்ப்பாசன பொறியியலாளர் போன்றோர் நிகழ்வில் கலந்து கொண்டனர். (ஜ-10, 6, 35)



இந்தியாமற்றும்இலங்கைக்கானதுனிசியாதூதுவர்நேஜ்மெட்டின்லஹால்பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்த்தனவைச் சந்தித்தார். பாதுகாப்பு அமைச்சில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பின் போது இருவருக்குமிடையில் இரு தரப்பு முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் தொடர்பாக சுமுகமான கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.
சந்திப்பை நினைவு கூரும் வகையில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் துனிசியத் தூதுவருக்கு நினைவுச் சின்னம் ஒன்றையும் வழங்கினார். (ஐ)

# அசாத் சாலிக்கு எதிராக ஹெல உறுமய முறைப்பாடு

கொழும்பு,ஜூன்30
தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அசாத் சாலிக்கு எதிராக பிவித்துரு ஹெல உறுமய குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் நேற்று முறைப்பாடுசெய்துள்ளது.

பௌத்தபிக்குமார்முஸ்லிம்பள்ளிவாசல்கள் மீது தாக்குதல் நடத்தியதாக அசாத் சாலி கூறியிருந்தமை தொடர்பில் விசாரணை நடத்துமாறு கோரியே இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பிவித்துரு ஹெல உறுமயவின் இளைஞர் விவகார செயலாளர் சுகீஸ்வர பண்டார இந்த முறைப்பாட்டைச் செய்துள்ளார். அசாத்சாலிஇனவாதத்தைத் தூண்டும் வகையில் கருத்துக்களைவெளியிட்டுவருவதாக பிவித்துரு ஹெல உறுமய குற்றஞ்சுமத்தியுள்ளது. (ஜ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# போலியான நாணயத் தாள்களுடன் ஐவர் கைது

கொழும்பு, ஜூன் 30
போலியான நாணயத்தாள்கள் வைத்திருந்த குற்றச்சாட்டில் 5 பேர் நேற்றுக் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். போலியான 5 ஆயிரம் ரூபா நாணயத்தாளைக் கொடுத்து மதுபானம் கொள்வனவு செய்த சந்தேக நபரைப் பொலிஸார் கைது செய்தனர். அவரிடம் இருந்து 5ஆயிரம் ரூபா போலியான நாணயத் தாள்கள் 12 கைப்பற்றப்பட்டன. சந்தேகநபரிடம் மேற்கொண்ட மேலதிக விசாரணைகளின் போது அவருக்குப் போலியான நாணயத் தாள்களை வழங்கிய குற்றச்சாட்டில் நால்வர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்தும் 5 ஆயிரம் ரூபா போலியான நாணயத் தாள்கள் 127 கைப்பற்றப்பட்டன.
விசாரணைகளில் சந்தேக நபர்கள் மதுகம, குப்புக்கெடே மற்றும் வெரலபனாதர ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிய வந்துள்ளது. (ஐ-10)

# சீனப்பெண்கள் இருவர் கைது

கொழும்பு, ஜூன் 30
சீனாவில் இருந்து சட்ட விரோதமாகக் கடத்தி வரப்பட்ட மாணிக்க கற்கள் மற்றும் தங்க ஆபரணங்களுடன் இரண்டு சீனப் பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று சுங்கத் திணைக்களம் தெரிவித்தது.
சீனாவின் கும்ஹெங் பிரதேசத்தில் இருந்து 35 லட்சம் ரூபா பெறுமதியான மாணிக்கக்கற்கள் கடத்தப்பட்டுள்ளன. கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தில் கைது செய்யப்பட்ட அவர்களிடம் இருந்து வெளிநாட்டுச் சிகரெட்டுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.
28 மற்றும் 35 வயதான சீனப் பெண்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.
சுங்க அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று சுங்கப் பிரதிப் பணிப்பாளர் பராக்கிரம பஸ்நாயக்க தெரிவித்தார்.
(ஐ-10)

# வடக்கின் அபிவிருத்திக்கு இந்தியா கைகொடுக்கும்

## இந்தியத் தூதுவர் யாழில் உறுதி

யாழ்ப்பாணம்,ஜூன் 30
வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்கு முடிந்தளவு உதவிகளை வழங்குவதற்கு இந்திய அரசு தயாராக இருக்கிறது என்று இந்தியத் தூதுவர் என்னிடம் உறுதியளித்தார். இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.
இந்தியத் தூதுவர் தரண்ஜித் சிங் சன்தூ நேற்று வியாழக் கிழமை யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தார். வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வ ரனை அமைச்சின் செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.
இந்த சந்திப்பின் நிறைவில் முதலமைச்சர் கருத்துத் தெரிவிக்கும்



போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,
தூதுவர் பதவி ஏற்றதன் பின்னர் முதன் முதலாக யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருக்கிறார். அந்த வகையில் அவருடன் பல்வேறு விடயங்கள் குறித்துக் கலந்துரையாடினேன்.
பலாலி வானூர்தி நிலையம் மற்றும் மயிலிட்டித் துறைமுகம், காங்கேசன்துறைத் துறைமுகம் உட்பட மன்னார் ஊடாக தனுஷ்கோடிக்கான போக்குவரத்து உள்ளிட்ட அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடினோம். அதில் சில வேலைத்திட்டத்துக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தூதுவர் கூறினார். இந்திய அரசால் வழங்கப்படும் புலமைப்பரிசில் திட்டத்துக்கு வடமாகாணத்தில் இருந்து விண்ணப்பிப்பவர்களின் எண்ணிக்கை குறைவாக உள்ளது. வேலைவாய்ப்பின்றி இருக்கும் இளைஞர்கள் இவ்வாறான வாய்ப்புக்களைத் தவற விடுகின்ற னர் என்று அவர் சுட்டிக்காட்டினார். அரசியல் ரீதியான விடயங்களை அறிந்து கொள்வதற்கு அவர் அதிக ஈடுபாட்டைக் காட்டவில்லை. வடமாகாணத்தைப் பொருளாதார ரீதியில் முன்னேற்றுவதற்கான வழிகளை சிந்தியுங்கள், அதற்கான முழு ஒத்துழைப்பையும் வழங்குவதாக அவர் உறுதியளித்துள்ளார்.
எமக்கு முதலமைச்சர் நிதியம் கிடைத்தால் நாம் புலம்பெயர் நாடுகளில் உள்ள மக்களின் நிதி உதவிகளைப் பெற்று பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகளைச் செய்ய முடியும் என்று அவரிடம் கூறினேன்.
முன்னைய காலத்தை விட தற்பொழுது யாழ்ப்பாணத்தில் பெரும் முன்னேற்றங்களைக் காணக்கூடியதாகவுள்ளது என்று அவர் என்னிடம் கூறினார்.
முகாமைத்துவம், கணினி, நிர்வாகம் போன்ற பாடத்திட்டங்களுக்கு புலமைப் பரிசில்கள் உள்ளன. விண்ணப்பிக்கும் மாணவர்கள் இலவசமாகக் கற்கக் கூடிய வகையிலான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. எனவே மாணவர்கள் முன்வர வேண்டும் என எடுத்துக் கூறினார் என்று முதலமைச்சர் தெரிவித்தார். அதேவேளை இந்திய தூதுவரின் யாழ். வருகையை முன்னிட்டு யாழ்ப்பாணம் நூலகத்துக்கு சுமார் 16 ஆயிரம் நூல்கள் அன்பளிப்பாக வழங்கப்படும் என்று யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத்தூதரகத்தின் கொன்சியூலர் ஏ.நடராஜன் தெரிவித்தார்.
இந்தச் சந்திப்பில் வடக்கு மாகாண சபை அமைச்சர்களான அனந்தி சசிதரன் மற்றும் சர்வேஸ்வரன், வடக்குமாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம், யாழ். இந்திய துணைத்தூதரக கொன்சியூலர் ஏ.நடராஜன் உட்படப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-8,106)



# மன்னார் மாவட்டத்தில் மதப்பிரச்சினைகள் அதிகரிப்பு

## அமைச்சர் டெனீஸ்வரன் சுட்டிக்காட்டு



மன்னார், ஜூன் 30
மன்னார் மாவட்டத்தில் தற்போது மதப்பிரச்சினைகள் அதிகரித்துள்ளன. இவற்றையெல்லாம் தூக்கி எறிந்து விட்டு மக்கள் ஒன்றுமையுடன் பிரதேசத்தின் அபிவிருத்தி நோக்கிய செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு வடமாகாண மீன்பிடி, போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்தார்.
கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் மன்னார் பள்ளிமுனைக் கிராமத்தில் அமைக்கப்பட்ட உள்ளூர் வளங்களால் தயாரிக்கப்பட்ட கைவினை உற்பத்திப் பொருள்கள் விற்பனை நிலையம் நேற்றுக் காலை திறந்து வைக்கப்பட்டது. இந்த நிலையத்தைத் திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது,
எமது இனம் வாழ வேண்டும் என்பதற்காகக் கடந்த காலங்களில் எத்தனையோ உயிர்கள் மண்ணில் விதைக்கப்பட்டன. விதைக்கப்பட்ட உயிர்களுக்கு அர்த்தம் தேடும் வகையில் நமது செயற்பாடுகள் அமைய வேண்டும். ஒவ்வொரு கிராமங்களும் அபிவிருத்தியை நோக்கி நகர வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.
எனக்கு ஒதுக்கப்படுகின்ற நிதி 5 மாவட்டங்களதும் தேவைகளைப் பொறுத்து ஒதுக்கப்பட்டு வருகின்றது. எதிர்காலத்திலும் பல்வேறு அபிவிருத்திகளுக்கு நிதி ஒதுக்கப்படவுள்ளது. பல்வேறு கிராமங்களுக்கு இவ்வாறான வேலைத்திட்டங்கள் முன்னெடுக் கப்படும்.
- என்றார். (ஐ-10, 56)

# லிந்துலை ஹோல்ட்ரீம் தோட்ட மக்கள் போராட்டம்

கொழும்பு, ஜூன் 30
தமக்கு நிரந்தர வீடுகளை அமைத்துத் தருமாறு கோரி லிந்துலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட லிந்துலை ஹோல்ட்ரீம் தோட்ட மக்கள் நேற்றுப் போராட்டத்தில் ஈடுப்பட்டனர்.
2015 ஆம் ஆண்டில் இந்தப் பகுதியில் பெய்த கடும் மழையால் மண்சரிவு ஏற்பட்டது. மண்மேடுகள் சரிந்து விழுந்த இடரால் 24 வீடுகளுக்குப் பலத்த சேதங்கள் ஏற்பட்டன.
இந்த நிலையில் தோட்ட நிர்வாக அதிகாரிகள் மற்றும் கிராம சேவையாளர் மழைக்காலங்களில் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுங்கள் என்று தெரிவிக்கின்றார்களே தவிர நிரந்தரமான வீடுகளை அமைக்க நடவடிக்கை எடுப்பதில்லை என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். போராட்டக்காரர்கள் பதாகைகளை ஏந்தி, கோசங்களை எழுப்பியவண்ணம் போராட்டத்தில் ஈடுப்பட்டனர். (ஐ-10)



முல்லைத்தீவு குமுழமுனை கற்பகப்பிள்ளையார் ஆலயத்தின் தேர்த்திருவிழா நேற்று இடம்பெற்றது. அதிகாலை முதல் பூசைகள் இடம்பெற்று காலை 7.30 மணியளவில் வசந்தமண்டப பூசை இடம்பெற்றது. அதனை தொடர்ந்து விநாயகர் உள்வீதி வலம் வந்து தேரில் எழுந்தருளி 9.30 மணியளவில் தேர்ப்பவனி இடம்பெற்றது. (ஐ)

# பதின்ம வயது மாணவி மீது ஆசிரியர் பாலியல் துர்நடத்தை

வவுனியா, ஜூன் 30
வவுனியா பூந்தோட்டம் பகுதியில் அமைந்துள்ள பாடசாலை ஒன்றில் மாணவி ஒருவர் அதே பாடசாலையில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர் ஒருவரால் பாலியல் துர்நடத்தைக்கு உட்படுத்தப்பட்டார். என்று தெரிவிக்கப்படுகிறது.
இந்தச் சம்பவம் தொடர்பாக நேற்று முறைப்பாடு கிடைக்கப் பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.
முறைப்பாட்டை அடுத்து பெண்கள் மற்றும் சிறுவர் பாதுகாப்புப் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.
குறித்த பாடசாலையில் விவசாய பாடம் கற்பிக்கும் ஆசிரியர் பதின்ம வயதுடைய மாணவி ஒருவரை கடந்த 22 ஆம் திகதி பாடசாலையின் புத்தக அறை ஒன்றில் வைத்து துர்நடத்தைக்கு உள்ளாக்கினார் என்று தெரிவிக்கப்பட்டது.
சம்பவம் குறித்த விசாரணைகளை வவுனியா வலயக்கல்வி பணிமனை முன்னெடுத்துள்ளது. இந்தச் சம்பவத்தை மூடி மறைப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. அரசியல் செல்வாக்கின் ஊடாக அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். (ஐ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் அச்சமில்லை

## ஆஸியில் கூறினார் அமைச்சர் மனோ

கொழும்பு, ஜூன் 30
வெளிநாடுகளில் தஞ்சமடைந்துள்ள மக்கள் அச்சமின்றி நாடு திரும்புவதற்கான சூழல் இலங்கையில் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக தேசிய சகவாழ்வு அரச கரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார்.
ஆஸ்ரேலியாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள அமைச்சர் மனோ அங்கு பல்வேறு தரப்பினருடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டார்.
கலந்துரையாடல்களின்போது, இலங்கையில் இன்னும் அச்சுறுத்தல்கள் தொடர்வதாக ஆஸ்ரேலியத் தமிழ் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.
எனினும், அவ்வாறான சூழல் தற்போது மாற்றியமைக்கப்பட்டுள்ளதாகவும், நாடு திரும்புவோர் கடந்த காலங்களைப் போன்று முகாம்களுக்கு அனுப்பப்படமாட்டார்கள் என்றும் அவர்களுக்கு அமைச்சர் மனோ கூறியுள்ளார். (கு)

# பல்கலைக்கழக அனுமதிக்கு பதிவு செய்யும் காலம் நீடிப்பு

கொழும்பு, ஜூன் 30
பல்கலைக்கழக அனுமதிக்கான பதிவை மேற்கொள்ள எதிர்வரும் 7ஆம்திகதிவரைசந்தர்ப்பம்வழங்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்தது.
“பல்கலைக்கழகங்களுக்காக அனுமதிக்கான காலம் இன்றுடன் முடிவடைவதாக முன்னர் அறிவிக்கப்பட்டது. எனினும் தபால் திணைக்கள ஊழியர்களின் பணிப்புறக்கணிப்புக்காரணமாக இந்த தீர்மானம் எடுக்கப்பட்டது” என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் மொஹான் டி. சில்வா தெரிவித்தார். (வ)

# அஞ்சல்சேவைகள் இன்று வழமைக்கு

கொழும்பு, ஜூன் 30
தபால்திணைக்களஊழியர்களால் முன்னெடுக்கப்பட்ட தொடர்பணிப்புறக்கணிப்புப் போராட்டம் நேற்று நிறைவுக்கு வந்ததாக அறிவிக்கப்பட்டது.
பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து அஞ்சல் திணைக்கள ஊழியர்கள் கடந்த 26ஆம் திகதி முதல்தொடர்பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் நாட்டின் அஞ்சல் சேவை முற்றாகப் பாதிக்கப்பட்டது. இந்த நிலையில்போராட்டம்நிறைவுக்கு வந்ததாகநேற்றிரவுஅறிவிக்கப்பட்டது. இதனால் இன்று அஞ்சல் சேவைநடைபெறும்என்றும்தெரிவிக்கப்பட்டது. (வ)

# கழிவகற்றல்செயற்பாடுகள் இரு கிராமங்களில் இன்று

யாழ்ப்பாணம், ஜூன்30
யாழ்ப்பாணம் மாநகர சபையின் எல்லைக்குட்பட்ட ஜே68, ஜே69 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளிலுள்ள குடியிருப்புகளின் முன்புறம், வடிகால்கள், வீதிமற்றும்கடற்கரைப் பகுதியில் தேங்கியுள்ள திண்மக்கழிவுகளைஅகற்றுவதற்கான செயற்பாடுகள் இன்றுவெள்ளிக்கிழமைகாலை6மணிதொடக்கம் மதியம் ஒரு மணி வரை நடைபெறும் என யாழ். மாநகர சபையால் அறிவிக்கப்பட்டுள்ளது.
இந்தக் கிராமங்களின் குடியிருப்பாளர்களுக்குதுண்டறிக்கைமூலமாகவும்ஒலிபெருக்கிமூலமாகவும் நேற்று அறிவித்தல் வழங்கப்பட்டது.
திண்மக் கழிவுகளை பிளாஸ்ரிக், பொலித்தீன், உக்கக்கூடியவை, கண்ணாடிகள் என தரம்பிரித்து இன்று காலை 9.30மணிதொடக்கம்11.30மணிவரைமாநகரசபை கழிவகற்றல் பிரிவினரிடம் ஒப்படைப்பதற்கு ஒத்துழைப்புவழங்குமாறு கோரப்பட்டுள்ளது.
இதேவேளை, குருநகர் கடற்கரையில் கடற்றொழிலாளர்களால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள மீன்பிடிக்கலங்களையும்அகற்றிதிண்மக்கழிவுகளை அகற்றும் செயற்றிட்டத்துக்கு இன்று ஒத்துழைப்பு வழங்குமாறுகுருநகர்கடற்றொழிலாளர்அபிவிருத்திச்சங்கம்நேற்று மாலை குருநகர் வீதிகளில் ஒலிபெருக்கிமூலம்அறிவித்தல்வழங்கியது. (21,51)

# அரசுக்கு எதிராக போராட்டம் நடத்த மகிந்த அணி முடிவு

கொழும்பு, ஜூன் 30
சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையே செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் நிறைவடைவதையடுத்து அரசுக்கு எதிரான கடுமையான போராட்டத்தை முன்னெடுக்க மகிந்த அணியான பொது எதிரணியினர் திட்டமிட்டிருக்கின்றனர் எனத் தெரியவருகின்றது.
இதற்கான கலந்துரையாடல்கள் பொது எதிரணியின் உயர்மட்டத்தில் இப்போது நடந்து வருகின்றன என பொது எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் சொய்சா தெரிவித்தார்.
தங்களது எதிர்ப்புப் போராட்டத்துக்கு பல்வேறு தரப்புகளிலிருந்தும் அமோக ஆதரவு கிடைத்திருக்கின்றது எனவும் அவர் தெரிவித்தார். (கு)



கிளிநொச்சியில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் காணாமற்போனவர்களின் உறவினர்களை வடக்கு மாகாண சபையின் மகளிர் விவகாரம், மறுவாழ்வு அமைச்சராகப் பொறுப்பேற்ற அனந்தி சசிதரன், மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கத் துடன் நேற்று நேரில் சென்று சந்தித்தார். (4)

# மருதங்கேணி மருத்துமனையில் பணியாளர்கள்பணிப்புறக்கணிப்பு

மருதங்கேணி, ஜூன்30
வடமராட்சிகிழக்கு, மருதங்கேணி அரசினர் மருத்துமனை மருத்துவர்கள் மற்றும் ஊழியர்கள் நேற்றையதினம்பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.
மருதங்கேணி மருத்துவமனை மருத்துவர்கள் விடுதிக்குள் நுழைந்து மருத்துவர் ஒருவரின் மோட்டார் சைக்கிள் சேதப்படுத்தப்பட்டது. அதனைக் கண்டித்தே இந்த பணிப்புறக்கணிப்பு இடம்பெற்றதாக தெரிவிக்கப்பட்டது.
கடந்தஒருவாரத்துக்குமுன்னரும் மருத்துமனையின்பெண்கள்விடுதிக்குள்இனந்தெரியதோர்நுழைந்ததாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகொடுத்தும்இதுவரை எந்தப்பயனும்ஏற்படவில்லை.
அதுபோலேவே நேற்று இவ்வாறான சம்பவம் இடம்பெற்றுள்ளது.
இதுதொடர்பானவிசாரணைகளை பொலிஸார் துரிதப்படுத்த வேண்டும்என்றும்பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.
மருத்துவர்கள் பணிப்புறக்கணிப்பில்ஈடுபட்டாலும்அவசரசிகிச்சைப் பிரிவு வழமைபோல் இயங்கியது. (10, 26)



# நகை கண்டெடுப்பு

யாழ்ப்பாணம், ஜூன்30
யாழ்ப்பாணம்வைத்தியசாலை வீதியிலுள்ள இலங்கை வங்கிக் கிளையில்கடந்தவெள்ளிக்ழமை தங்க நகை ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. தவறவிட்டவர்கள் தகுந்த ஆதாரத்துடன் பெற்றுக்கொள்ள முடியும் என வங்கியின் முதன்மை முகாமையாளர் அறிவித்தார். (21)

# கிணற்றுக்குள் தவறி வீழ்ந்து இளம் பெண் உயிரிழப்பு

கிளிநொச்சி, ஜூன்30
கிணற்றில் தவறி வீழ்ந்து இளம் பெண் ஒருவர் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
கிளிநொச்சி புதுமுறிப்புப் பகுதியில் இந்தச் சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த ஆறுமுகம் மோகனாம்பாள் (வயது-27) என்ற இளம் பெண்ணே இவ்வாறு உயிரிழந்தார்.
கிணற்றில் நீர் அள்ளும் போதே அவர் தவறி வீழந்தார் என்று வைத்தியசாலையில் உறவினர்கள் தெரிவித்தனர்.
பெற்றோர் இல்லாத நிலையில் மாமியாரின் பாதுகாப்பில் வாழ்ந்து வந்த அவர் சிறு வயது முதல் வலிப்பு காரணமாக சிகிச்சை பெற்று வந்தார் என்றும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.
உடற்கூற்றுப் பரிசோதனையின் பின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (வ-21-101-6)

# தம்பியை கொன்றார் அண்ணன்

மதுபோதையில் ஏற்பட்ட தகராறு காரணமாக அண்ணன் ஒருவர் தனது தம்பியை பொல்லால் அடித்து கொன்றார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
இந்த சம்பவம் நேற்றுமுன்தினமிரவு கேகாலை பிரதேசத்தில் நடை பெற்றது.
சம்பவத்தில் படுகாயமடைந்த தம்பி கேகாலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார். 40 வயதான சீமன் மனவத்தன் என்ற நபரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார். (4)



தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற அரு[illegible] சேமிப்புக் கணக்கு வைத்திருக்கும் மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா கொமர்ஷல் வங்கியின் [illegible] கிளையில் நேற்று இடம்பெற்றது. பரிசில் பெற்ற மாணவர்களுடன் வங்கிக் கிளையின் அதிகாரிகளை படத்தில் காணலாம். (வ)

# பொய் உரைக்கிறார் ரணில்

## இப்படிச் சாடுகின்றார் விமல் வீரவன்ச

அரசமைப்புத் திருத்தத்தில் அதிகாரத்தை பகிர்வதற்கு அனைத்து கட்சிகளும் இணக்கம் தெரிவித்துள்ளனஎன்றுதலைமைஅமைச்சர் ரணில் விக்கிரமசிங்க பொய்யுரைத்துள்ளார்.
இவ்வாறு மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினரான விமல் வீரவன்ச கூறினார்.
கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்ததாவது:
அதிகாரத்தை பகிர்வதற்கு கூட்டு எதிர்க்கட்சி ஒருபோதும் இணங்கவில்லை. அரசியல் வழி நடத்தல் குழுவுக்கு நாம் வழங்கிய அறிக்கையில் அதிகாரத்தை பகிருதல் உள்ளிட்ட பல விடயங்[illegible] இணங்கவில்லைஎனசுட்டிக்காட்டியுள்ளோம். இந்த அரசு ஜெனீவாவிற்கு வழங்கிய வாக்குறுதிக்கு அமைய இந்த நாட்டில் சமஷ்டி முறைமையை அறிமுகப்படுத்த எத்தனிக்கின்றது.
இந்த நாட்டின் அடையாளத்தை இல்லாது செய்து நாட்டை துண்டாக துண்டாக பிரிக்க முயற்சிக்கின்றார்கள். தலைமைஅமைச்சரும் அரச சார்பற்ற நிறுவன அதிகாரிகளும் வெளிநாட்டு தூதுவர்களும் இணைந்துஇந்தநாட்டை9பாகங்களாகபிரிப்பதற்குஎதிராகபோராட்டங்களை முன்னெடுக்க வேண்டிய தேவை ஏற்[illegible]ட்டுள்ளது. என்றார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் பலத்தால் ஆரம்பிக்கப்பட்டதே உமா ஓயா திட்டம்

## அரசதலைவர் விளக்கம்

கொழும்பு, ஜூன் 30
பண்டாரவளையில் உமா ஓயா திட்டம் ஆரம்பிக்கப்பட்டது கடந்த காலஅரசின்அரசியல்பலத்தாலே. இந்தத்திட்டத்தைஆரம்பிப்பதற்கு பொறியியலாளர்கள் பலர் கருத்துக்களை முன்வைத்திருந்தனர். ஆனால் அரசு அதனைச் செவிமடுக்காமல் திட்டத்தை ஆரம்பித்தமை இன்று மக்களுக்கு பெரும் ஆபத்தை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறுஅரசதலைவர்மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

ஹற்றன் ஹைலன்ட் கல்லூரியின் 125ஆவது ஆண்டு விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்புமாவட்டங்களைத்தொடர்ந்து நுவரெலியா மாவட்டம் அரச மதுபானத்தை விற்று அரசின் வருமானத்தை உயர்த்தும் மூன்றாவது மாவட்டமாக உள்ளது. எனினும் மந்தபோசனத்தில்முதலிடத்திலுள்ளது.

உமாஓயா திட்டத்துக்கு எதிராக மக்கள் முன்னெடுத்த போராட்டம் நியாயமானது. நானும் அந்த மக்கள் பக்கமே உள்ளேன். உமா ஓயா திட்டம் கடந்த அரசால் முன்னெடுக்கப்பட்டது . பொறியியலாளர்களின் கருத்தை மீறி அரசியல் பலத்தால் ஆரம்பிக்கப்பட்ட இந்தத் திட்டத்தால் பெரிய பிரச்சினை ஏற்பட்டுள்ளது. நான்ஆட்சிபீடம்ஏறியவுடன் அந்த வேலைத்திட்டத்தை நிறுத்த முயற்சித்தேன். எனினும் அந்தக்காலப்பகுதியில், வேலைத்திட்டத்தின்மூன்றில்இரண்டுபகுதி வேலைகள்நிறைவடைந்துவிட்டதால், அந்த வேலைத்திட்டத்தை தொடர்ந்து முன்னெடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

தற்போது அங்கு நிலவும் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில்நோர்வேநாட்டுபொறியியலாளர்களை அனுப்பி வைக்குமாறு, அந்த நாட்டு அரசிடம் கோரியுள்ளேன். நோர்வே நாட்டுப்பொறியியலாளர்கள், இன்னும்ஓரிருநாள்களில் இலங்கைக்கு வரவுள்ளனர் - என்றார்.



நிகழ்வில்கல்லூரியின்125ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நினைவு முத்திரை வெளியிட்டு வைக்கப்பட்டது. த ஜலண்டர் எனும் சிறப்பு மலரும் வெளியிடப்பட்டது.

நிகழ்வில் கல்வி இராஜாங்க அமைச்சர் வே. இராதாகிருஸ்ணன், நுவரெலியாமாவட்டநாடாளுமன்றஉறுப்பினர்களான ஆறுமுகம் தொண்டமான், முத்து சிவலிங்கம், மத்திய மாகாண முதலமைச்சர்சரத்ஏக்கநாயக்க, மத்திய மாகாண தமிழ் கல்வி அமைச்சர் எம்.ராமேஸ்வரன் மற்றும் ஊவா மாகாண அமைச்சர் செந்தில் தொண்டமான் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ஐ-10)

## விவசாய, பொறியியல் பீடங்களின் கட்டடங்கள் இன்று ஒப்படைப்பு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாய பீடத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள மாணவர் திறன் விருத்திக்கான கட்டடத்தொகுதியும் பொறியியல்பீடத்தில் அமைக்கப்பட்டுள்ள இரு மாடிக் கட்டடமும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிர்வாகத்திடம் கையளிக்கும் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் கிளிநொச்சி அறிவியல் நகரில் நடைபெறும்.

கிளிநொச்சி அறிவியல் நகரில் அமைந்துள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விவசாய மற்றும் பொறியியல் பீடங்களுக்கான வசதிகளைமேம்படுத்தும் திட்டத்தின் கீழ் இந்திய அரசின்நிதி உதவியுடன் இவை அமைக்கப்பட்டன.

யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் இ.விக்கினேஸ்வர னின் அழைப்பின் பேரில் உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல, இலங்கைக்கான இந்தியத் தூது வர் தரண்ஜித் சிங் சந்து மற்றும் வடக்கு மாகாண ஆளுனர் றெஜினோல்ட் குரே ஆகியோர் கட்டடங்களை உத்தியோகபூர்வமாகத் திறந்து வைப்பர்.

2014ஆம் ஆண்டு இலங்கை இந்திய அரசுகளுக்கு இடையே கைச்சாத்திடப்பட்ட உடன்பாடு ஒன்றின் கீழ் இந்திய அரசின் நிதியுதவியுடன் இந்தக் கட்டடங்கள் சுமார் 550 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டன. இந்தக்கட்டடங்களுக்கு தேவையான ஒரு தொகுதி இயந்திர சாதனங்களையும் ஆய்வுகூட உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் பெற்றுக் கொடுக்கவும், இந்தப் பீடங்களுக்கு சில வாகனங்களை பெற்றுக்கொடுக்கவும் இந்த உடன்படிக்கையின் கிழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பதிவாளர் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது. (4)

## புதியஅரசமைப்புக்குறித்துக்கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஜூன் 30
அரசமைப்பைத் தயாரித்தல் தொடர்பாக பொது மக்களுக்கு அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டத்தின் ஒரு அங்கமாக இன்று மு.ப.9மணி தொடக்கம் மதியம் 2மணிவரை யாழ்ப்பாண மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் கருத்தரங்கொன்று நடைபெறவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (21)

## அரசதலைவர் பங்கேற்ற நிகழ்வை புறக்கணித்த மலையகப் பிரதிநிதிகள்

கொழும்பு, ஜூன் 30
ஹற்றன்ஹைலண்ட்கல்லூரியின் 125 ஆவது ஆண்டு விழா நேற்று நடைபெற்றது. விழாவில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டார். எனினும் மலையகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும். அமைச்சரான பா.திகாம்பரம் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் எம். திலகராஜ் ஆகியோருக்கு அழைப்புவிடுத்தும்அவர்கள்நிகழ்வில் பங்கேற்கவில்லை. இதே வேளை, கல்லூரியின் பழைய மாணவர்என்றபோதிலும்தனக்கு ஹைலண்ட்கல்லூரிநிர்வாகத்தால் இதுவரை அழைப்பு விடுக்கப்படவில்லை என்று நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திலகராஜ் ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

ஹைலன்ட் கல்லூரியில், அரச தலைவருக்குச் செங்கம்பள வரவேற்பளிக்கப்பட்ட போது, நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஆறுமுகன் தொண்டமான்அரசதலைவரைவரவேற்று அழைத்துச்சென்றார். (ஐ-10)

## உறவுகளால்அநாதரவாக்கப்பட்ட முதியவர் கைதடி இல்லத்தில் சேர்ப்பு

யாழ்ப்பாணம்,ஜூன் 30
உறவுகளால்கைவிடப்பட்டுசாலையோரம் அநாதரவான நிலையில் இருந்த வயோதிபர் ஒருவர் மீட்கப்பட்டு க்கைதடி அரச முதியோர் இல்லத்தில் சேர்க்கப்பட்டார். இந்தச் சம்பவம் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றது.

கோப்பாய்நாவலர்மகாவித்தியாலயத்துக்கு அருகில் வெள்ளை வேட்டியும், சேட்டும் அணிந்திருந்த முதியவர்சாலையோரமாக உறங்கிக் கொண்டிருந்தார்.

முதியவரின்நிலையை அறிந்தபிரதேச மக்கள் கைதடி முதியோர் இல்லத்துக்கு அறிவித்தனர். முதியோர் இல்ல நிர்வாகத்தினர் அந்த இடத்துக்கு வருகை தந்து முதியவரை அழைத்துச்சென்றனர்.வேலணை வங்காளவடியைச்சேர்ந்த இலகுப்பிள்ளைநடராஜா(வயது82)என்ற முதியவரே இவ்வாறு மீட்கப்பட்டவராவார்.

தனது பிள்ளைகள் யாவரும் வேலணையில் வசிப்பதாகவும், ஒரு மகள் பிரான்சில் வசிப்பதாகவும் அந்த முதியவர் தெரிவித்தார்.

சம்பந்தப்பட்டமுதியவரின்உரித்தானவர்கள் யாராவது இருந்தால் உடனடியாக கைதடி முதியோர் இல்ல நிர்வாகத்துடன் தொடர்பு கொள்ளுமாறுஅத்தியட்சகர்த.கிருபாகரன் கேட்டுள்ளார். (ஐ-17)

## டிப்பர்சில்லுக்குள் அகப்பட்டவர் நூலிழையில் உயிர் தப்பினார்

சாவகச்சேரி, ஜூன் 30
திருத்த வேலை மேற்கொள்ளப்பட்ட டிப்பர் வாகனம் திடீரெனப் புறப்பட்டதால் திருத்த வேலையில் ஈடுபட்டவரின் கழுத்தின் மீது சில்லு ஏறியது.

அங்கு நின்றவர்கள் டிப்பரை முன்னே செல்லவிடாமல் தடுத்ததால் உயிராபத்து தடுக்கப்பட்டது. இருப்பினும் சில்லுக்குள் அகப்பட்டவர் மேலதிக சிகிச்சைக் காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் நேற்று சாவகச்சேரியில் இடம்பெற்றது. டிப்பர் வாகனத்தின் கிளட்ச் திருத்தவேலையில்ஈடுபட்டவேளையிலேயே வாகனம் தானாகவே உருண்டதெனத்தெரிவிக்கப்பட்டது. சாவகச்சேரி கச்சாய் வீதியைச் சேர்ந்த நபர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காகயாழ்.போதனாமருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். (ஐ)



திருகோணமலை விசாலாட்சி அம்பாள் சமேத விஸ்வநாதர் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழாவின் தேர்த்திருவிழா ஆயிரக்கணக்கான பக்தர்களின் அரோகரா கோசத்துடன் நேற்று இடம்பெற்றது. (ஐ-40)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென்பகுதி...

முல்லைத்தீவு, ஜூன் 30

முல்லைத்தீவு, கொக்கிளாய் கடற்கரையில் கடற்றொழிலில் ஈடுபடுவதற்கு ஏற்பட்ட பிரச்சினையில் தென்னிலங்கை மீனவர்களுக்குச் சாதகமான தீர்வு நேற்று சட்டமா அதிபரால் முன்வைக்கப்பட்டது. அவரின் முடிவை ஏற்று முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர், கரைத்துறைப்பற்று பிரதேச செயலாளர் மற்றும் நீரியல் வளத் திணைக்கள அதிகாரி ஆகியோர் ஒப்பமிட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

முல்லைத்தீவு, கொக்கிளாய் கடற்கரையில் கடற்தொழிலில் ஈடுபடுவதற்கு ஏற்பட்ட பிரச்சினையில்தென்னிலங்கைமீனவர்களுக்குச் சாதகமாக பதில் சட்டமா அதிபரால் நேற்று முடிவு எட்டப்பட்டது. அவரின் முடிவை ஏற்று முல்லைத்தீவு மாவட்ட செயலாளர், கரைத்துறைப்பற்று பிரதேச செயலாளர் மற்றும் நீரியல் வளத் திணைக்கள அதிகாரி ஆகியோர் ஒப்பமிட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

முல்லைத்தீவு, கொக்கிளாய் கடற்கரையில் உள்ளூர் மீனவர்கள் வாடி அமைக்க பிரதேச செயலாளரால் வழங்கப்பட்ட நிலப் பகுதி தென்னிலங்கை மீனவர்களின் கரைவலைப் பாட்டுப் பகுதிக்குள் உள்ளடங்குகின்றது. எனவே உள்ளூர் மீனவர்கள் வாடி அமைப்பதற்கு தடை விதிக்க வேண்டும் எனக் கோரி தென்னிலங்கை மீனவர்கள் 3 பேர் சார்பில் முல்லைத்தீவு நீரியல் வளத் திணைக்களம் கடந்த ஆண்டு ஜூலை மாதம் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தது. இதனால் உள்ளூர் மீனவர்கள் அந்தப் பகுதியில் தொழிலில் ஈடுபட நீதிமன்றால் இடைக்காலத் தடை விதிக்கப்பட்டது. வழக்கு விசாரணைகளும் தொடர்ந்து இடம்பெறுகின்றன. இந்தப் பிரச்சினை தொடர்பில் இறுதி முடிவை நீதிமன்று கோரியது. அது தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களத் தின் ஆலோசனையைப் பெறுவதற்காக நீரியல் வளத் திணைக்களம் முடிவு செய்தது. உள்ளூர் மீனவர்களின் பிரச்சினைக்குத் தீர்வை முன்வைப்பது தொடர்பில் ஆராய்வதற்கு முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் மற்றும் கரைத்துறைப்பற்று பிரதேச செயலாளர் ஆகியோரை சட்டமா அதிபர் அழைத்திருந்தார்.

இந்தச் சந்திப்பு நேற்று வியாழக்கிழமை சட்டமா அதிபர் திணைக்களத்தில் இடம்பெற்றது. அங்கு மேற்படி விடயம் பதில் சட்டமா அதிபர் தலமையில் மூன்று தரப்பினரின் முன்னிலையில் ஆராயப்பட்டது.

கலந்துரையாடலில் உள்ளூர் மீனவர்களால் அமைக்கப்பட்ட வாடி பின்நகர்தப்பட வேண்டும் என்று வாடி- பதில் சட்டமா அதிபரால் இறுதி முடிவு எடுக்கப்பட்டது. உள்ளூர் மீனவர் சங்கத்தின் பாவனைக்காக வாடி அமைக்க வழங்கப்பட்ட நிலத்தில் அமைக்க முயன்ற வாடியை மீனவர்கள் தற்போதைய இடத்தில் இருந்து வடக்குத் திசைநோக்கி 275 மீற்றர் தூரம் நகர்த்தி அந்தப் பகுதியில் நிரந்தர வாடி அமைக்கலாம் என்று முடிவெடுக்கப்பட்டது. சகல தரப்பினரும் இணக்கத்துக்கு வந்தனர். அதற்கான உறுதிப்பாட்டில் முல்லைத்தீவு அதிகாரிகள் ஒப்பமிட்டனர்.

இந்த விடயம் சட்டமா அதிபர் திணைக்களத்தால் முல்லைத்தீவு நீதிமன்றுக்கும் எழுத்தில் அறிவிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது. எதிர்வரும் தவணையுடன் குறித்த வாடி தொடர்பான வழக்கு முடிவுறுத்தப் படலாம் என்று எதிர்பார்க்கப்படுசின்றது.

இந்த விடயம் தொடர்பாக தொடர்பு கொண்டு கேட்டபோது, "குறித்த கலந்துரையாடல் இன்று (நேற்று) இடம்பெற பொகின்றது என்பதை அறிந்தேன். ஆனால் அதனுடைய முடிவு எனக்கு தெரியவில்லை, 275 மீற்றர் தூரம் வாடி நகர்தப்படுவது எமது வாடிக்கு அப்பால் உள்ள பிரதேசம். அங்கு பாறைகள்தான் காணப்படுகின்றன. படகை நிறுத்த முடியாத பிரதேசம். நாம் வாடி அமைத்த பகுதியில் இருந்து இரு கரையும் சில மீற்றர்களுக்கு அப்பால் பாறைகளே காணப்படுகின்றன. இப்போது உள்ள வாடியே சரியான தெரிவு" என்று முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் சங்க சமாசத்தலைவர் மரியராசா தெரிவித்தார். (வ-21-101)

## பிரபாவை...

போர் முடிவடைந்த பின்னர் தமிழ் மக்களுக்கு நடக்கும் அநீதிகளை தட்டிக்கேட்க தமிழ் தலைமைகள் முன்வருவதில்லை. கிழக்கு மாகாணத்தை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து தமிழ் மக்களை அடக்கியாள சில சக்திகள் திரைமறைவில் முயல்கின்றன. தமிழ் மக்களின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் காலம் தற்போது ஏற்பட்டுள்ளது. தமிழ் மக்கள் தமது வாக்குகளை சிறகடிக்காமல், தமிழினத்துக்கு வாக்களித்து கிழக்கு மாகாணத்தை காப்பாற்ற வேண்டும். போர் நடந்த காலத்தை விட போர் முடிந்த பின்னரே தமிழ் மக்கள் காடுகள், ஓலைக்குடிசைகள் என்பவற்றில் பல்வேறு சிரமங்கள் மத்தியில் வாழும் நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நிலைமையை மாற்றியமைக்க தமிழ் மக்கள் ஒன்றுதிரண்டு கிழக்கை காப்பாற்ற வேண்டும். என்றுள்ளது. (ற)

## கூட்டமைப்புடன்...

மன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் ஏப்ரல் மாதம் 17ஆம் திகதி பாதுகாப்பு அமைச்சில் கூட்டம் நடைபெற்றிருந்தது. இந்தக் கூட்டத்தில், மாவட்டரீதியில் கூட்டம் நடத்தி விடயங்களை ஆராய்வதற்கு தீர்மானம் எட்டப்பட்டிருந்தது. இதற்கு அமைவாக ஒவ்வொரு மாவட்டத்திலும் கூட்டம் நடத்தப்பட்டிருந்தது. யாழ்ப்பாண மாவட்டத்துக்குரிய கூட்டம் ஏப்ரல் 21ஆம் திகதி நடைபெற்றிருந்தது. இந்தக் கூட்டத்தில், தனியார் காணிகளை விடு விப்பதற்குப் படையினர் மாற்றுக் காணி கோரியிருந்தனர். அரச காணி அடையாளப்படுத்தி வழங்கப்பட வேண்டும். இல்லாவிடின் இருக்கின்ற தனியார் காணியில் விடுவிக்கக் கூடியதை மக்களிடம் கையளிக்க இணங்கியிருந்தனர். படையினருக்கு மாற்று அரச காணி வழங்க முடியுமா என்பது தொடர்பில் பிரதேச செயலர்கள் ஆராய்ந்து அறிக்கையிட முடிவு செய்யப்பட்டிருந்தது. பிரதேச செயலர்கள், மே மாதத்தின் முதல் வாரத்திலேயே, மாற்று அரச காணி வழங்க முடியாது என்று மாவட்டச் செயலகத்துக்கு அறிக்கை சமர்பித்துள்ளனர்.

இந்த நிலையில் இதன் தொடர் கலந்துரையாடல் இரண்டு மாதங்களின் பின்னர் எதிர்வரும் திங்கட் கிழமை காலை 11 மணிக்கு மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ளது. (5)

## யாழ்...

யாழ்ப்பாணப்பிரதேசசெயலர்பிரிவு, வேலணை பிரதேச செயலர் பிரிவு, சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவுகளிலேயே முஸ்லிம் மக்கள் மீளக்குடியமர்ந்துள்ளனர். அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் மீள்குடியேறுவதில் முஸ்லிம் மக்களுக்கு உள்ள சவால்கள் தொடர்பில் இந்தச் சிறப்புக் கூட்டத்தில் ஆராயப்படவுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கு, அமைச்சர் ரிசாத் பதியுதீன் கடந்த மாதம் கடிதம் அனுப்பியிருந்தார். அதில், முஸ்லிம் மக்களின் மீள்குடியேற்றத்துக்குக் கூட்டமைப்பு ஒத்துழைப்பதில்லை என்று சாடியிருந்தார். இந்தப் பின்னணியிலேயே, யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் இந்தக் கூட்டம் இன்று பி.ப. 2 மணிக்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் மாவட்டச் செயலர் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் பங்கேற்பர் என்று தெரிய வருகின்றது. (5)

## வடக்கு...

முனைவோர், சமூகசேவை, மகளிர் விவகாரம், மறுவாழ்வு அமைச்சராக அனந்தி சசிதரனும் நேற்று வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து பதவியேற்றனர். விவசாய கால்நடை மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சுக்களை சி.வி.விக்னேஸ்வரன் பொறுப்பேற்றுக்கொண்டார். இந்த நிகழ்வுகள் மு.ப. 10 மணியளவில் ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றன.

"என்னுடன் சார்ந்த மூன்று அமைச்சு பதவிகளில் இரண்டை அவர்களுக்கு கொடுத்து, மீதமாக உள்ள விவசாயம் சார்ந்த அமைச்சுப் பதவியை நான் பெறுப்பேற்றுக்கொண்டேன். மூன்று மாதத்தின் பின்னர் இதை மீளாய்வு செய்யவுள்ளோம். அது வரையில் நாம் நன்றாக செயற்படுவோம்." என்று பதவியேற்பு நிகழ்வின் பின்னர் கருத்துத் தெரிவித்த வடக்கு மாகாண முதலமைச்சர் தெரிவித்தார்.

"பாதிக்கப்பட்ட மக்களுடைய வெற்றியாகவும் அங்கீகாரமுமாகவே நான் இதைக் கருதுகின்றேன். மாகாண சபையிடம் பெரும் நிதி இருக்கின்றது என்று மக்கள் நினைக்கின்றனர். ஆனால் போதுமான நிதி இல்லை. மக்களின் பிரச்சினைகளுக்காகத் தொடர்ந்து குரல் கொடுப்பேன்." என்று தெரிவித்தார் கூட்டுறவு, உணவு வழங்கலும் விநியோகமும், தொழில்துறை, தொழில்முனைவோர், சமூகசேவை, மகளிர் விவகாரம், மீள்குடியேற்ற அமைச்சராக பதவியேற்ற அனந்தி சசிதரன்.

"கல்வி சார்ந்த விடயங்களிலே முன்னுரிமை கொடுக்க வேண்டிய விடயங்கள், பிரச்சினைகளைச் சீர்செய்வதற்கு அடித் தளங்கள் இடுவேன். கல்வியில் நாம் 9ஆம் இடத்தில் இருக்கின்றோம். நாம் முன்னேற வேண்டும். திட்டங்கள் சார்பாக முதலைமைச்சருடன் கலந்துரையாடி அவைக்குக் கொண்டு சென்று உறுப்பினர்களின் கருத்துக்களைப் கேட்டுச் செயற்படுத்துவே. அதிகார ரீதியாக இதனைப் பார்க்காமல் மக்களுக்கு சேவை செய்யும் நோக்கத்துடன் செயற்படுவேன்." என்று கல்வி அமைச்சராகப் பதவியேற்ற க.சர்வேஸ்வரன் தெரிவித்தார். (ற-ரி)

## இந்தியத்...

மகளிர் விவகாரம், சமூகசேவைகள், மீள்குடியேற்ற அமைச்சுப் பொறுப்புக்களை திருமதி அனந்தி சசிதரனும், கல்வி பண்பாட்லு வல்கள் அமைச்சுப் பொறுப்பை க.சர்வேஸ்வரனும் நேற்று ஏற்றுக் கொண்டனர்.

வடக்கு மாகாண சபையில் அமைச்சர்களாக உள்ள பா.டெனீஸ்வரன் மற்றும் ப.சத்தியலிங்கம் இருவருக்கும், இந்த அமைச்சுப் பொறுப்பு ஏற்கப்படும் தகவல் கூட தெரிவிக்கப்படவில்லை. அத்துடன் நிகழ்வுக்கான அழைப்பும் விடுக்கப்படவில்லை. இதனால் இருவரும் நேற்றைய பதவியேற்பில் கலந்து கொள்ளவில்லை.

யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகை தந்திருந்த, இலங்கைக்கான இந்தியத் தூதுவருடன் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கைதடியிலுள்ள அவரது அலுவலகத்தில் சந்தித்துப் பேசினார். இந்தச் சந்திப்பில் புதுமுக அமைச்சர்கள் இருவரும் மாத்திரமே பங்கேற்றனர். பழைய இரு அமைச்சர்களுக்கும், முதலமைச்சர் அழைப்பு விடுக்க வில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் பாகுபாடாக பாரபட்சமாக நடப்பதாக அமைச்சர் பா.டெனீஸ்வரன் குற்றம் சுமத்தியுள்ளார். தனக்கு ஆதரவளித்த 14 பேருடன் மாத்திரம் கலந்துரையாடல் நடத்திய முதலமைச்சர், ஆளும் கட்சியை பிளவுபடுத்தி வைத்திருக்கவே இப்படிச் செய்கின்றாரா என்று எண்ணத் தோன்றுவதாகவும் குறிப்பிட்டார். ஆளும் கட்சியில் ஒரு தரப்பினருடன் மாத்திரம் கலந்துரையாடல் நடத்துவதெல்லாம் பாரபட்சமான செயற்பாடு எனவும் அவர் தெரிவித்தார். (5)

## தலைதூக்குகிறது...

அதற்குத் தேவை மைத்திரி ஆட்சி. இப்போது அந்த யுகம் தோன்றிவிட்டது. புலிகள் மெல்ல மெல்ல தலைதூக்கத் தொடங்கியுள்ளனர். புதிய அரசமைப்பின் ஊடாக கூட்டாட்சி கொடுக்கப்படுவதற்கு முன் இந்த அரசு கவிழ்க்கப்படவேண்டும்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது நாட்டில் உள்ள தொழிலாளர்கள், வர்த்தகர்கள், சிறுபான்மை இன மக்கள் மற்றும் ஜன வரி 8ஆம் திகதி மைத்திரிக்கு வாக்களித்தோர் என எல்லோரும் இன்று குழப்பத்திலும் கவலையிலும் உள்ளனர். இந்த நாடு புதிய வழியில் பயணிக்கவேண்டும் என்று விரும்புகின்றனர்.

எமது ஆட்சியில் பல விடயங்களைச் செய்தோம். போரை முடிவுக்குக் கொண்டு வந்தோம். நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்குப் பலமான அடித்தளத்தை இட்டோம். பன்னாட்டுக் கடன் சுமை குறைந்தது. ஒற்றையாட்சி பலப்படுத்தப்பட்டது. பயங்கரவாதத்துக்கு முடிவுகட்டி பன்னாட்டுக்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்தோம். பன்னாட்டு அழுத்தங்கள் இருந்தபோதும்கூட அவற்றையும் தாண்டி நாம் இந்த நாட்டை முன்னோக்கி நகர்த்தினோம். அதைவிடவும் விரிவான பயணத்தை மேற்கொள்ள வேண்டும் என்று மக்கள் விரும்புகின்றனர். தியாகமிக்க முன்னுதாரணமிக்க உணர்வுமிக்க தலைமைத்துவத்தின் தேவையை மக்கள் உணர்ந்துள்ளனர். ஆனால் மக்களின் விருப்பத்துக்கு மாறாக இந்த அரசு பயணிக்கின்றது. புதிய அரசமைப்பின் ஊடாக கூட்டாட்சி கொடுக்கப்படுவதற்கு முன் எட்கா ஒப்பந்தம் மேற்கொள்ளப்படுவதற்கு முன் இந்த அரசு கவிழ்க்கப்பட வேண்டும். இல்லாவிட்டால் போனதைத் திரும்பப் பெற முடியாமல் போய்விடும். அரசின் மோசமான பயணத்தை நிறுத்துவதற்கு நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது.

புலிகளுக்குத் தேவையாக இருப்பது மீண்டும் தலை தூக்குவதற்குச் சாதகமான ஒரு யுகம். அதற்குத் தேவை மைத்திரி ஆட்சி என்று அப்போது நாம் கூறியபோது மக்கள் நம்பவில்லை. பன்னாட்டுச் சதி என்று கூறிய போது அதைக் கேலியுடன் பார்த்தனர். நாம் அப்போது கூறியவை எல்லாம் இப்போது உண்மையாகிக்கொண்டு போகின்றனஎன்றார். (த-3)

## சட்டவலுவான...

யும் எதிர்கொள்வதற்கு எப்போதும் தயாராக இருக்கின்றேன். முதலமைச்சர் தன்னுடைய தேவைக்காக அமைக்கும் சட்டவலுவற்ற விசாரணைக் குழுவை எந்தக் காலத்திலும் ஏற்றுக் கொள்ளமாட்டேன்."

இவ்வாறு வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ் வரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் முன்பு நியமித்த தைப்போன்ற விசாரணைக்குழுவை மீண்டும் நியமித்தால் அந்த விசாரணைக்குழு முன்னிலையில் தோன்றப்போவதில்லை என்றும், மாகாண சபை உறுப்பினர்களை உள்ளடக்கிய தெரிவுக் குழு விசாரணையையே ஏற்றுக் கொள்வோம் எனவும், அமைச்சர்களான ப.சத்தியலிங்கம் மற்றும் பா.டெனீஸ்வரன் ஆகியோர் குறிப்பிட்டிருந்தனர். அமைச்சர்கள் விசாரணைக்குழு முன்பாக வராவிட்டாலும், விசாரணை நடந்தே தீரும் என்று வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் நேற்று முன்தினம் தெரிவித்திருந்தார்.

முதலமைச்சரின் இந்த நிலைப்பாடு தொடர்பில், அமைச்சர் பா.டெனீஸ்வரனிடம் கேட்ட போது, விசாரணைக்கு முகம்கொடுக்க மறுத்து ஓடி ஒளியவில்லை. இப்போதும் சொல்கின்றேன், விசாரணையை எதிர்கொள்வதற்குத் தயாராக இருக்கின்றேன். அந்த விசாரணை முன்பு அமைக்கப்பட்டதைப் போன்று சட்டவலுவற்றதாக இருக்கக் கூடாது. கடந்த காலத்தில் சட்டவலுவற்ற அந்த விசாரணைக்குழு முன்னிலையில் தோன்றியிருந்தோம். அப்போதுவிட்ட தவறை மீண்டும் நாம் விடுவதற்குத் தயாரில்லை.

சட்டரீதியான சுயாதீனமான மாகாணசபைத் தெரிவுக் குழுவை நியமித்தால் அந்த விசாரணைக்குழு முன்பாகத் தோன்றத் தயாராகவுள்ளேன்.

வடக்கு மாகாண முதலமைச்சர் சட்டரீதியான சுயாதீனமான விசாரணைக்குழுவை நியமிக்கத் தயங்குவதில் ஏதாவது உள்நோக்கம் இருக்குமோ என்று சந்தேகிக்க வேண்டியுள்ளது என்றார். (5)

## கொங்கிறீற்....

நிர்மா ணிப்பதற்கு மீள்குடியேற்ற அமைச்சு நடவடிக்கை எடுத்திருந்தது. இதற்கு தமிழ் மக்கள், மக்கள் பிரதிநிதிகளிடமிருந்து கடும் எதிர்ப்புக் கிளம்பியிருந்தது. கல் வீடே தேவை என்று அவர்கள் வலியுறுத்தியிருந்தனர்.

இவ்வாறானதொரு நிலையில் இந்திய நிறுவனம், கொங்கிறீற்றிலான பொருத்து வீடுகளை யாழ்ப்பாணத்தில் அமைப்பது தொடர்பில் ஆராய்ந்துள்ளது. யாழ்ப்பாணத்துக்கு நேற்று முன்தினம் புதன் கிழமை இந்த நிறுவனத்தின் பிரதிநிதிகள் வந்துள்ளனர். யாழ்ப்பாண மாவட்டச் செயலரைச் சந்தித்துள்ளனர்.

மலையகத்தில் 20 ஆயிரம் கொங்கிறீற் பொருத்து வீடுகளை தமது நிறுவனம் அமைக்கவுள்ளதாகக் கூறியுள்ளனர். யாழ்ப்பாணத்திலும் அவ்வாறான வீடுகளை அமைப்பதற்கு தமது விருப்பங்களை வெளிப்படுத்தியுள்ளனர்.

இதன்போது, மாவட்டச் செயலகத்தால், அமைச்சு ஒன்றின் ஊடாக அனுமதியைப் பெற்று இங்கே வந்து முதலில் மாதிரி வீட்டை அமைக்குமாறும், மக்கள் அந்த வீட்டை ஏற்றுக் கொண்டால், பின்பு ஏனைய விடயங்கள் பற்றி ஆராயலாம் என்று பதிலளிக்கப்பட்டுள்ளது. (5)

## யாழ். வந்த...

அவரது அலுவலகத்தில் சந்தித்து இந்தியத் தூதுவர் கலந்துரையாடினார். வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரேயையும் அவரது அலுவலகத்தில் சந்தித்து இந்தியத் தூதுவர் கலந்துரையாடினார். இந்தச் சந்திப்பு பி.ப. 12.30 மணியளவில் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் பொது நூலகத்துக்குச் சென்ற இந்தியத் தூதுவர் ஒரு தொகுதி நூல்களையும் அன்பளிப்பாக வழங்கினார். அவற்றின் பெறுமதி 60 இலட்சம் ரூபா எனத் தெரிவிக்கப்பட்டது. யாழ். மாநகர ஆணையாளர் பொ.வாகீசன் மற்றும் பிரதம நூலகரிடம் அவற்றைக் கையளித்தார்.

ஆயர் இல்லத்துக்கும் சென்று அவர் கலந்துரையாடினார். (ற-8-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தொண்டமானாறு ஆய்வு மையத்தில்

## இரசாயனவியலாளர் வெற்றிடத்தை நிரப்ப அரச அனுமதி கிட்டவில்லை

யாழ்ப்பாணம், ஜூன் 30

தொண்டமானாறு நீரியல் ஆய்வு மையத்தில் நிலவும் இரசாயனவியலாளர் வெற்றிடத்தை நிரப்ப . உத்தியோகத்தரை நியமிக்க கொழும்பு அரசின் அனுமதி கிடைக்க வேண்டும் என்று வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் ஆர்.வரதீஸ்வரன் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

தொண்டமானாறு நீரியல் ஆய்வு மைத்துக்கான இரசாயனவியலாளர் வெற்றிடம் கடந்த இரண்டு வருடங்களாக நிரப்பப்படவில்லை கொழும்பு அரசின் அனுமதி கிடைக்கப்பெற்ற பின்னரே நாம் அந்தப் பதவிக்கான வெற்றிடத்தை நிரப்ப முடியும். இதுபற்றி நாம் ஏற்கனவே கொழும்பு அரசுக்கு கோரிக்கைக் கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தோம். வெற்றிடத்தை நிரப்புமாறு எமக்கு எந்தப் பதிலும் கிடைக்கப்பெறவில்லை. தொண்டமானாறு நீரியல் ஆய்வு மையத்துக்கான இரசாயனவியலாளரை நியமிப்பதன் மூலமாகக் குறைந்த செலவில் நீர்ப் பரிசோதனைகள் மேற்கொள்ளலாம். இதன் மூலமாக மக்கள் தாம் பயன்படுத்தும் தண்ணீர் எவ்வளவு தூரம் பாவனைக்கு உகந்தது என்பதை அறிய முடியும். இரசாயனவியலாளர் வெற்றிடத்தை நிரப்ப அனுமதி கிடைக்காத காரணத்தால் நாம் ஒப்பந்த அடிப்படையில் ஒருவரை பணியில் அமர்த்தி இருக்கின்றோம். இன்னமும் ஒரு உத்தியோகத்தர் எமக்குத் தேவையாக உள்ளார். ஒப்பந்த அடிப்படையில் தற்போது பணிபுரியும் உத்தயோகத்தரின் கால எல்லை நீடிப்பை ஆளுநரின் பரிந்துரையின் படி செய்துள்ளோம் - என்றார்.

(4,ரி)

## வடக்கில் 25 பேருந்து தரிப்பிடங்கள்; அடுத்தமாதம் முன்னாயத்தப் பணிகள்

யாழ்ப்பாணம் ஜூன் 30

வடக்கு மாகாணத்தில் 25 பேருந்துத் தரிப்பிடங்கள் அமைக்கும் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படும் என்று வடக்கு மாகாண போக்குவரத்துச் அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தில் பயணிகளின் போக்குவரத்து நன்மை கருதி 25 பேருந்து தரிப்பிடங்கள் வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சினால் அமைக்கப்படவுள்ளன. ஒவ்வொரு பேருந்து தரிப்பிடமும் தலா 5 லட்சம் ரூபா செலவில் அமையவுள்ளது. இதற்கான ஆரம்பக் கட்டப் பணிகள் நிறைவடைந்துள்ளன. வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் வழிகாட்டலின் கீழ் தரிப்பிடங்கள் அமைக்கும் பணிகள் நடைபெறும்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 8 பேருந்து தரிப்பிடங்களும், கிளிநொச்சி மாவட்டத்தில் 5 பேருந்து தரிப்பிடங்களும், முல்லைத் தீவு மாவட்டத்தில் 6 பேருந்து தரிப்பிடங்களும், வவுனியா மாவட்டத்தில் 5 பேருந்து தரிப்பிடங்களும், மன்னார் மாவட்டத்தில் 7 பேருந்து தரிப்பிடங்களும் அமைக்கப்படவுள்ளன. அடுத்த மாதம் வீதி அபிவிருத்தி திணைக்களத்தால் வேலைக்கான கேள்வி கோரல் நடைபெற்று விரைவில் தரிப்பிடங்கள் அமைக்கும் பணிகள் ஆரம்பமாகும் - என்றார்.

(4,ரி)

## சமுர்த்தி வீட்டுத் திட்ட மோசடி விசாரணை நிலை என்ன?

### தகவல் அறியும் சட்டம் ஊடாக பிரதேச மக்கள் கேள்வி

வவுனியா, ஜூன் 30

வவுனியா புளியங்குளத்தில் வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தால் சமுர்த்திப் பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட வீட்டுத்திட்டத்துக்கான பணத்தில் பல உத்தியோகத்தர்கள் மோசடி செய்துள்ளனர் என்று பிரதேச மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

2012, 2013, 2014, 2015 ஆகிய காலப்பகுதியில் சமுர்த்திப் பயனாளிகளுக்கு வெள்ள நிவாரணம், இடர் முகாமைத்துவ பிரிவால் வழங்கப்பட்ட ஒரு இலட்சம் ரூபா வீட்டுத்திட்டத்தில் பண மோசடி இடம்பெற்றுள்ளதாகவே குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இது தொடர்பாக வவுனியா மாவட்டச் செயலகம் குற்றஞ்சாட்டப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு எதிரான விசாரணைகளை மேற்கொண்டு வந்தது. எனினும் விசாரணை பற்றிய மேலதிக தகவல்களை வெளியிடவில்லை. அந்த உத்தியோகத்தர்கள் வவுனியா மாவட்டச் செயலகத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டு மேலதிக விசாரணைகள் இடம்பெறவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. தற்போது குறித்த உத்தியோகத்தர்கள் வேறுபிரதேசங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். எனவே அவர்கள் மீதான விசாரணகள் இடம்பெற்றுள்ளனவா? என்று கேள்வியெழுப்பி தகவல் அறியும் உரிமைச்சட்டத்தினூடாக விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளது.

இதையடுத்து வவுனியா மாவட்ட செயலகத்தில் தகவல் அறியும் சட்டத்தினூடாக வவுனியா வடக்கு பிரதேச செலயகத்தில் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மேற்கொண்ட மோசடி, அவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் தொடர்பான தகவல்களை வழங்குமாறு மின்னஞ்சல் ஊடாகக் கோரப்பட்டுள்ளது.

தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் ஊடாகத் தகவல் கோரப்படும் போது 14நாள்களுக்குள் பதில் வழங்கப்படவேண்டும் என்பது தெரிந்ததே.

(4)

## வடக்கின் பனங்கருப்பட்டி உற்பத்திக்கு ஊக்குவிப்பு வழங்கவேண்டும் அரசு

### வடக்கு மாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சமாசம் கோரிக்கை

அச்சுவேலி, ஜூன் 30

பனம் கருப்பட்டி (பனை வெல்லம்) உற்பத்திக்கு அரசு மானிய உதவி வழங்கி ஊக்குவிக்கவேண்டும் என்று வடக்கு மாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

சமாசத்தின் தலைவர் என். கணேசன் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

பனை மரங்களில் இருந்து இறக்கப்படும் பதநீரைக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் பனை வெல்ல உற்பத்திக்கான செலவு அதிகரித்துள்ளது. இதனால் சாதாரண மக்கள் பனைவெல்லத்தை கொள்வனவு செய்து பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளனர்.

தென்னிலங்கையில் உற்பத்தி செய்யப்படும் கிதுள் கருப்பட்டி உற்பத்திக்குமானிய உதவிமற்றும்ஊக்குவிப்புக்கள் வழங்கப்படுகின்றன. பனை வெல்ல உற்பத்திக்கு குறிப்பிடத்தக்கள வுக்கு எந்த உதவியும் வழங்கப்படவில்லை. வடபகுதியில் உற்பத்தி செய்யப்படும் பனை வெல்லம் பெருமளவில் வெளிமாகாணங்களுக்கு அனுப்பப்படுவதுடன் புலம்பெயர் நாடுகளில் இருந்து வருவோராலும் கொள்வனவு செய்யப்படுகின்றது.

பனை வெல்லத்தை உற்பத்தி செய்வதற்கான பதநீர், பனம் தொழில் வல்லுநர்களால் பனை மரங்களில் இருந்து சிரமங்க ளுக்கு மத்தியில் இறக்கப்படுகின்றது. பதநீரைக் காய்ச்சி பதப்படுத்திய நிலையிலேயே பனை வெல்லம் கல்லாக்காரம் போன்ற பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இவை மருத்துவ உணவுகள். பனை வெல்ல உற்பத்திக்கு மானிய உதவி மற்றும் ஊக்குவிப்புக்கள் வழங்கும் விடயத்தில் தமிழ் அரசியல் தலைவர்களும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்றார். (4,11)

## பிணையில் வந்ததும் மீண்டும் அதே குற்றம்

### 120 மணித்தியாலங்கள் சமூகப் பணிக்கு உத்தரவு

சாவகச்சேரி, ஜூன் 30

ஒரே குற்றத்தை இரண்டு தடவைகள் புரிந்த நபரை 120 மணித்தியாலங்கள் சமூகப் பணியில் ஈடுபடுத்துமாறு சாவகச்சேரி நீதிமன்று உத்தரவிட்டது.

பொது இடத்தில் மதுபோதையில் குழப்பம் விளைவித்த குற்றச்சாட்டில் சாவகச்சேரியைச் சேர்ந்த குடும்பத் தலைவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்று வழக்குப் பதிவு செய்யப்பட்டுப் பின்னர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தார்.

அவர் பிணையில் சென்று மீண்டும் மதுபோதையில் குழப்பம் விளைவித்ததால் கைது செய்யப்பட்டு நேற்றுமுன்தினம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த நீதிவான் இரு குற்றங்களுக்குமாக 120 மணித்தியாலங்கள் சமூகப் பணியில் ஈடுபடுத்த நீதிமன்ற சமுதாயஞ்சார் சீர்திருத்தப் பிரிவில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை இந்த வருடத்தின் முதல் ஆறுமாதங்களில் இதுவரை மதுபோதையில் குழப்பம் விளைவித்த 36 பேரைச் சமூகப் பணியில் ஈடுபடுத்துமாறு உத்தரவிட்டுள்ளது.

(4, 9)



## கால்நடைகளைப் பாதுகாக்க கொட்டில்களைநிறுவ உதவி

### 50,000 ரூபா பெறுமதியான பொருள்களும் வழங்கப்படவுள்ளன

யாழ்ப்பாணம், ஜூன் 29

யாழ்ப்பாண மாவட்டத்தில் கால்நடைகளைப் பராமரிப்பதற்கான கொட்டில்கள் அடுத்த மாத இறுதிக்குள் பயனாளிகளுக்கு வழங்கப்படும் என்று யாழ்ப்பாண மாவட்ட கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் வக்சலா அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் கால்நடைகள் சார்ந்த உற்பத்தியை அதிகரிக்க பல்வேறு வகையான உதவித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அனைத்துக் காலநிலைகளின்போதும் ஆடு, மாடு என்பனவற்றுக்கு நோய்கள் ஏற்படாதவாறு பாதுகாத்துக் கொள்ள கொட்டில்களை அமைப்பதற்கு 50 ஆயிரம் ரூபாவுக்கு சீமெந்து மற்றும் கூரை ஓடுகளை வழங்கவுள்ளோம். இந்த உதவித் திட்டத்தை வழங்கப் பயனாளர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் . 150 பேருக்கு மாட்டுக் கொட்டில்களும், 25 பேருக்கு ஆட்டுக் கொட்டில்களும் அமைப்பதற்காக 50 ஆயிரம் ரூபா பெறுமதியான உதவித் திட்டங்கள் வழங்கப்படவுள்ளன.

எமது திணைக்களத்தால் வழங்கப்படும் பொருள்களைப் பயன்படுத்தி பயனாளிகளும் அதற்குச் சமனான நிதி மற்றும் மனித வலுவைப் பயன்படுத்திக் கொட்டில்களை அமைத்து முடிக்க வேண்டும். இவர்களுக்கான பொருள்களை அடுத்த மாத இறுதிக்குள் வழங்கவுள்ளோம் என்று அவர் தெரிவித்தார்.

(4,ரி)

## வியாபார உரிமம் பெற்றிராத 12 வர்த்தகர்களுக்கு வழக்கு

### கரைச்சி பிரதேச சபை தாக்கல்

கிளிநொச்சி, ஜூன் 30

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபைக்கு உட்பட்ட கண்டாவளை உப அலுவலகத்தின் கீழ் வியாபார உரிமம் பெற்றுக்கொள்ளாத 12 வியாபார உரிமையாளர்களுக்கு எதிராக கிளிநொச்சி நீதிவான் மன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த வருடம் டிசெம்பரில் விண்ணப்ப படிவங்கள் நேரடியாகவும் ஏனைய நடைமுறைகள் மூலமாகவும் விநியோகிக்கப்பட்டன. பத்திரிகைகள் மூலமாகக் கட்டணம் செலுத்தப்பட்டு விளம்பரம் மூலமாகவும் அறிவிக்கப்பட்டது. கடந்த மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் வியாபார உரிமத்தைப் பெற வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இருப்பினும் சிலர் இதுவரை வியாபார உரிமத்தைப் பெறாது தொடர்ந்தும் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளனர். அவர்களுக்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. கண்டாவளை உப அலுவலகத்தின் கீழ் 12 வியாபார உரிமத்தை பெறாத உரிமையாளருக்கு எதிராக கிளிநொச்சி நீதிவான் மன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கரைச்சி பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியில் இதுவரை வியாபார உரிமம் பெற்றுக்கொள்ளாதவர்களின் விவரங்கள் திரட்டப்பட்டுள்ளன. அவர்களுக்கு எதிராகவும் நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்படும். தற்போது புதிதாக உரிமம் பெறாது சில வியாபார நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. இவர்களுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்று கரைச்சி பிரதேச சபை செயலாளர் க.கம்சநாதன் மேலும் தெரிவித்தார். (4,6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தொண்டராசிரியர்கள் பட்டியலில் முறைகேடு

## வெளியாரை இடைச்செருகிய அதிகாரிகள் மீது நடவடிக்கை

யாழ்ப்பாணம் , ஜூன் 30

தாங்கள் தொண்டராசியராக உள்ளபோதும், தமது பெயர்கள் சேர்க்கப்படாது வேறுநபர்களின் பெயர்களை பாடசாலை ஒன்றின் அதிபரும் கல்வி அதிகாரியும் பட்டியலில் சேர்த்துள்ளனர் என்று பாவற்குளத்தைச் சேர்ந்த இருவர் வடக்கு மாகாண முதலமைச்சரிடம் முறையிட்டுள்ளனர். அது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்குமாறு முதலமைச்சர் பணித்துள்ளார் என்று வடக்கு மாகாண முதலமைச்சர் செயலக பொதுசனத் தொடர்பு உத்தியோகத்தர் ஆ.ந.இராசேந்திரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

"வவுனியாவில் முஸ்லிம் பாடசாலை ஒன்றில் நாங்கள் மூவரும் 2010, 2011 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் தொண்டர் ஆசிரியராகக் கடமையாற்றினோம். தொண்டர் ஆசிரியர் நியமனம் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சால் வழங்கப்படுவதை அறிந்த எமது பாடசாலை அதிபர் பாடசாலையில் ஒருநாளும் தொண்டராகக் கடமையாற்றாத தனது மகன் மற்றும் உறவினர்களை போலியான ஆவணங்கள் மற்றும் லொக் புத்தகத்தில் செருகல் செய்து தனது மகனையும் (2010, 2013 வரை கிராம அலுவலருக்கு உதவியாளராகக் கடமையாற்றியவர்), மற்றொரு பெண் (2010,2014 வரை தையல் பயிற்சி ஆசிரியராக கடமையாற்றினார்), இடைச்செருகியுள்ளனர். இவர்களின் கல்வித் தகமை குறைந்த மட்டத்தில் உள்ளது.

பாதிக்கப்பட்ட நாங்கள் மாகாணகல்வி அமைச்சுக்கு இரண்டுமுறை சென்று மனு வழங்கியும் எங்களை இதுவரை தொண்டர் ஆசிரியர் பெயர்ப்பட்டியலில் உள்வாங்கவில்லை. வவுனியா தெற்கு வலயக்கல்விப் பணிப்பாளரிடம் தொண்டர் ஆசிரியர் நியமனம் தொடர்பாக முறையிட்டதன் விளைவாக கடந்த வருடம் திருமதி அன்ரன் சோமராஜா தலைமையிலான கல்வி அதிகாரிகள் குழு வந்து எமது பாடசாலையில் தொண்டர் ஆசிரியர் கற்பிப்பது தொடர்பாக மாணவர்களிடம் விசாரித்தனர். அதன்போது அவர்கள் கற்பிக்கவில்லை என்பதை வகுப்பு ரீதியாக மாணவர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக மாகாணக் கல்வி அமைச்சுக்குத் தெரிவிப்பதாக எம்மிடம் அவர்கள் கூறினர்.

எங்களுக்கு உரிய தீர்வைப் பெற்றுத்தருமாறும் மாணவர்களின் எதிர்காலக் கல்வி நடவடிக்கைக்கு பொருத்தமானவர்களுக்கு நியாயம் கிடைக்க வழிசெய்யுமாறும் பாதிக்கப்பட்டவர்களாகிய நாம் கோரிக்கை விடுக்கின்றோம்" என்று பாதிக்கப்பட்டவர்கள் முறைப்பாடிட்டுள்ளனர்.

இந்த முறைப்பாட்டைப் பரிசீலித்த முதலமைச்சர், இவர்களின் முறைப்பாட்டை உரிய முறையில் விசாரித்து உண்மையான தொண்டராசிரியர்களைப் பட்டியலில் சேர்த்தும், செல்வாக்கைப் பயன்படுத்திப் பட்டியலில் சேர்க்கப்பட்டவர்களை நீக்கியும், சரியான பட்டியலைத் தயாரிக்குமாறும், தவறு செய்தவர்களைத் தராதரம் பார்க்காது ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உட்படுத்தி உரிய தண்டனை வழங்குமாறும் பணித்துள்ளார். என்று அந்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4,8)

## பல்கலை. வெளிவாரியினருக்கு திசைமுகப்படுத்தல் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூன் 29

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலையம் நடத்தும் கலைமுதற்தேர்வு வெளிவாரி பழைய பாடத்திட்டம் திசைமுகப்படுத்தும் நிகழ்வு எதிர்வரும் ஓகஸ்ட் மாத முற்பகுதியில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் முழுமையாக்கப்பட்டுள்ளன.

அந்தப்பரீட்சை நோக்கிய திசைமுகப்ப டுத்தல் நிகழ்வு நாளை சனிக்கிழமை தொடக்கம் 22 ஆம் திகதி வரை திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலையத்தில் நடைபெறும். குறித்த பரீட்சைக்கு விண்ணப்பித்த மாணவர்களைப்பங்கு பற்றுமாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலைய பணிப்பாளர் பேராசிரியர் பா.நிமலதாசன் தெரிவித்தார்.

திசைமுகப்படுத்தும் நிகழ்வு தொடர்பான நேர அட்டவணையை திறந்த மற்றும் தொலை கல்வி நிலைய இணையத்தள முகவரியில் (WWW.codl.jfn.ac.lk) பார்வையிடலாம் என்று அவர் மேலும் தெரிவித்தார். (4)

# யாழில் 13 பிரதேச செயலர் பிரிவில் 80 வேலைத் திட்டங்களுக்கு நிதி

## சரவணபவன் எம்.பி. ஒதுக்கினார்

யாழ்ப்பாணம், ஜூன் 30

இந்த வருட பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள 13 பிரதேச செயலர் பிரிவுகளில் 80 அபிவிருத்தி வேலைத்திட்டங்களை மேற்கொள்வதற்கு யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் நிதி ஒதுக்கீடு செய்துள்ளார் என்று யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தினர் தெரிவித்தனர்.

வேலணை பிரதேசத்தில் 5 வேலைத் திட்டங்களுக்கு 6 லட்சத்து 20 ஆயிரம் ரூபாவும் காரைநகர் பிரதேச செயலகத்துக்கு 5 வேலைத்திட்டங்களை மேற்கொள்ள 3 லட்சத்து 16 ஆயிரம் ரூபாவும் யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்துக்கு 2 வேலைத் திட்டங்களுக்காக 80 ஆயிரம் ரூபாவும் நல்லூர் பிரதேச செயலகத்துக்கு 3 வேலைத் திட்டங்களுக்காக 79 ஆயிரம் ரூபாவும் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துக்கு 18 வேலைத் திட்டங்களுக்காக 14 லட்சத்து 72 ஆயிரம் ரூபாவும் சங்கானைப் பிரதேச செயலகத்துக்கு 28 வேலைத் திட்டங்களுக்கு 31 லட்சத்து 66 ஆயிரம் ரூபாவும் உடுவில் பிரதேச செயலகத்துக்கு 4 வேலைத் திட்டங்களுக்கு 3 லட்சத்து 56 ஆயிரம் ரூபாவும் தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்துக்கு 4 வேலைத் திட்டங்களுக்கு 3 லட்சத்து 48 ஆயிரம் ரூபாவும் கோப்பாய் பிரதேச செயலகத்துக்கு 3 வேலைத் திட்டங்களுக்கு 2 லட்சத்து 21 அயிரம் ரூபாவும் தென்மராட்சி பிரதேச செயலகத்துக்கு 14 வேலைத் திட்டங்களுக்கு 13 லட்சத்து 35 ஆயிரம் ரூபாவும் கரவெட்டிப் பிரதேச செயலகத்துக்கு 10 வேலைத் திட்டங்களுக்கு 7 லட்சத்து 46 அயிரம் ரூபாவும் பருத்தித்துறை பிரதேச செயலகத்துக்கு 2 வேலைத் திட்டங்களுக்கு 2 லட்சத்து 26 ஆயிரம் ரூபாவும் மருதங்கேணி பிரதேச செயலகத்துக்கு ஒரு வேலைத்திட்டத்துக்கு 20 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கீடு செய்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (4,9)

## எச்சரிக்கைப் படங்கள் குறிப்பிடப்படாத உடலுக்குத் தீங்கான பொருள்களை விற்றவருக்கு ரூ.15 ஆயிரம்தண்டம்

முல்லைத்தீவு, ஜூன் 30

நச்சுப் பொருள்களின் அளவு, உடல்நல எச்சரிக்கைப் படங்கள் என்பன குறிப்பிடப்படாத பீடாப் பைக்கற்றுக்களையும் மனித பாவனைக்கு உதவாத வண்டுகள் பிடித்த தானிய வகைகளையும் விற்பனைக்கு வைத்திருந்த வர்த்தகருக்கு15 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

பொது மக்கள் வழங்கிய தகவலையடுத்து முல்லை. மாவட்ட கரைதுறைப்பற்றுப் பிரதேசத்தில் மாத்தளனிலுள்ள வர்த்தக நிலையத்தைப் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் சுரேஷ் ஆனந்தன் பரிசோதித்தார். அங்கு விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த 80 வீதம் உடல் நல எச்சரிக்கைப் படங்கள் குறிப்பிடப்படாத, நச்சுப்பொருள்களின் அளவு குறிப்பிடப்படாத பீடிப்பைக்கற்றுக் களைக் கண்டறிந்தார். மேலும் அங்கு சோதனை நடத்திய போது ஒழுங்கமைப்பை மீறி உழுந்து போன்ற தானியப் பொருள்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தமையையும் அவதானித்தார்.

இதையடுத்து, அவற்றைக் கைப்பற்றி முல்லை. மாவட்ட நீதிமன்றில் ஒப்படைத்த சுகாதாரப் பரிசோதகர் கடந்த திங்கட்கிழமை வர்த்தகருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தார்.

வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது வர்த்தகர் குற்றத்தை ஏற்றுக்கொண்டார். அதனையடுத்து அவருக்கு 15 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (4,115)

## மடு அன்னையின் ஆனித் திருவிழா ஏற்பாடுகள் பூர்த்தி

மன்னார் மடு அன்னையின் ஆடி மாத திருவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 6.15 மணிக்கு திருவிழா திருப்பலி தமிழ்,சிங்கள மொழிகளில் மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலர் மேதகு ஆயர் யோசப் கிங்சிலி சுவம் பிள்ளை ஆண்டகை தலைமையில் இடம்பெறும். திருகோணமலை மறைமாவட்ட ஆயர் நோயல் இம்மானுவல், அனுராதபுரம் மறைமாவட்ட ஆயர் நோபட் அன்றாடி ஆகியோர் இணைந்து திருவிழா திருப்பலியை கூட்டுத்திருப்பலியாக ஒப்பக்கொடுக்கவுள்ளளார் என்று மடு திருத்தளத்தின் பரிபாலகர் அருட்தந்தை எஸ்.எமிலியாணுஸ் பிள்ளை அடிகளார் தெரிவித்தார்.

அதே வேளை மடு திருவிழாவிற்காக அரச நிதியாக ஒரு மில்லியன் ரூபாய் நிதியை கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ஏ.ஆர்.குணவர்த்தன மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் மேதகு ஆயர் ஜோசப் கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகையிடம் கையளித்துள்ளார். (4,56)

## மாற்றுத் திறனாளிகளின் வாழ்வில் கூட்டரசு அக்கறையெடுக்கவில்லை

### கூறுகிறார் அதே கூட்டரசில் உள்ள கட்சியின் யாழ்ப்பாண அமைப்பாளர் கருணாகரன்

யாழ்ப்பாணம், ஜூன் 30

வடக்கில் மாற்றுத் திறனாளிகள், முள்ளந்தண்டு வடம் பாதித்தோரின் வாழ்வாதாரம், அரச வேலைவாய்ப்பு, வீடு, மலசலகூடம் மற்றும் குடி தண்ணீர்த் தேவை எவையும் தற்போதைய கூட்டு அரசால் கண்டுகொள்ளப்படவில்லை.

இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின், யாழ்ப்பாண மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கருணாகரன் தெரிவித்தார்.

வலி.மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கல்விளான் கிராமத்தில் இடம்பெற்ற கிராம மட்ட மக்களின் தேவைகள் பிரச்சினைகள் குறித்த கலந்துரையாடலிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது;

பிறப்பால் அல்லது உடல் ரீதியாகவோ உள ரீதியாகவோ ஏதேனும் இயலாமை காரணமாக தமது வாழ்க்கையின் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு இயலாதவர்களைச் சிறப்புத் தேவை உடையோர் அல்லது மாற்றுத் திறனாளிகள் என்கிறோம்.ஏனைய மாகாணங்களைவிட வடக்குக் கிழக்கில்தான் பல ஆயிரம் பேர் இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர்.

வடக்கில் அரசு பல்வேறு அமைச்சுக்களின் ஊடாக பல அபிவிருத்திகளை முன்னெடுக்கின்ற போதும் மக்களின் அடிப்படைத் தேவைகளான வீடு, மலசலகூடம், குடிதண்ணீர் மற்றும் மாற்றுத் திறனாளிகள், வயோதிபர், இயலாதவர்கள், முள்ளந்தண்டு வடம் பாதித்தோர் பிரச்சினைகள் தீரவில்லை.

ஏனைய மாகாணங்களை விட வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழும் மக்களின் பிரச்சினைகள், தேவைகள் என்பது வேறுபட்டவை. 30 வருடகாலப் போர் ஓய்வுக்கு வந்து 8 வருடங்கள் நிறைவடைந்துள்ளன.

போராலும் பிறப்பாலும் மாற்றுத் திறனாளிகள் ஆனோர், முள்ளந்தண்டு வடம் பாதித்தவர்களுக்கான அடிப்படை தேவைகள் நிறைவேற்றப்படவில்லை என்பதனையே என்னால் உணர முடிகிறது. வடமாகாணத்திற்கு உட்பட்ட சமூக சேவைகள் அமைச்சு விவரங்களை தகவல்களை பேணுவதைவிடுத்து அதற்கான செயலுரு செயற்றிட்டங்களை முன்வைக்க வேண்டும். இதேபோல கொழும்பு அரசின்கீழ் செயற்படும் சமூக சேவைகள் அமைச்சும் விவரங்களைத் தொகுத்து வைத்திருப்பதனை விட சிறப்பாக வடக்கு கிழக்குப் பாதித்தோர் விடயத்தில் கூடுதல் நிகழ்ச்சித் திட்டங்களை முன்வைத்து கூடுதல் நிதியொதுக்கி செயற்படுத்த வேண்டும். இதனை விடஎமது ஆட்சியின் தலைமை அரசுத் தலைவருக்கும் தலைமை அமைச்சருக்கும் இந்த விடயம் குறித்து விரைவில் நேரில் தெரிவிப்பேன். என்றார். (4,50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய அரசுடன் மகிந்த கூட்டிணைவதே நல்லது

## இராஜாங்க அமைச்சரின் ஆசை இது

கொழும்பு, ஜூன்30

முன்னாள் அரசதலைவர் மகிந்த ராஜபக்ச இந்தத் தேசிய அரசுடன் இணைந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும். நாட்டைத் துரிதமாக முன்னேற்றிவிடலாமே.'

இவ்வாறு ஆசைப்படுகின்றார் வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் வசந்த சேனாநாயக்க. கண்டியில் நேற்றுமுன்தினம் மகாநாயக்க தேரர்களைச் சந்தித்த பின் ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

இந்தத் தேசிய அரசில் அனைவரும் இணைந்து இந்த நாட்டின் அபிவிருத்திக்காக வேலைசெய்யவேண்டிய கட்டத்தில் நாம் இருக்கின்றோம். முன்னாள் அரச தலைவர் மகிந்தகூட எம்முடன் இணைய வேண்டும் என்றே நாம் விரும்புகிறோம்.

மைத்திரி அணி, ரணில் அணி மற்றும் மகிந்த அணி என மூன்று அணிகளும் ஒன்றுசேர்ந்தால் அதைவிட ஒரு நல்ல சந்தர்ப்பம் இந்த நாட்டுக்குக் கிடைக்காது.

நாட்டை முன்னேற்றுவதற்கு அதைவிட ஒரு நல்ல வாய்ப்புக் கிடைக்காது. ஆனால் அது நடக்குமா என்பதுதான் சந்தேகம்.

குறுகிய அரசியல் இலாபங்களை ஒதுக்கி வைத்துவிட்டு நாம் ஒன்றிணைவதுதான் நாட்டின் எதிர்காலத்துக்கு நல்லது. அதற்கான அழைப்பை நாம் மகிந்த ராஜபக்சவுக்கு விடுக்கின்றேன்.

ஒருவரை ஏசிக் கொண்டுவிமர்ச்சித்துக்கொண்டு அரசியல் செய்வதால் இந்த நாட்டுக்கு எந்த நன்மையையும் கிடைக்காது.

நான்தான் ஆட்சி செய்ய வேண்டும் என்ற மனோநிலையை ஒதுக்கி வைத்துவிட்டு நாம் ஆட்சி செய்வோம் என்ற நிலைப்பாட்டுக்கு நாம் எல்லோரும் வர வேண்டும். அவ்வாறு இல்லாது போலியாக நாம் தேசபக்திபற்றிப் பேசுவதில் அர்த்தமில்லை. அது பொய்யான நாட்டுப் பற்றாகும்.

எம்மைவிட பின்நின்ற எத்தனையோ நாடுகள் முன்னேறிவிட்டன. ஆனால் நாம் பின்னோக்கியேதான் சென்று கொண்டு இருக்கின்றோம். எமது பிழையான அரசியலே இதற்குக் காரணம். இந்த அரசியல் கலாசாரம் மாற வேண்டும். அப்போதுதான் நாமும் ஏனைய நாடுகளைப்போல் முன்னுக்கு வரமுடியும். என்றார்.

(த-ய-3)

# அயலுறவுக் கொள்கை குறித்து ஆராய மாநாடு

கொழும்பு, ஜூன்30

இலங்கையின் அயலுறவுக் கொள்கை தொடர்பான மாநாடு ஒன்று இன்றும், நாளையும் கொழும்பு லக்ஸ்மன் கதிர்காமர் நிறுவகத்தில் நடைபெறவுள்ளது.

மாநாட்டுக்கு அயலுறவு அமைச்சர் ரவி கருணாநாயக்க தலைமை தாங்குவார். இதன்போது இலங்கையின் அயலுறவுக் கொள்கை அடிப்படையிலான தற்போதைய வாய்ப்புகளைப் பெற்றுக் கொள்வது குறித்து ஆராயப் படவுள்ளது.

தேசிய பாதுகாப்பு, மறுசீரமைப்பு நடவடிக்கைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்தும் கவனம் செலுத்தப்படவுள்ளது.

சீனா, ஆஸ்ரேலியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் வளவாளர்கள் இந்த மாநாட்டில் உரையாற்றவுள்ளனர்.

ஐக்கிய நாடுகளின் செயற்பாட்டாளர் ராதிகா குமாரசுவாமியும் மாநாட்டில் உரையாற்றவுள்ளார். (த-ய)

## பணியாளர்கள் தேவை

யாழ்நகர் மத்தியில் உள்ள
வைத்திய ஸ்தாபனத்திற்கு
பின்வரும் தகைமைக்கு பணியாளர் தேவை

- வரவேற்பாளர் (பெண்) (A/L Qualified)
- உதவி கணக்காளர் - (Accountant - Assistant) (முன்னைய அனுபவம் தேவை)
- இரவு காவலாளி (Night Security) (ஆண்)
- தாதிய உதவியாளர்/தாதிய பயிற்சி பெற விரும்புவோர்

**நேர்முகதேர்வு - 02.07.2017 (ஞாயிறு)**
**காலை - 9 மணி**

**இடம் : சன்றைஸ் மெடிகிளினிக்
388, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.**

## வேல் முருகன் ஜோதிட நிலையம்

**உலக பிரசித்தி பெற்ற ஜோதிடர்**
**சாய் கிருஷ்ணதாஸ் குருக்கள்**

இந்தியாவின் புகழ்பெற்ற மாந்திரீக ஜோதிடர். இவர் தீர்த்து வைக்காத பிரச்சினைகளே இல்லை. ஜாதகம், கைரேகை பார்த்துப்பலன் சொல்லுவார். கணவன், மனைவி சண்டை பிரிவு, காதல் திருமண தடை, இதுவரை திருமணமே ஆகாதவர்கள் வேலை, தொழில், உத்தியோகம் இப்படி பல பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பார். கண்திருஸ்டி, செய்வினை கோளாறு (Black Magoc) போன்றவற்றுக்கும் தீர்வு கிடைக்கும்.

**077 819 3119, 077 821 4052**
**இல.40, தல் அரன, யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.**

## பழமரக் கன்றுகள் விற்பனைக்கு

மாங்கன்று (பல இன) தென்னங்கன்று நல்ல இனம், செவிளை தென்னை, தேசிக கன்று (விதை, ஒட்டு, பதி), மாதுளங்கன்று (றூட்டெட் விதை - திமாலி, இந்தியன்), கொய்யாக்கன்று 1Kg, கொய்யா (நல்ல இனம்), பலா (விதை, ஒட்டு), முருங்கை P.K.M. றெட்ரேடி பப்பாக்கன்று, அம்பலர்லங்கன்று, கமுகு, கஜு (ஒட்டு, விதை), அகத்தி, முழு நெல்லி, அரைநெல்லி, விலிம்பி, ஒட்டுத் தோடை, ஈரப்பலா (வேர்), வெற்றிலைக்கன்று (கொழும்பு), லாவுல், பசன் புறுட்கன்று, அகத்திக்கன்று மற்றும் தேக்கு, சவுக்கு சமண்டலை, மலைவேம்பு, கருங்காலி, மருது, பாலை, முதிரை, நாவல், இலுப்பை, வில்வம், சித்திரவேம்பு, ஊர்வேம்பு மற்றும் பூஞ்சாடி, பல இன பூங்கன்றுகளும் (குறோட்டன் வகை) விற்பனைக்குண்டு.

**நியூலங்கா பாம்,**
பலாலி வீதி, ஊரெழு மேற்கு,
கணேசா பாடசாலைக்கு அருகில். **077 612 9343**

கிளை
K.K.S.வீதி, இணுவில்.

## வேலைக்கு ஆள் தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள வாகன
சுத்திகரிப்பு நிலையத்துக்கு
முன்னனுபவமுள்ள
வேலையாள்கள் தேவை.

**077 729 0300**

## தேவை

இணுவிலில் பிரபல்யமான
புடைவைக் கடை ஒன்றுக்கு
வேலையாள்கள் தேவை.
(ஆண்கள் மட்டும்) (CS 1507) (14)

**021 300 1155/ 077 470 5401**

## யாழ் வணிகர் கழகம்
## வருடாந்த பொதுக் கூட்டம்

2017 ஆம் வருடத்திற்கான வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் நடைபெறவுள்ளது. பிரேரணைகள் 10.07.2017 ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

**திகதி : 15.07.2017 சனிக்கிழமை**
**நேரம் : காலை 9.30 மணி**
**இடம்: யாழ். வணிகர் கழகப் பணிமனை
165, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.**

உப செயலாளர்
யாழ் வணிகர் கழகம்


## வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணம் மற்றும் பருத்தித்துறையில் இயங்கும் பொதிகள் சேவை நிறுவனத்துக்கு வேலையாள்கள் தேவை. ஆண்கள் மட்டும்.

**071 766 7715**

## காயத்திரி
திருமாங்கல்ய சேவை
GAYATHRI MATRIMONY

ஞான வைரவர் கோயிலடி
உரும்பிராய் தெற்கு
T.P.: 076 941 6424 / 021 223 2222
உரும்பிராய்
E.mail. gayathri.matrimony.srilanka@gmail.com
F.B-Gayathri Matrimony.Srilanka.
Skype-Gayathri Matrimony.Srilanka










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேரர்களுக்குச் சொகுசு வாகனம் தானம் வழங்கினாராம் அமைச்சர்

அமைச்சர் ஒருவரினால் தேரர்களுக்குத் தானமாக வழங்கப்பட்ட வாகனங்களின் விவரங்களை கொழும்பு ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ளது. கடந்த ஏப்ரல் மாதம் மல்வத்து மற்றும் அஸ்கிரிய தேரர்களுக்கு இந்த அமைச்சரினால் அதிநவீன வாகனங்கள் வழங்கப்பட்டதாகத் தகவல் வெளியாகியிருந்தது. அதனை உறுதி செய்யும் வகையில் அந்த வாகனங்களின் இலக்கங்கள் மற்றும் பெறுமதி தொடர்பான தகவல்களைக் குறித்த ஊடகம் வெளியிட்டுள்ளது. அதற்கமைய குறித்த அமைச்சரினால் 4 அதிசொகுசு வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது. (த-ய)

# எல்லை நிர்ணய முரண்பாடு தொடர்பாக கலந்துரையாடல்

கொழும்பு, ஜூன் 30

உள்ளூராட்சி சபைகளுக்கான எல்லை நிர்ணயம் தொடர்பில் ஏற்பட்டிருக்கும் சட்ட முரண்பாடுகள் பற்றி விளக்கமளிப்பதற்காக பொதுஜன பெரமுன கட்சியின் உறுப்பினர்கள் குழுவொன்று முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்சவின் தலைமையில் செவ்வாய்க்கிழமை தேர்தல்கள் ஆணையகத்துக்குச் சென்று அதன் தலைவருடன் பேச்சு நடத்தியது.

பொதுஜன பெரமுன கட்சியின் ஆயுட்கால உறுப்பினர்கள் கலந்துகொண்ட இந்தக் குழுவுக்குத் தலைமை தாங்கிய பஸில் ராஜபக்ச, எல்லை நிர்ணயத்தால் ஏற்படிருக்கும் பல்வேறு சட்ட முரண்பாடுகளைத் தேர்தல்கள் ஆணையகத் தலைவருக்கு எடுத்துக்காட்டினார். உள்ளூராட்சித் தேர்தலுக்கு முன்னர் இந்தச் சட்டமுரண்பாடுகள் தீர்க்கப்படவேண்டுமென அவர் வலியுறுத்தினார். இந்தச் சட்ட முரண்பாடுகள் தொடர்பில் விரைவில் அரசியல் கட்சிகளுடன் கலந்துரையாடி உரிய தீர்வொன்றைப் பெற்றுத்தருவதாக தேர்தல்கள் ஆணையகத் தலைவர் மகிந்த தேசப்பிரிய பஸில் ராஜபக்சவிடம் உறுதியளித்தார். (தய)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் செல்வரத்தினம் பிரதாப்
(சங்கர்)




தோற்றம் 28.11.1994 — மறைவு 11.07.2016

ஓராண்டு சென்றதடா மாறாத உன் பூமுகம்
சிந்தை மகிழ தென்றலாய் எம் வாழ்வில்
வந்துதித்த செல்வனே!
என்றும் எமை வழிநடத்திச் செல்லும் எங்கள் குலவிளக்கே!
ஒவ்வொரு நொடியிலும் எம்மோடு வாழும்.
உன் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்

67/5, நந்தாவில் லேன்,
கொக்குவில் கிழக்கு.

குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவு



மணியம்
கேதீஸ்வரநாதன்

தோற்றம் 15 . 05 . 1962 — மறைவு 11 . 07 . 2016

வாழ்க்கை எனும் பாதையிலே
எம்மோடு பயணித்த எமது அப்பாவே!
உங்கள் பதுமையான பேச்சும் பதுமை நடையும்
நொடியினில் காணாது தவிக்கின்றோம்
தொலைபேசியில் உங்கள் செய்தி கேட்ட கணம் முதல்
உங்கள் வாய்மொழி நின்றாலும் மூடிய விழி மலர்ந்திட நின்றாலும்
எங்கள் மூச்சில் கலந்திருப்பீர்கள் அப்பா!
என்றும் எங்கள் பேச்சில் நிறைந்திருப்பீர்கள் அப்பா!
எங்களை விட்டு எங்கே சென்றீர்கள் அப்பா!'
வாழ்க்கையில் மீண்டும் குழந்தையாய் எங்களிடமே
வருவீர்கள் தானே அப்பா!
இன்றுடன் ஓராண்டு ஆண்டு முடிந்தாலும் மட்டும்
அல்ல மீண்டும் ஆயிரம்
ஆண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவுகள்
எம்மை விட்டு மறையாது அப்பா!
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

குமாரசாமி வீதி,
புத்தூர் கிழக்கு,
புத்தூர்.

என்றும் உங்கள் நினைவுடன்
வாழும் உங்கள்
குடும்பத்தினர்

## 31 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவில்லலும்

பிறப்பு 12 . 03 . 1927 — இறப்பு 31 . 05 . 2017



### திருமதி மகேஸ்வரி சங்கரப்பிள்ளை

எமது இல்லத்து இதயத் தெய்வம் சிவபதமடைந்த செய்தியறிந்து அஞ்சலி செலுத்தியும் வெளிநாடுகளிலிருந்தும். உள்ளூரிலிருந்தும் தொலைபேசிமூலம் இரங்கல் தெரிவித்தும் மற்றும் மலர்வளையங்கள் அனுப்பியும் அனுதாபங்களைத் தெரிவித்தும் மற்றும் பல்வேறு வழிகளில் உதவிகள் புரிந்தும் உறுதுணையாய் நின்றும் எமது துயரில் பங்கேற்ற உற்றார். உறவினர்கள். நண்பர்கள் அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இன்று (30.06.2017) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

இல.158, பொற்பதி வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
021 568 0226

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

தோற்றம் 30 . 03 . 1949 — மறைவு 16 . 05 . 2017



அமரர் செல்வி
### தேவிசரஸ்வதி சுப்பிரமணியம் (ஆசிரியர்)

அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனை நிகழ்வு நாளை (01.07.2017) சனிக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

சிறுப்பிட்டி மத்தி, சிறுப்பிட்டி.
0212058874 ,
076 765 6483.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலைவாய்ப்பு ஒதுக்கீட்டை அதிகரிக்கிறது தென்கொரியா

## மைத்திரியிடம் அந்த நாட்டு பிரதிநிதி உறுதி

கொழும்பு, ஜூன்30

இலங்கைத் தொழிலாளர்களுக்கான வேலைவாய்ப்பு ஒதுக்கீட்டை அதிகரிப்பது குறித்து தனது நாடு கவனத்தில் கொள்ளுமென தென் கொரியாவின் மனிதவள அபிவிருத்திச் சேவை தலைவர் பேராசிரியர் பார்க் யங் பம், அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

அரச தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பின் போது, விவசாயத்துறையில் உள்ள இலங்கைத் தொழிலாளர்களுக்கான வேலைவாய்ப்பு ஒதுக்கீட்டை அதிகரிப்பதற்கான சாத்தியப்பாடு குறித்து அரசதலைவர் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மீன்பிடி மற்றும் விவசாயத் துறையில் உள்ள ஊழியர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்கியமைக்காக தென் கொரிய அரசுக்கு அரசதலைவர் நன்றி தெரிவித்தார்.

அத்துடன், கொரியாவில் 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இலங்கையர்கள் தொழில் செய்கின்றனர் என வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் தலதா அத்துகோரள தெரிவித்தார். இலங்கைக்கான வருடாந்த வேலைவாய்ப்பு கோட்டா தற்போது 6,000 எனத் தெரிவித்த அவர், கொரியாவுக்கு தொழிலாளர்களை அனுப்பும் 16 நாடுகளில் இலங்கை தற்போது 5ஆவது இடத்தில் உள்ளதாகவும் தெரிவித்தார்.

இலங்கை தொழிலாளர்களின் செயலாற்றுகை மற்றும் வினைத்திறன் குறித்து கொரிய தொழில் வழங்குநர்கள் திருப்தியடைந்துள்ளர் என தெரிவித்த பேராசிரியர் பார்க், விவசாயத்துறையில் இலங்கையர்களுக்கான வேலைவாய்ப்பு ஒதுக்கீட்டை அதிகரிப்பதற்கான சாத்தியப்பாடுகள் குறித்து ஆராயவுள்ளதாகத் தெரிவித்தார்.

அண்மையில் கொரியாவில் கட்டடமொன்றில் ஏற்பட்ட தீயின்போது தனது உயிரைப் பணயம் வைத்து

அமைச்சர் தலதா அத்துகோரள, கொரிய குடியரசின் தூதுவர் வொன் சாம் சேன்ங் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புப்பணியகத்தின்தலைவர் ராஜ் ஒபேசேகர ஆகியோரும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர். (கு-ய)

# லொத்தர் விற்பனை முகவர்கள் விரைவில் ரவியைச் சந்திப்பர்

கொழும்பு, ஜூன்30

கோரிக்கைகளுக்குத் தீர்வு காண்பதற்காக தேசிய லொத்தர் சபை மற்றும் அபிவிருத்தி லொத்தர் சபையின் விற்பனை முகவர்கள் முன்னாள் நிதியமைச்சரும் தற்போதைய அயலுறவு அலுவல்கள் அமைச்சருமான ரவி கருணா நாயக்கவைச் சந்தித்துக் கலந்துரையாடத் தீர்மா னித்துள்ளனர்.

நாளாந்தம் விற்பனையாகும் லொத்தர் ரிக்கெட்டுகளின் வகைகளை ஒன்பதிலிருந்து ஐந்தாகக் குறைத்தல், விற்பனை முகவர்களுக்கு வழங்கப்படும் தரகுப் பணத்தை அதிகரித்தல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் தொடர்பில் இவர்கள் அமைச்சருடன் கலந்துரையாடவுள்ளனர். இந்தக் கலந்துரையாடலுக்கு நிதியமைச்சுச் செயலாளர், இரு லொத்தர் சபைகளின் தலைவர்கள் உட்பட சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் அழைக்கப்பட்டுள்ளனர்.

'இந்தக் கலந்துரையாடலில் சுமுகமான முடிவு கிடைக்காவிட்டால் தங்களது சங்கம் மேலதிக நடவடிக்கை பற்றித் தீர்மானிக்கும்' என அச்சங்கத்தின் தலைவர் கிரிஷாந்த மாரம்புகே கூறினார். (கு-ய)

# இலங்கையர்களிடம் முகநூல் பண மோசடி

## 25 வெளிநாட்டவர்கள் கைது

கொழும்பு, ஜூன் 30

முகநூலைப் பயன்படுத்தி இலங்கையர்களின் பணத்தை மோசடியாகப் பெற்றுக் கொண்ட 25 வெளிநாட்டவர்கள் இரகசியப் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

50 மில்லியன் ரூபாவாவை இவர்கள் மோசடி செய்திருப்பதாக தெரியவந்துள்ளது.

இது குறித்து பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் ருவன் குணசேகர தெரிவிக்கையில்,

இந்தச் சம்பவங்கள் தொடர்பாக 15 முறைப்பாடுகள் இரகசிய பொலிஸாருக்குக் கிடைத்திருந்தன. இதன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின்போது நாட்டில் சுற்றுலா மற்றும் கல்வி நடவடிக்கைகளுக்காக வருகைதரும் வெளிநாட்டவர்கள் சமூக இணையத்தளமான முகநூலுடன் தொடர்புபட்டு நண்பர்களை ஏற்படுத்தியுள்ளனர்.

பின்னர், அவர்களுக்குப் பல்வேறு பரிசில்களை அனுப்புவதாக அதில் தெரிவித்து தகவல்களைப் பரிமாறியுள்ளனர்.

இந்தப் பரிசில்களைப் பெற்றுக் கொள்வதற்காக தபால், சுங்கம், காப்புறுதி ஆகிய கட்டணங்களைச் செலுத்துவதற்காகப் பணம் தேவை என்று தெரிவித்து பணத்தைப் பெற்றுக் கொண்டிருக்கின்றனர் எனத் தெரியவந்துள்ளது - என்றார். (கு-ய)

# திருமலை வைத்தியசாலையில் புதிதாக அவசர சிகிச்சைப் பிரிவு

திருகோணமலை மாவட்ட வைத்தியசாலைக்காக விபத்து மற்றும் அவசர சிகிச்சைப்பிரிவொன்றை அமைப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

அமைச்சரவையினால் நியமிக்கப்பட்டுள்ள நிலையான கொள்ளல் குழுவின் பரிந்துரை மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவின் பரிந்துரை ஆகியவற்றுக்கு அமைய அமைச்சரவை இதனை அங்கீகரித்துள்ளது. (ய)


## மரண அறிவித்தல்

### தர்மலிங்கம் சந்திரகாந்தன்



அளவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் சந்திரகாந்தன் லண்டனில் 22.06.2017 அன்று காலமானார்..

அன்னார் சறோயாதேவியின் அன்புக் கணவரும், சங்கரனின் அன்புத் தந்தையும், ஸ்ரீகாந்தன், வசந்தரூபலா, பவளகாந்தன் ஆகியோரின் அன்பு சகோதரரும்,கமலினி, விசயரத்தினம் ஆகியோரின் மைத்துனரும், கம்சினி - லோகீசன், க.திலீபன் ஆகியோரின் அன்பு மாமனாரும், வைஷ்ணவியின் சித்தப்பாவும், பாலஸ்கந்தன், வானதி, பாமினி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:- த.பவளகாந்தன் (சகோதரன்)

T.P.077 186 4602, 077 332 9482

## மரண அறிவித்தல்

### Rev பொன்னையா மில்றோய் தேவசேனன்



பிறப்பு 12.05.1969 இறப்பு 29.06.2017

இருபாலையைப் பிறப்பிடமாகவும், வண்ணார்பண்ணை, ஒட்டுமடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மெதடிஸ்த திருச்சபையின் போதகர் Rev.பொன்னையா மில்றோய் தேவசேனன் நேற்று (29.06.2017) வியாழக்கிழமை கர்த்தருக்குள் நித்திரை யடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தேவராஜா பொன்னையா மற்றும் மிரியம் பொன்னையா தம்பதிகளின் அன்பு மகனும், ஜெபரட்ணம் றிச்சேட்ஸ் - வனஜா தம்பதிகளின் மருமகனும், தர்ஷினியின் (ஆசிரியை - சுண்டுக்குழி மகளிர் கல்லூரி) அன்புக் கணவரும், ஆனின் பாசமிகு தந்தையும், ஜீவி, மகிந்தன், மித்திரன், நிதி ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இல.33, அராலி வீதி, ஓட்டுமடத்திலுள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டு நாளை (01.07.2017) சனிக்கிழமை பிற்பகல் ஒருமணிக்கு பரி.பேதுரு மெதடிஸ்த ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு அடக்க ஆராதனை பிற்பகல் 3 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கொட்டடி மெதடிஸ்த சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.33, அராலி வீதி,
ஓட்டுமடம்.

தகவல்:- குடும்பத்தினர்.
021 222 7443

## மரண அறிவித்தல்கள்



பிறப்பு 14 . 09 . 1938

இறப்பு 27 . 06 . 2017

### திருமதி லீலாவதி இராசரத்தினம்

டச்சுறோட் மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் கற்கேணியடி நவாலிவடக்கைவசிப்பிடமாகவும்கொண்ட திருமதிலீலாவதி இராசரத்தினம்கடந்த (27.06.2017) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்றவர்களான முருகேசு சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற இராசரத்தினம் (வானவெடி உற்பத்தியாளரும் விநியோகஸ்தரும்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சுப்பிரமணியம், இலட்சுமி, தங்கம்மா, செல்லம்மா, மயில்வாகனம், நாகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் வன்னியசேகரம், ஜெயவதனி, சந்திர வதனி(இத்தாலி), புஸ்பவதனி(சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் கலாவாணி, பாஸ்கரன் காலஞ்சென்ற மகாலிங்கம் மற்றும் விஜயசிங்கம் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் காலஞ்சென்ற சதுஜன் மற்றும் அனுஷன், அபர்ணன், ஜீவகன் (ஜேர்மனி), சுஜீபா, திலக் ஷி, மதனா (லண்டன்), மயூரா(இத்தாலி), விதுர்சியா(சுவிஸ்), புவிசியா (சுவிஸ்) ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.06.2017) வெள்ளிக்கிழமை மு.ப 10.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆரியம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:- குடும்பத்தினர்.

இ.வன்னியசேகரம் - 077 912 2740



### திருமதி நகுலேஸ்வரி(சின்னம்மா) முத்தையா

வேலணை கிழக்கு 4 ஆம் வட்டாரத்தைச்சேர்ந்த திருமதி நகுலேஸ்வரி முத்தையா 29.06.2017 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் முத்தையாவின் அன்பு துணைவியாரும் காலஞ்சென்றவர்களான நடராசா - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கந்தையா - சிதம்பரம் தம்பதியரின் அன்பு மருமகளும் தவச்செல்வியின் (செல்வி) அன்பு தாயாரும் சிவநேசனின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, மயில்வாகனம்,சிவலிங்கம், புவனேஸ்வரி மற்றும் இராசமணி முத்துலிங்கம், சுந்தரலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும்காலஞ்சென்றவர்களான குமாரசாமி, நாகராசா மற்றும் கந்தசாமி, கமலமலர், சந்திராதேவி ஆகியோரின் மைத்துனியும் விதுஷனா, விதுஷிகா, யதுஷன், விதுஷன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.06.2017) வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

4 ஆம் வட்டாரம்,
வேலணை.

தகவல்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய அரசமைப்பிலும் பௌத்தமே முதன்மை

## அச்சப்படவேண்டாம் என்கிறார் அத்துரலிய ரத்ன தேரர்



கொழும்பு, ஜூன் 30
புதிய அரசமைப்பால் ஒருபோதும் பௌத்த மதத்துக்கு இருக்கின்ற முதன்மை இடம் இல்லாமல் போகாது. அதற்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது என்று நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்தின தேரர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
பௌத்த மதத்துக்கு இருக்கின்ற முதன்மை இடம் புதிய அரசமைப்பில் நீக்கப்பட வேண்டும் என்றொரு யோசனையை இந்த அரசு பெற்றுள்ளமை உண்மை. அதேபோல் அதை வைத்திருக்க வேண்டும் என்றும் யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நாட்டின் வரலாற்றில் உள்ள பெறுமதி இவர்களுக்கு இன்னும் விளங்கவில்லை. சிலருக்குப் பௌத்த மதம் ஒரு சந்தையாக மாறியுள்ளது. இந்தியாவில் பௌத்த மதத்துக்குச் சேவை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இலங்கை வந்த மோடி இதுதொடர்பில் பேசினார். பௌத்த விகாரைகளை மூடிய சீன நாடு இன்று அதை வளர்க்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. ஆனால், இலங்கையில் பௌத்த மதத்தின் முக்கியத்துவம் உணரப்படவில்லை. பௌத்த மதம் இருந்தாலும் ஒன்று; இல்லாவிட்டாலும் ஒன்று என நினைக்கின்ற சிலர் உள்ளனர். அவர்கள் இதைப் பாதுகாப்பதற்கு முற்படமாட்டார்கள்.

நான் அச்சமின்றி ச் சொல்கிறேன் யார் என்ன நடவடிக்கை எடுத்தாலும் பௌத்த மதத்தின் முதன்மை இடத்தை நீக்கும் அரசமைப்பு நாடாளுமன்றுக்குக் கொண்டுவரப்படமாட்டாது. நாங்கள் நாளை மரணித்தாலும் இருக்கின்ற அடுத்தவர்கள் பௌத்த மதத்தைப் பாதுகாப்பர். பௌத்த மதத்துக்கு இருக்கின்ற முதன்மை இடத்தைப் பாதுகாப்பர் என்ற உத்தரவாதத்தை நான் இந்த நாட்டின் பௌத்த மக்களுக்கு வழங்குகின்றேன் - என்றார். (த-ய-2)

## விபத்துகளால் 6 மாதங்களுக்குள் ஆயிரத்து 261 பேர் பரிதாபச் சாவு

கொழும்பு, ஜூன் 30
வாகன விபத்துக்களால் இந்த வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில் ஆயிரத்து 261 பேர் உயிரிழந்துள்ளனர் என்று வீதிப் பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை தெரிவித்துள்ளது.
இதில் முச்சக்கரவண்டி விபத்துக்களாலேயே அதிகளவானோர் உயிரிழந்துள்ளனர் என்றும், அதிக வேகம் மற்றும் போதையில் வாகனத்தைச் செலுத்தியமையே விபத்துக்கள் சம்பவித்தமைக்கான முதன்மைக் காரணம் என்றும் வீதிப் பாதுகாப்புத் தொடர்பான பாதுகாப்பு சபையின் தலைவர் மருத்துவர் சிசிர கொதாகொட கூறியுள்ளார்.
கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருடத்தில் விபத்துக்களின் மூலம் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை சற்றுக் குறைவடைந்துள்ளது.
அதேவேளை, புதிதாக முச்சக்கரவண்டி ஓட்டுநர் உரிமம் பெறுபவர்களுக்கு மூன்று நாள் செயலமர்வை அடுத்த மாதம் முதல் வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (த-ய-2)

## மகிந்தானந்த எம்.பியின் கடவுச்சீட்டு விடுவிப்பு

கொழும்பு, ஜூன் 30
கொழும்பு மேல்நீதிமன்றத்தால் தடுத்துவைக்கப்பட்டிருந்த முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சரும் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மகிந்தானந்த அளுத்கமகேயின் கடவுச்சீட்டு அவருக்கு மீண்டும் கையளிக்கப்பட்டது.
இலங்கை சுதந்திரத் தொழிலாளர் காங்கிரஸின் 39லட்சம் ரூபாவை மோசடி செய்தார் என்ற குற்றச்சாட்டில் இவருக்கு எதிராகச் சட்டமா அதிபரால் வழக்கு தொடரப்பட்ட பின் இவரது கடவுச்சீட்டு கொழும்பு மேல் நீதிமன்றத்துக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது.
இந்த வழக்கு முன்கொணர்வு மனுவொன்றின் மூலம் செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, மகிந்தானந்த அளுத்கமகே அமெரிக்காவிலுள்ள தனது பிள்ளைகளைப் பார்க்கச் செல்வதற்காக அவரது கடவுச்சீட்டை விடுவிக்கவேண்டுமென அவரது சட்டத்தரணிகள் வேண்டுகோள் விடுத்தனர்.
இதற்குச் சட்டமா அதிபரின் பிரதிநிதி ஆட்சேபம் தெரிவிக்காததால் அவரது கடவுச்சீட்டை விடுவிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டதுடன், வழக்கின் அடுத்த விசாரணையை ஜூலை 25ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது. (த-ய)

# 2016 இல் 118 கைதிகள் தப்பியோட்டம்

## 77 பேர் மீண்டும் கைது

கொழும்பு, ஜூன்30
2016 ஆம் ஆண்டு நாட்டின் பல்வேறு சிறைகளிலிருந்தும் மொத்தமாக 118 கைதிகள் தப்பிச் சென்றிருக்கின்றனர் எனச் சிறைச்சாலைகள் திணைக்களத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
வெலிக்கடையிலிருந்து 27 பேரும், வெளியிடங்களில் சிரமதானம் மற்றும் ஏனைய வேலைகளுக்கு அமர்த்தப்பட்டிருந்தபோது 43 பேரும், சிறைச்சாலைச் சுவர்களுக்கு மேலால் ஏறிக் குதித்து 13 பேரும், வைத்தியசாலைகளிலிருந்து இரண்டுபேரும், நீதிமன்றங்களிலிருந்து இருவரும் மற்றும் முகாம்களில் பணியாற்றியபோது 31 பேரும் தப்பியுள்ளனர்.
தப்பியோடியவர்களில் 77 பேர் மீண்டும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
இலங்கை முழுவதிலும் உள்ள சிறைகளில் மொத்தமாக 1,18,935 கைதிகள் அடைக்கப்பட்டுள்ளனர்.
அத்துடன், 2016 இல் சிறைச்சாலைகளுக்குள் தடைசெய்யப்பட்டுள்ள ஹெரோயின், கொக்கெய்ன் போன்ற போதைவஸ்துகளும் ஏனைய பொருட்களும் சிறை யதிகாரிகள் மேற்கொண்ட 117 சோதனைகளின்போது பிடிபட்ட தாக அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-ய)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

சேவை நயப்பும் மணிவிழா வாழ்த்தும்



பிரதி அதிபர்
திருவாளர்
கனகரட்ணம்
மகேந்திரராஜா

அகவை அறுபதின் நிறைவில் ஆசிரியப் பணியிலிருந்து ஓய்வுபெறும் கணித பாட ஆசிரியரும், பிரதி அதிபருமான திருவாளர் கனகரட்ணம் மகேந்திரராஜா அவர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

Best Wishes

சேவை விவரம்

| பாடசாலை | பதவி | சேவைக்காலம் |
|---|---|---|
| மன்/உயிர்த்தராசன்குளம் றோ.க.த கலவன் பாடசாலை | ஆசிரியர் | 22.08.1979 - 30.01.1983 |
| பலாலி ஆசிரிய கலாசாலை | ஆசிரியர் | 31.01.1983 - 31.12.1984 |
| நு/நோவுட் த.ம.வி | ஆசிரியர் | 01.01.1985 - 14.05.1989 |
| மன்/புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி | ஆசிரியர் | 15.05.1989 - 30.04.1991 |
| யா/உயரப்புலம் குணபாலன் வித்தியாலயம் | ஆசிரியர் | 01.05.1991 - 31.03.2009 |
| யா/சங்கானை சிவப்பிரகாச ம.வி | பிரதி அதிபர் | 01.04.2009 - 30.06.2017 |

ஆசிரிய சேவையில் முப்பத்தெட்டு (38) வருடங்கள் அர்ப்பணிப்பு மிக்க ஆசிரியப்பணி ஆற்றி அதில் எமது பாடசாலையில் 8 வருடங்கள் பணியாற்றி இன்று தனது 60 ஆவது அகவையில் ஓய்வு பெறும் பிரதி அதிபர் அவரது ஓய்வுக் காலம் சிறக்க மனம் மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

Best Wishes

ஆசிரியர் ஊழியர் நலன்புரி கழகம்
யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்

பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு. சூ.திலகதீபன்
அதிபர்
யா/வறுத்தலைவிளான்
அ.மி.த.க.பாடசாலை



திரு. ந.ரவிவண்ணன்
அதிபர்
யா/சங்கானை சிவப்பிரகாச
இந்து ஆரம்ப பாடசாலை



Best Wishes

திரு. க.கார்த்திகேயன்
அதிபர்
யா/சண்டிலிப்பாய் வடக்கு
அரசினர் தமிழ் கலவன்
பாடசாலை

எமது பாடசாலையில் ஆசிரியராக கடமையாற்றி அதிபராக பதவி உயர்வு பெற்று செல்லும் சக ஆசிரியர்களை வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் ஊழியர் நலன்புரி சங்கம்
யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குப்பைப் பிரச்சினைக்கு 3 மாதத்தில் தீர்வு வரும்

கொழும்பு, ஜூன் 30
நாட்டில் தற்போது எழுந்துள்ள குப்பைப் பிரச்சினையை மூன்று மாதக் காலப் பகுதிக்குள் தீர்த்து வைப்பதற்கான வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படும் என்று மேல்மாகாண முதலமைச்சர் இசுறு தேவப்பிரிய தெரிவித்தார்.

மேல்மாகாண முதலமைச்சர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் தற்போது எழுந்துள்ள குப்பைப் பிரச்சினை மூன்று மாதக் காலப்பகுதிக்குள் தீர்த்துவைப்பதற்கான வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படும். இதற்கு மக்களும் தங்களின் பொறுப்புணர்வுடனான ஒத்துழைப்பை அரசுக்கு வழங்க வேண்டும்

வீதிகளில் முறையற்ற விதத்தில் குப்பைகளை வீசுபவர்களுக்கு எதிராகவும், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களால் இனங்காணப்பட்ட பகுதிகளில் குப்பைகளைக் கொட்டும்போது அதற்கு இடையூறு ஏற்படுத்துபவர்களுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

மீதொட்டமுல்லை குப்பை மேடு இடருக்குப் பின்னர் நாட்டில் குப்பைப் பிரச்சினை பூதாகரமாக உருவெடுத்துள்ளது. கொழும்பு உள்ளிட்ட பிரதான நகரங்களில் வீதியில் இரு மருங்கிலும் குப்பைகள் குவிக்கப்படுகின்றன.

மேலும் நகரங்களில் சேகரிக்கப்படும் குப்பைகளை மீழ்சுழற்சி செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கு மக்களும் தங்களது பொறுப்புணர்வுடன் கூடிய ஒத்துழைப்பை அரசுக்கு வழங்கவேண்டும். வீடுகளில் சேகரிக்கப்படும் குப்பைகளை வகைப்பிரித்து மாநகரசபை குப்பை வாகனங்களுக்கு கையளிக்கவேண்டும். இதனை மக்கள் கடைப்பிடித்தால் விரைவில் இந்தப் பிரச்சினை குறைவடையும் - என்றார். (த-ய-2)



## கூட்டுப் படைத் தளபதிக்கு அணிவகுப்பு மரியாதை

கொழும்பு, ஜூன் 30
நான்கு நட்சத்திர ஜெனரவாகப் பதவி உயர்த்தப்பட்டு கூட்டுப்படைத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ள லெப். ஜெனரல் கிரிஷாந்த டி சில்வாவுக்குப் பாதுகாப்பு அமைச்சு மைதானத்தில் நேற்று முன்தினம் சிறப்பு இராணுவ அணிவகுப்பு மரியாதையளிக்கப்பட்டது.

இராணுவத்தின் 21ஆவது தளபதியாக, 2015 பெப்ரவரி 22ஆம் திகதி தொடக்கம் பதவியில் இருந்துவந்த நிலையிலேயே இந்தப் பதவிஉயர்வு வழங்கப்பட்டுள்ளது.

கூட்டுப் படைகளின் தளபதியாகப் பணியாற்றிய எயார் மாரஷல் கோலித குணதிலக கடந்த ஜூன் 15ஆம் திகதியுடன் ஓய்வுபெற்றார். இதையடுத்தே இராணுவத் தளபதியாக இருந்தவர் பதவி உயர்வுடன் கூட்டுப்படைத்தளபதியாக பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் அரச தலைவரால் நியமிக்கப்பட்டுள்ளார். (த)

# தமிழரின் பிரச்சினையை போலியாக அணுகுகிறது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

## நாமல் ராஜபக்ச குற்றச்சாட்டு



கொழும்பு, ஜூன் 30
மகிந்தவுக்கு நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப்பலம் இருந்தபோதுசிங்கள மக்களின் பெரும்பான்மை ஆதரவு இருந்தபோது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மகிந்தவுடன் பேசி இருந்தால் தமிழர்களுக்கு நியாயமான அரசியல் தீர்வு ஒன்று கிடைத்தி ருக்கும். அவர்கள் தமிழ் மக்களின் பிரச்சினையைப் போலியாக அணுகியதால்தான் பிரச்சினைகள் இன்னும் தீர்க்கப்படவில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஸ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

புதிய கூட்டமைப்பின் ஊடாக நாம் தமிழ் முஸ்லிம் மக்களின் உள்ளங்களை வெல்வதற்குஅவர்களை எம் பக்கம் வளைத்துப் போடுவதற்குச் சிறப்பு வேலைத் திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளோம். வடக்கு-கிழக்கில் இளம் தலைவர்களை உருவாக்குவதற்குத் திட்டமிட்டுள்ளோம். அவ்வாறானவர்களை நாம் அடையாளம் கண்டுள்ளோம். எதிர்காலத்தில் அவர்கள் யார் என்று சொல்வோம்.

எமக்குச் சில அரசியல் தலைவர்களுடன் மாத்திரம்தான் பிரச்சினை உண்டு. அவர்கள் எமது கொள்கைகளுடன் ஒத்துப்போக மறுக்கின்றனர். உதாரணத்துக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. எமது ஆட்சியில் அவர்களால் மிக இலகுவாக வந்து மகிந்தவுடன் பேசும் வாய்ப்பு இருந்தது. தமிழர்களின் பிரச்சினைகளை இலகுவாகத் தீர்த்துக் கொள்ளும் வாய்ப்பு இருந்தது.

தமிழர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்று அவர்கள் விரும்பவில்லை. அப்படி இருந்திருந்தால் மகிந்தவுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலம் நாடாளுமன்றில் இருந்தபோது- சிங்கள மக்களின் பெரும்பான்மை ஆதரவு இருந்தபோது மகிந்தவுடன் பேசித் தமிழர்களுக்கான தீர்வைப் பெற்றிருப்பார்கள். ஆனால்அவர்கள்மகிந்தவிடம்வரவில்லை. அவர்கள் தமிழர்களின் பிரச்சினைகளுக்காகக் குரல் கொடுப்பதாகக் கூறினாலும் உண்மையில் அவர்கள் அப்படி இல்லை. அவர்களின் அரசியல் இருப்புக்காகவே இவ்வாறு செய்கின்றனர். வாகனத்தையும் சலுகைகளையும் கொடுத்தால் அமைதியாகிவிடுகின்றனர். அவர்கள் நேர்மையானவர்கள் அல்லர்.

இவ்வாறு இல்லாது தமது இனத்துக்காக உண்மையாகவே குரல் கொடுக்கின்ற இனவாதம் அற்ற நாட்டுப்பற்றுள்ள இளம் தலைவர்களை நாம் வடக்கு-கிழக்கில் உருவாக்கவுள்ளோம். இதற்கான வேலைத் திட்டம் தற்போது நடைமுறைப் படுத்தப்படுகின்றது - என்றார். (த-3)

## கடற்படை இடர் உதவி மையம் வெலிசறையில்

கொழும்பு, ஜூன் 30
இயற்கை இடர்கள் உட்பட சகலவிதமான ஆபத்துகளுக்கும் உடனடியாக முகம் கொடுப்பதற்கான முதலாவது கடற்படை இடர்உதவிமையம் இலங்கைக்கடற்படையின்வெலிசறைத் தளத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை கடற்படைத் தளபதி வைஸ் எட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்னவினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இடர்களுக்குத் துரிதமாக முகம் கொடுக்கும் வகையில் இந்தப் பிரிவில் நடமாடும் சமையலறைகள், சமையல் பாத்திரங்கள், நடமாடும் கழிவறைகள், உயர் அழுத்த நீர்த்துப்பாக்கிகள், பைபர் கண்ணாடி மிதவைப் படகுகள், சக்திவாய்ந்த மோட்டார் படகுகள் உள்ளிட்ட பல்வேறு உபகரணங்கள் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

இந்த முதலாவது உதவி மையம் மேல் மற்றும் தென்மாகாணங்களில் ஏற்படக்கூடிய சகலவிதமான இடர்களுக்கும் உதவி வழங்கும் எனவும் - விரைவில் மேலும் இரண்டு நிலையங்கள் வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களில் நிறுவப்படும் எனவும் கடற்படைத் தளபதி தெரிவித்தார். (த-ய)

## இந்திய உதவியுடன் மலையகப் பகுதியில் கைதொழில் மையம்

### ஆறுமுகன் தொண்டமான் தெரிவிப்பு



நுவரெலியா, ஜூன் 30
இந்தியாவின் உதவியுடன் மலையகத்தில் பல்வேறு பகுதிகளில் கைதொழில் மையங்களை உருவாக்க நடவடிக்கை எடுத்துவருகிறோம் என நாடாளுமன்ற உறுப்பினர் ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்தார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் சர்வதேச தொழிலாளர் மையம் ஆகியன இணைந்து தெரிவு செய்யப்பட்ட 50 இளைஞர் யுவதிகளுக்கு தலைமைத்துவ பயிற்சியும் முயற்சியாண்மையும் தொடர்பான செயலமர்வு கடந்த 24 ஆம், 25ஆம் திகதிகளில் ஹற்றன் சீடா வள நிலையத்தில் நடைபெற்றது.

இதில் இளைஞர்கள் கைதொழில்களை மேற்கொண்டு எவ்வாறு முன்னேறலாம், எவ்வாறு நேர்முக பரீட்சைகளை மேற்கொள்வது என்ன தொழில்கள் பெற்றுக்கொள்ள கூடியதாக இருக்கின்றது, பொருளாதாரத்தை எவ்வாறு விருத்தி செய்யலாம் போன்ற விடயங்கள் இதன்போது தெளிவுட்டப்பட்டன.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு சான்றிதழ் வழங்கி உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மலையகத்துக்கு இந்தியத் தலைமை அமைச்சர் மோடி வந்தபோது மலையக இளைஞர்கள், யுவதிகளுக்கு கைதொழில் பேட்டைகளை உருவாக்குவதற்குக் கதைத்தபோது, அவர் காலாவதியான தேயிலைச் செடிகளைக் கொண்டு அசாம் நிறுவனத்தில் உயர் தரத் தளபாடங்கள் செய்கின்றனர் என்று கூறினார்.

அந்தக் கைதொழில் பேட்டையை மலையகத்தில் பல பகுதிகளில் உருவாக்குவதற்குக் கேட்டுள்ளோம். அதனை உருவாக்குவது தொடர்பாக நாங்கள் கம்பனிகளுடன்பேசிதேயிலைச் செடிகளை பெற்றுக்கொள்வது தொடர்பாக ஆராய்ந்து வருகிறோம் - என்றார். (த-ய)

## அரசுக்கு எதிராக களமிறங்கவுள்ள அஸ்கிரிய பீடம்

### அரசியல்வாதிகள் இணைந்து நாட்டை அழிப்பதற்கு முயற்சி எனக் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 30
இந்த நாட்டின் அரச தலைவர் மற்றும் தலைமை அமைச்சர் உட்பட அமைச்சர்கள் இணைந்து கல்வி, கலாசாரம், சமயம் என்பவற்றை அடியோடு இல்லாதொழிப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாகவும், மகா சங்கத்தினர் எதிர்வரும் நாள்கள்ல் [illegible]யான நடவடிக்கை எடுக்கத் திட்ட மிட்டுள்ளதாகவும் அஸ்கிரிய பிரிவின் அனுநாயக்கர் வெடருவே உபாலி தேரர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையின் பாதுகாப்பு மற்றும் அதன் உரிமை தொடர்பில் தீர்மானம் எடுப்பதற்கு மகா நாயக்கர்களுக்கு மாத்திரமே உரிமையுண்டு என்பதை அரசின் நிர்வாகிகள் தெரிந்துகொள்ள வேண்டும்.

முன்னைய [illegible] எமது மன்னர்கள் அரச நிதி மற்றும் செல்வங்களை மகா சங்கத்துக்கு தானம் செய்து வழிபட்டார்கள். மாறாக மகா சங்கத்தினரிடமிருந்து பௌத்த உரிமைகளை எப்பொழுதாயினும் பறித்துக் கொள்வதற்கு அவர்கள் முற்படவில்லை. இதனை இந்த நாட்டின் நிருவாகிகள் நன்றாக தெரிந்து கொள்ள வேண்டும்.

இந்த நாட்டின் பௌத்த உரிமைகளை விற்பனை செய்வதற்கும் [illegible] எடுக்கும் [illegible] பிரச்சினைக்குரியது.

நாட்டின் பிரச்சினை ஞானசார தேரரின் பிரச்சினை மாத்திரமன்று. நாட்டில் கலாசாரகி சமயகி இன ரீதியாக பல்வேறு பிரச்சினைகள் உச்சத்தை அடைந்துள்ளன. இனங்களுக்கிடையில் ஒற்றுமைக்குப் பதிலாக விரிசலை ஏற்படுத்த அரசியல்வாதிகள் செயற்பட்டு வருகின்றனர். இதனால் நாட்டுக்குள் [illegible] நிலையொன்று ஏற்பட்டுள்ளதுஎன்றார். (த-ய)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஐ.எஸ். தாக்குதலில் நூலிழையில் தப்பிய ஈராக் பெண் சிப்பாய்

பக்தாத், ஜூன் 30
ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதலில் இருந்து நூலிழையில் உயிர் தப்பித்த ஈராக் பெண் சிப்பாய் ஒருவர் தொடர்பிலான காணொலியை பன்னாட்டு ஊடகமான பி.பி.சி. (வேல்ட்) வெளியிட்டுள்ளது.

ஐ.எஸ். அமைப்பின் பிடியில் ஈராக்கின் மோசூல் நகரம் இருந்தது. இதன் கிழக்குப் பகுதி கைப்பற்றப்பட்டுவிட்ட நிலையில் மேற்குப் பகுதிக்கான போர் தற்போது நடைபெற்று வருகிறது. மேற்கு மோசூலின் அல் நூரி மசூதிக்கு அப்பால் உள்ள இடத்தில் தற்போது போர் நடைபெறுகிறது. கட்டடங்களுக்குள் இருந்து துப்பாக்கிச் சூடு நடத்தும் அளவுக்கு ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்புக்கு மிக நெருக்கமாக ஈராக் படைகள் உள்ளன. இரு தரப்புக்கும் இடையே கடும் துப்பாக்கிச் சூடு இடம்பெற்று வருகிறது என்று தெரிவிக்கப்படுகிறது.

அவ்வாறு ஓர் கட்டடத்தில் இருந்து ஐ.எஸ். ஐ.எஸ். ஆயுததாரிகளைக் குறிவைத்து ஈராக் பெண் சிப்பாய் ஒருவர் நடத்திய துப்பாக்கிச் சூட்டுக்கு, பதில் தாக்குதல் ஆயுததாரிகள் தரப்பில் இருந்து நடத்தப்பட, துப்பாக்கிச் சன்னம் ஈராக் சிப்பாயின் தலைக்கு மிக நெருக்கமாகச் சென்று அவரின் பின்பகுதியில் இருந்த சிவரைத் தாக்குகிறது. பெண் சிப்பாய் 'ஓ என் கடவுளே' என்று தெரிவித்துவிட்டு சிரித்த வண்ணம் தனது பாதுகாப்பை உறுதிப்படுத்துகிறார்.

இந்தப் பதிவுகளை உள்ளடக்கிய காணொலி பி.பி.சி. ஊடகத்தால் நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டது. இதுவரை கிட்டத்தட்ட 2 லட்சம் பேர் இந்தக் காணொலியைப் பார்த்துள்ளனர். ஒரு லட்சத்து 50ஆயிரம் பேர் தமது பக்கங்களிலும் பகிர்ந்துள்ளனர். (ம)



### நேற்றுமுன்தினம் மட்டும்

# 5,000 அகதிகள் லிபியாவில் மீட்பு

திரிபோலி, ஜூன் 30
லிபியாவில் இருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு குடியேறும் நோக்கத்தில் படகுகளில் சென்று நடுக்கடலில் தத்தளித்த சுமார் 5 ஆயிரம் அகதிகளை இத்தாலி நாட்டு கடற்படையினர் நேற்றுமுன்தினம் மீட்டுள்ளனர். இந்த ஆண்டில் ஒரே நாளில் அதிகளவு அகதிகள் மீட்பு நடவடிக்கையாக இதுவே பதிவானது.

வடஆபிரிக்க நாடுகளில் ஒன்றான லிபியாவில் கடந்த 2011ஆம் ஆண்டு முன்னாள் அதிபர் கடாபியின் ஆட்சி வீழ்த்தப்பட்ட பிறகு அங்கு அதிகாரப் போர் உச்சக்கட்டத்தை எட்டியுள்ளது. இதனையடுத்து லிபியாவில் பல ஆயுதக் குழுக்களும் தோற்றம் பெற்றுள்ளன. மட்டுமல்லாமல் சிரியா, ஈராக் உள்ளிட்ட நாடுகளில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு எதிரான போர் கடும் உச்சமாக நடைபெற்று வருகிறது. ஆபிரிக்க நாடுகளில் கடும் வறட்சி தாண்டவமாடுகிறது. இவை காரணமாக அங்குள்ள பல்லாயிரக்கணக்கான மக்கள் லிபியாவுக்கு வந்து பின்னர் அங்கிருந்து இத்தாலிக்கும் ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்கும் சென்று தஞ்சமடைகின்றனர்.

அவ்வாறு செல்பவர்களை இத்தாலி மற்றும் லிபிய கடலோர காவல் படைகள் மீட்டுச் செல்வதும் தொடர்கதையாகி வருகிறது. நேற்றுமுன்தினம் மட்டும் கிட்டத்தட்ட 5ஆயிரம் அகதிகளை இத்தாலி கடலோரக் காவல் படையினர் மீட்டுள்ளனர். படகில் ஏற்பட்ட நெரிசல் காரணமாக 24 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த வருடம் மட்டும் ஜனவரி மாதத்தில் இருந்து ஜூன் 21ஆம் திகதிவரை சுமார் 72 ஆயிரம் அகதிகள் இத்தாலிக்கு சென்றுள்ளனர்.

இத்தாலி நாட்டுக்கு புகலிடம் தேடி வரும் வழியில் சுமார் ஐயாயிரம் பேர் காணாமல் போயினர் என்றும், கடலில் மூழ்கி சுமார் 2 ஆயிரம் பேர் உயிரிழந்தனர் என்றும் அண்மைக்கால அறிக்கைகள் பல எடுத்துரைக்கின்றன. (ம)

## கட்டார் மீது மேலும் பல தடைகள்

### சவூதி திட்டம்

டோகா, ஜூன் 30
கட்டார்மீதுமேலும் பல பொருளாதாரத் தடைகளை விதிக்க சவூதி அரேபியாவும் அதன் நட்பு நாடுகளும் முடிவு செய்துள்ளன என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

தீவிரவாதத்துக்கு கட்டார் ஆதரவு அளிப்பதாக குற்றம் சாட்டி அந்த நாட்டுடனான தூதரக உறவை சவூதி அரேபியா, ஐக்கிய அரபு இராச்சியம், பக்ரைன், எகிப்து ஆகிய நாடுகள் அண்மையில் துண்டித்தன.

மீண்டும் நட்புறவு ஏற்பட வேண்டுமாயின் தமது நிபந்தனைகளுக்கு செவி சாய்க்க வேண்டும் என்று அவை கட்டாரை வலியுறுத்தின. ஆனால் கட்டார் உடன்படவில்லை. இதனால் அந்த நாட்டின் மீது மேலும் பல பொருளாதாரத் தடைகளை விதிக்க சவூதி பரிசீலித்து வருகிறது என்று பன்னாட்டு ஊடகங்கள்செய்திவெளியிட்டன. (ம)



## எலிசபெத் ராணியின் சம்பளம் அதிகரிப்பு

லண்டன்,ஜூன்30
2018 - 2019 நிதியாண்டில் பிரிட்டன் ராணி எலிசபெத், தனது செலவுகளைச் சமாளிப்பதற்காக அவருக்கு 8 சதவிதம் ஊதிய உயர்வு கொடுக்கப்பட்டுள்ளது. (ம)



சிரியாவின் ரக்கா நகரில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு எதிரான போர் மிகவும் கடுமையாக நடைபெற்று வருகிறது. மீட்புப் போரில் ஈடுபடும் சிரிய இராணுவச் சிப்பாய்களின் மருத்துவ முகாமின் ஒளிப்படமே இது. (ம)

## அமெ. தாக்குதலில் 57 பேர் உயிரிழப்பு

சிரியாவின் அல்மயாதின் பகுதியில் அமெரிக்க கூட்டுப்படை நடத்திய வான்வழித் தாக்குதலில் 57 பேர் உயிரிழந்தனர்.

சிரியாவில் கடந்த 6 ஆண்டுகளுக்கும் மேலாக உள்நாட்டுப் போர் நடைபெற்று வருகிறது.

அந்த நாட்டின் சில பகுதிகள் ஐ.எஸ். ஆயுததாரிகளின் கட்டுப்பாட்டில் உள்ளன. ஐ.எஸ். ஆயுததாரிகளின் முகாம்களை அழிக்க அமெரிக்க கூட்டுப்படை வான்வழி தாக்குதல்களில் ஈடுபட்டு வருகிறது.

அந்த வகையில் அமெரிக்க கூட்டுப்படை நேற்றுமுன்தினம் நடத்திய வான்வழி தாக்குதல்களில் 42 பொதுமக்களும் 15 ஐ.எஸ். ஆயுததாரிகளும் கொல்லப்பட்டனர் என்று பிரிட்டனைச் சேர்ந்த தன்னார்வத் தொண்டு நிறுவனம் தெரிவித்துள்ளது. (ம)

## கடற்படையை மிகவும் பலப்படுத்துகிறது சீனா


பீஜிங், ஜூன் 30
சுமார் 10 ஆயிரம் தொன் எடை கொண்ட போர்க் கப்பலை சீனா நேற்றுமுன்தினம் அங்குரார்ப்பணம் செய்து வைத்தது. அடுத்த ஆண்டு இந்தக் கப்பல் சீனக் கடற்படையில் சேர்த்துக்கொள்ளப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அமெரிக்கக் கடற்படையில் தற்போது 275 போர்க்கப்பல்கள் உள்ளன. அதற்கு இணையாக சீன கடற்படையை வலுப்படுத்த அந்த நாட்டு அரசு திட்ட மிட்டுள்ளது. அதன்படி உள்நாட்டு தொழில்நுட்பத்தில் ஏராளமான போர்க்கப்பல்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. கடந்த 2016ஆம் ஆண்டில் மட்டும் 18 போர்க்கப்பல்கள் சீன கடற்படையில் சேர்க்கப்பட்டன. கடந்த ஏப்ரல் மாதம் சீனாவின் முதல் விமானம்தாங்கி போர்க்கப்பல் நாட்டுக்கு அர்ப்பணம் செய்யப்பட்டது. அந்த வரிசையில் 055 ரகத்தைச் சேர்ந்த புதிய போர்க்கப்பல் சீனாவின் ஷங்காய் நகரில் உள்ள ஜியாங்னன் கட்டுமானத் தளத்தில் நேற்றுமுன்தினம் நாட்டுக்கு அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. இதில் அதிநவீன ஏவுகணைகள் பொருத்தப்பட்டுள்ளன.

எதிர்வரும் 2020ஆம் ஆண்டுக்குள் 270 போர்க்கப்பல்கள் கொண்ட வலுவான கடற்படையை உருவாக்க சீன அரசு திட்டமிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நவாலி அருள்மிகு அந்திரான் முருகமூர்த்தி கோயில்
# மஹா கும்பாபிஷேக சிறப்பு இதழ் - 30.06.2017 வெள்ளி

அருவமும் உருவமாகி அநாதியாய் பலவாய் ஒன்றாய்
பிரம்மமாய் நின்ற சோதிப் பிளம்பதோர் மேனியாகக்
கருணை கூர் முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டே
ஒருதிருமுருகன் வந்தாங்கு தித்தனன் உலகமுய்ய

சீரார் நவாலியூர் செய்ய முருகவேள்
தாராரும் தாழ்கள் தரிசித்தோர் -ஆரா
அமிர்தம் பெறுவர் அவனிதனில் வாழ்வர்
தமிழ் உள்ளவும் தழைத்து
(கிருபானந்தவாரியார்)

குகனேயச் செல்வர்களே!

பொன் இலங்கும், முத்திலங்கும், புகழ் இலங்கும், ஈழமணித் திருநாட்டிலே வளம் மிகு வடபால் சிவாச்சாரியப் பெருமக்களும் கலைஞர்களும் புலவர் மகானும் வாழ்ந்து பெருமை பெற்றதும், குறிஞ்சியும், முல்லையும், மருதமும்,நெய்தலும், சூழ்ந்து வளம் சேர்ப்பதும் சைவமும் தமிழும் சிறந்து விளங்கும் சிறப்புப் பெற்றதுமாகிய நவாலிக் கிராமத்தில் அந்திரான்பதியில் அருள்புரியும் முருகமூர்த்திப் பெருமானுக்கும், விநாயகர், ஆறுமுகப்பெருமான், மகாவிஷ்ணு, நடராஜர், நவக்கிரகம், வைரவர், சண்டேஸ்வரர் ஆகிய பரிவார மூர்த்தியர்க்கும் நிகழும் மங்களம் நிறை ஏவிளம்பி வருடம் ஆனி மாதம் 16ஆம் நாள் (30.06.2017) வெள்ளிக்கிழமை காலை 9.18 முதல் 10.22 மணிவரையுள்ள ஆனி உத்தரமும், சப்தமித் திதியும், சித்தாமிர்த யோகமும் கூடிய சிம்ம இலக்கின சுபமுகூர்த்த வேளையில் மஹா கும்பாபிஷேகம் நிகழத் திருவருள் கூடியுள்ளது. அவ்வமயம் அடியார்கள் எம்பெருமானைத் தரிசித்து திருவருள் பெற்று நிறைவாக வாழுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

| | |
|---|---|
| **30.06.2017 வெள்ளிக்கிழமை** | காலை 6.30 மணிமுதல் - விநாயகர் வழிபாடு, யாக பூஜை, அக்கினி வழிபாடு, மகா பூர்ணாகுதி பூஜா ஹோமம் பிரார்த்தனையோடு சமர்ப்பணம், யாக தீபாராதனை, உபசார பூஜைகள், வேத தேவார பாராயணங்கள், இராஜ கோபுர விமான கும்பாபிஷேகம், தொடர்ந்து முருகமூர்த்தி பெருமானுக்கும், ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் மஹா கும்பாபிஷேக மங்கள தரிசனம்.<br>மாலை 6.00 மணிமுதல் - சாயரட்ச பூஜை, திருமாங்கல்ய தாரணம், சுமங்கலி வழிபாடு, சுபாசினி பூஜை, கன்னிகா பூஜை, வசந்தமண்டபப் பூஜை, சுவாமி வலம் வருதல், பிரசாதம் வழங்கல். |

## குருமார் விவரம்

பிரம்மஸ்ரீ.சோ.நித்தியானந்தக் குருக்கள்
(நவாலி, மலேசியா)

**சர்வபோதகம்**
"வேதாகம பாஸ்கரன்"
பிரம்மஸ்ரீ தா.மகாதேவவாத்தியார்
(தர்ம ஸாஸ்தா குருகுல அதிபர் - இணுவில்)

பிரம்மஸ்ரீ.க.ரவிக்குருக்கள்
(திருத்தணி தேவஸ்தான தலைமைக் குருக்கள் - இந்தியா)

**ஆலயக்குருக்கள்**
பிரம்மஸ்ரீ இ.சிவபாலசர்மா
(ஆனைக்கோட்டை)

**பிரதிஷ்டா பிரதமகுரு**
நவாலியூர் "சிவாகம கிரியா தத்துவநிதி", " சிவாகம கிரியா ரத்தினம்", பிரம்மஸ்ரீ.சோ.கௌரீஸ்வரக்குருக்கள்
(மெல்பேர்ன் வக்ரதுண்ட விநாயகர் ஆலய பிரதமகுரு, ஆஸ்திரேலியா)

**சர்வ சாதகம்**
"நவரசமாமணி"
பிரம்மஸ்ரீ.சோ.நிர்மலேஸ்வரக் குருக்கள்
(நவாலி - சிட்னி, ஆஸ்திரேலியா)

**ஏனைய குருமார்கள்**
பிரம்மஸ்ரீ.ஹ.சந்திரமௌனீஸ்வரக்குருக்கள் ( கொழும்பு)
பிரம்மஸ்ரீ. சி.பாலசண்முகக் குருக்கள் (கட்டுடை)
பிரம்மஸ்ரீ சி.தியாகராஜக் குருக்கள் (மைலணி)
பிரம்மஸ்ரீ கூ.முரளீதரக் குருக்கள் ( அரியாலை)
பிரம்மஸ்ரீ.ந. சுப்பிரமணியக் குருக்கள் (மானிப்பாய்)
பிரம்மஸ்ரீ தா.ரவிக்குருக்கள் (ஆனைக்கோட்டை)
பிரம்மஸ்ரீ வ.ராஜேஸ்வரக் குருக்கள் (சுழிபுரம்)
பிரம்மஸ்ரீ தி.சர்வேஸ்வரக் குருக்கள் ( அராலி)
பிரம்மஸ்ரீ ச.வாசுதேவக் குருக்கள் (சித்தாங்கேணி)
பிரம்மஸ்ரீ வ.உமாசுதக்குருக்கள் ( மைலணி)
பிரம்மஸ்ரீ பா.மோகனரஞ்சக் குருக்கள் (நவாலி, சுவீடன்)
பிரம்மஸ்ரீ தே.பிரசன்னாக் குருக்கள் ( சாவகச்சேரி)
பிரம்மஸ்ரீ செ. மங்களேஸ்வரக் குருக்கள் ( மாதகல்)
பிரம்மஸ்ரீ வ.கேதீஸ்வரக் குருக்கள் ( கல்வியங்காடு)
பிரம்மஸ்ரீ நா.பாலச்சந்திரக் குருக்கள் (கொழும்பு)
பிரம்மஸ்ரீ இ.சுந்தரேஸ்வரக் குருக்கள் (மருதனார்மடம் )
பிரம்மஸ்ரீ பா.உமாகாந்தக் குருக்கள்

**சாதகாச்சாரியார்கள்**
பிரம்மஸ்ரீ சி.தியாகராஜக் குருக்கள் (காட்டூர், இந்தியா)
பிரம்மஸ்ரீ இ.தேவசிகாமணிக் குருக்கள் (சிலாபம்)
பிரம்மஸ்ரீ மு. ஜெகன்நாதக் குருக்கள் (உரும்பிராய்)
பிரம்மஸ்ரீ க.கிருஷ்ணராஜக் குருக்கள் (ஆனைக்கோட்டை)
பிரம்மஸ்ரீ சோ.சிவகுமாரக் குருக்கள் ( கரைப்பிரான், ஆனைக்கோட்டை)
பிரம்மஸ்ரீ ப.சிவானந்தசர்மா (கோப்பாய் சிவம் - இணுவில்)
பிரம்மஸ்ரீ தி.சிவானந்தசர்மா (அராலி)
பிரம்மஸ்ரீ ச.இராஜராஜேஸ்வர சர்மா ( கொழும்புத்துறை)

**யாக சம்ரக்ஷகர்கள்**
பிரம்மஸ்ரீ ஜெ.குமரன் குருக்கள் (கைதடி)
பிரம்மஸ்ரீ மா.பார்த்தீபசர்மா (கொக்குவில்)
பிரம்மஸ்ரீர.கோபிசர்மா (ஆனைக்கோட்டை)
பிரம்மஸ்ரீ சி. கலாதரசர்மா (மீசாலை)
பிரம்மஸ்ரீ சி.சுரேஸ்சர்மா (வவுனியா)
பிரம்மஸ்ரீ சி.தர்சியசர்மா (ஆனைக்கோட்டை)
பிரம்மஸ்ரீ தே.திவ்யமணிசர்மா (கனடா)
பிரம்மஸ்ரீ தே.வித்யாதரசர்மா (கனடா)
பிரம்மஸ்ரீ கிருஸ்ணன் சோலைமலை (சிவகங்கை, இந்தியா)


**மங்கள வாத்தியம்**
ராமு குழுவினர்
(வட்டுக்கோட்டை)

**சிற்பம், வர்ணம்**
கட்டட நிர்மாண குரிசில்
திரு.நடராஜன் ராதாகிருஷ்ணன்
(மயிலாடுதுறை, தென்னிந்தியா)

**பூமாலை அலங்காரம்**
திரு.பரராஜசிங்கம்
வழி ஞானசம்பந்தம்
(உரும்பிராய்)

**யாக அலங்காரம்**
திரு.பொன்னுத்துரை
(ஆனைக்கோட்டை)

அனுசரணை:-
(c/30447)(10)
NIPPON PAINT
ஞானம் பெயின்ட்ஸ்
சகலவிதமான வர்ணப் பெயின்ற் கலவை அகம்
558, மானிப்பாய் வீதி,
ஓட்டுமடம், யாழ்ப்பாணம்
T.P: 077 6184691,
021 222 5577



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## அரசசார்பற்ற அமைப்புகளுக்கு எதிராக மீண்டும் போர்க்கொடி?

இலங்கையில் பணியாற்றும் அரசசார்பற்ற அமைப்புகள் தேசத்தின் நலன்களுக்கு மாறாக செயற்படுகின்றன. அவை நல்லிணக்கத்துக்கும் மதஒற்றுமைக்கும் பாதிப்பை ஏற்படுத்துபவைகளாக விளங்குகின்றன. அவற்றின் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவது குறித்து அரசு சிந்திக்கவேண்டும்.

மகிந்த ராஜபக்ச வின் முன்னைய அரசு, அரசசார்பற்ற அமைப்புகளுக்கு எதிராக போர்க்கொடி தூக்கிய வேளை முன்வைத்த வாதத்தை நினைவுபடுத்தும் இந்தக் கருத்தை, இலங்கையின் நீதியமைச்சர் வெளியிட்டுள்ளார்.

கடந்த காலங்களில் ஒலித்த ஜனநாயக மறுப்புக்குரல்களை நினைவுபடுத்தும் பல கருத்துக்களை ஆங்கில ஊடகமொன்றுக்கான அவரது செவ்வியில் காண முடிந்துள்ளது.

முன்னைய அரசில் காணப்பட்ட நிலைப்பாடுகளும் கருத்துக்களும் மெல்ல மெல்ல இந்த அரசிலும் தலைதூக்குவதை அச்சத்துடன் நோக்கவேண்டியுள்ளது. அரசின் முக்கிய அமைச்சர் ஒருவரின் செவ்வி, முன்னைய அரசின் குரலை ஞாபகப்படுத்தும் விதத்தில் அமைந்திருப்பது துரதிர்ஷ்டவசமானது.

நல்லாட்சிக் கோசத்துடன் தேர்தலில் நின்றவர்களை வெற்றிபெறச்செய்ததில் முக்கிய பங்கு, இலங்கையின் சிவில் சமூகத்தினருக்கும், அரச சார்பற்ற அமைப்புகளுக்கும் உள்ளது என்பதை மறுக்கமுடியாது.

அவ்வாறு தங்களை ஆதரித்து நின்ற சக்திகளையே இன்று அச்சுறுத்தும், அலட்சியப்படுத்தும்கருத்துக்கள் மூத்த அமைச்சர்ஒருவரிடமிருந்து வெளியாகியுள்ளன.

நல்லாட்சி அரசின் வெற்றிக்குப் பங்களிப்புச் செய்த பிரசைகள் முன்னணியையும் அமைச்சர் உதாசீனம் செய்து கருத்து வெளியிட்டுள்ளார்.

அமைச்சர் அந்தச் செவ்வியில் அரசசார்பற்ற அமைப்புகள் குறித்துத் தெரிவித்த கருத்துக்கள் முழுமையாக மறுக்கப்படவேண்டியவையாகக் காணப்படுகின்றன.

அதனை விட, நல்லாட்சி அரசு பயணிக்கத் தொடங்கியுள்ளபாதைகுறித்த கேள்விகளையும், அச்சங்களையும் எழுப்புவதாகவும் அந்தச் செய்தி காணப்படுகின்றது.

மக்களின் குரலாக, உண்மையை முகத்திற்கு நேரே சொன்ன அரசசார்பற்ற அமைப்புக்கள், சிவில் சமூகத்தினரைதங்களின்எதிரிகளாகப்பார்க்கும்மனோபாவம் மகிந்த ராஜபக்சஅரசின் காலத்திலேயே அச்சமூட்டும் விதத்தில் அதிகரித்தது.

மகிந்த ராஜபக்ச அரசு தன்னுடன் இணைந்து செயற்படாத, தனது நிகழ்ச்சி நிரலுக்குள் சிக்காத அரசசார்பற்ற அமைப்புகளையும்சிவில்சமூகத்தினரையும்முடக்கும் பல நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தது.

மக்களின் கருத்துகளை முன்வைக்கும் அமைப்புகளின் குரலைச்செவிமடுக்கவிரும்பாமல், முரட்டுத்தனமான பிடிவாதத்துடன் பயணித்ததால், முன்னைய அரசு மக்களிடமிருந்து விலகி இறுதியில் அரசியல் வீழ்ச்சியைச் சந்தித்தது.

நீதியமைச்சரிடமிருந்து வெளியாகியுள்ளகருத்துக்கள், பொதுமக்களின் உணர்வுகளை, மனக்குரலை வெளிப்படுத்தும் அரசசார்பற்ற அமைப்புகளின் கருத்துகளை செவிமடுக்காத பாதையில் அரசு பயணிக்கவேண்டும் என அவர்விரும்புகின்றாரோஎன்றஅச்சத்தைஏற்படுத்தியுள்ளது.

அது ஆபத்தான பயணம்.



# தமிழ் அரசுக் கட்சியை பலவீனப்படுத்துவது கனவிலும் நடக்காது

இந்துமதி

தமிழ் அரசுக் கட்சியைப் பலவீனப்படுத்துகின்ற மறைமுகமான நிகழ்ச்சி நிரலுடன் தமிழ்மக்கள் பேரவை செயற்படுவதாக தமிழ் அரசுக் கட்சியின் தலைவரான மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார். அண்மையில் வடக்கில் இடம்பெற்ற சம்பவங்களை மனதில் கொண்டே அவர் இதைத் தெரிவித்திருக்கிறார் என்று எண்ணத் தோன்றுகின்றது.

வடக்கு முதலமைச்சருக்கு எதிராகத் தமிழ் அரசுக் கட்சியினால் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டபோது, அதை முற்றாக எதிர்த்தவர்கள் தமிழ் மக்கள் பேரவையினர் தான். விக்னேஸ்வரனுக்கு ஆதரவாக முழுக்கடைஅடைப்புக்குஅழைப்பு விடுத்தவர்களும் இவர்கள் தான்,. அதைவிட மக்களைத் திரட்டிச் சென்று வடக்கு முதலமைச்சருக்கு ஆதரவு தெரிவிப்பதற்கு அரும்பாடுபட்டவர்களும் இந்தப் பேரவையினர் தான். தமிழ் அரசுக்கட்சியைப் பலவகையிலும் கேவலப்படுத்தும் விதமாக விமர்சனம் செய்வதிலும், பேரவைக்குச் சார்பான சில ஊடகங்கள் ஈடுபட்டதைக் காண முடிந்தது.

### தமிழ் அரசுக் கட்சியை நலிவுபடுத்தத் திட்டமிட்டுச் செயற்படும் தரப்பினர்

தமிழ்அரசுக்கட்சியைஅழித்துவிட்டால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இல்லாமல் போய்விடும் என மனப்பால் குடித்துக் கொண்டிருக்கும் கஜேந்திரகுமார் போன்ற, மக்களால் புறக்கணிக்கப்பட்ட அரசியல் கட்சித் தலைவர்கள் தமது எண்ணத்தை நிறைவேற்றவதற்குத் தமிழ் மக்கள் பேரவையைப் பயன்படுத்தி வருகின்றனர் என்ற உண்மை சாதாரண தமிழ் மகனுக்கும் தெளிவாகப் புரியும். கொழும்பிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட வடக்கின் முதலமைச்சருக்கான ஆதரவும், சிலரது அரசியல் வளர்ச்சிக்காகப் போடப்பட்ட அத்திபாரம் என்பதை நாம் முதலில் புரிந்து கொள்ள வேண்டும். தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட்டு, அந்தக்கட்சி ஆதரவாளர்களின் வாக்குகளால் பெருவெற்றியைப் பெற்று, முதலமைச்சரின்ஆசனத்திலும்அமர்ந்துவிட்ட சி.வி. விக்னேஸ்வரன் தன்னை மேலே உயர்த்திவிட்ட ஏணியையேஎட்டிஉதைத்துவிட்டார்.

### வளர்த்த கடா மார்பில் பாய்ந்தமை போன்று செயற்படுகிறார் முதலமைச்சர்

அவர்துணிவாகவும், உறுதியாகவும் தமிழ் அரசுக்கட்சியை ஆதரித்திருந்தால், ஏனையவர்கள் அந்தக் கட்சியை இந்த அளவுக்குக் கீழ்த்தரமான முறையில் விமர்சனம் செய்திருக்கமாட்டார்கள். ஆனால்வடக்குமுதலமைச்சர் இவற்றையெல்லாம் ஏற்றுக் கொள்வது போன்று நடந்து கொள்வது பெரும் வேதனையைத் தருகின்றது. அதைவிடத் தன்னை எதிர்த்தவர்கள், தமக்குக்கிடைத்த ஆதரவைக் கண்டு மிரண்டு போய்விட்டார்கள் எனவும், தமிழ்த் தேசியத்துடன் என்றும் நிற்பேன் எனவும் விக்னேஸ்வரன் கூறியுள்ளமை ஆச்சரியத்தைத் தருகின்றது.

தமிழ்த் தேசியம் என அவர் எதைக் கூறுகிறார் என்பது புரியவில்லை. முதலில் தமக்கு ஆதரவளித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், தமிழ் அரசுக் கட்சிக்கும் அவர் விசுவாசமாக இருந்தாலே போதுமானது.

ஆரம்பத்தில் தமிழ் மக்கள் பேரவை, தமிழ்மக்களின்பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும்





பொருட்டு உருவாக்கப்பட்டதொரு மாற்று அணியாகவே கருதப்பட்டது. அரசியலில் ஈடுபடுகின்ற எண்ணம் அதற்கில்லை என்றும் கூறப்பட்டது. ஆனால் அதில் அங்கம் வகிக்கின்றவர்களின் அண்மைக் கால நடவடிக்கைகள் இதற்கு மாறானவைகளாகவே காணப்படுகின்றன. யாழ்ப்பாணத்திலும். மட்டக்களப்பிலும் 'எழுக தமிழ்' எனக் கூறிக் கொண்டு பேரணிகளில் ஈடுபட்டதுதான் பேரவையின் முக்கிய பணிகளாகக் காணப்பட்டன. இதைவிட மக்கள் அனுபவிக்கின்ற துன்பங்களுக்குத் தீர்வு காண்பதற்கு இவர்கள் என்ன செய்தார்கள்? எதற்கெடுத்தாலும் கூட்டமைப்பையும், அதன் தலைமையையும் கீழ்த்தரமான முறையில் விமர்சனம் செய்கின்ற இவர்கள் தம்மைப்பற்றியும் ஒருகணம் சுயபரிசோதனை செய்து கொள்வது நல்லது.

### தமிழ் மக்களது பேரபிமானம் பெற்றது தமிழ் அரசுக் கட்சி

தமிழரசுக் கட்சி தந்தை செல்வாவினால் வளர்த்தெடுக்கப்பட்ட ஓர் ஆலமரத்தைப் போன்றது. அந்த மரம் ஆயிரமாயிரம் தொண்டர்களால் நீரூற்றி வளர்க்கப்பட்டது.

தற்போது அதன் தலைவராகவுள்ள மாவை சேனாதிராசாவும், கஜேந்திரகுமார் போன்றவர்களைப் போன்று சொகுசாக வாழ்ந்து திடீரென அரசியலுக்கு வந்தவரல்ல. அவரது தியாக வரலாற்றைத் தமிழ்மக்கள் நன்கு அறிந்து கொண்டுள்ளனர் ஆகவே அவருக்கும் அவர் தலைவராகவுள்ள தமிழ் அரசுக்கட்சிக்கும் தமிழ் மக்களின் ஆதரவு எப்போதுமே உண்டு . தமிழ் மக்களது அத்தகைய பேராதரவை நலிவுபடுத்த எவராலும் முடியாது.

வடக்குக் கிழக்கில் எதிர்வரும் காலங்களில் இடம்பெற[illegible]ா கின்ற தேர்தல்களில் தமிழ்மக்கள் பேரவையும் வேட்பாளர்களை நிறுத்தப்போகின்றது. அது கூட்டமைப்புக்குச் சவால் விடுப்பதாகவும் அமையும். இந்த நிலையில், கூட்டமைப்பில் இருந்து கொண்டே தமிழ் மக்கள் பேரவைக்கும் ஆதரவு தெரிவித்துக் கொண்டிருக்கும் கனவான்கள் தொடர்பாக கூட்டமைப்பின் தலைமை இனி மேலும் மெத்தனமாக இருந்துவிட முடியாது.

தற்போதைய அரசியல் நிலவரங்களைப் பார்க்கும் போது, கூட்டமைப்பையும், தமிழரசுக்கட்சியையும் அழிப்பதற்கு விக்னேஸ்வர[illegible]ரு வரே போதுமென்ற எண்ணம் தான் மனதில் எழுகின்றது. எனக்கு அரசியல் முக்கியமானதல்ல, மக்களின் பலம் ஒன்றே போதுமென அவர் கூறியுள்ளமை இதைத் தான் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.

தமிழ் அரசுக் கட்சியுடன் நேரடியாகமோதிப்பார்ப்பதற்குத்திராணியில்லாதவர்கள், மறைந்து இருந்துகொண்டு வஞ்சகமான முறையில் காய்நகர்த்தல்களில் ஈடுபட்டுள்ளனர். இதில் முக்கிய விடுகாயாக வடக்கு முதலமைச்சரை அவர்கள் பயன்படுத்துகின்றனர். இவரைவிட்டால் இவர்களுக்கு வேறு கதியே கிடைக்காது என்பதுபோன்று தான் அவர்கள் நடந்து கொள்கின்றனர். ஆனால் அவர்களது கனவு ஒருபோதுமே பலிக்கப் போவதில்லை.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பைச் சிதைத்துச் சின்னாபின்னப்படுத்தி விட்டு, பதவிகளில் அமர்வதற்குத் துடிப்பவர்கள் இறுதியில் ஏமாற்றத்தையே எதிர் கொள்வார்கள். சூதும் வாதும், வஞ்சகமும் வென்றதாகச் சரித்திரமே இல்லை. இவை கடைசியில் தோல்வியைத் தழுவியதாகவேவரலாறுகூறுகிறது. தமிழரசுக் கட்சியை அழித்துவிடுவதற்கு நினைப்பவர்களுக்கும் இத்தகைய கதியே ஏற்படப்போகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடியப்பச் சிக்கலாகும் நிலையில் வடக்கு மாகாண சபையின் செயற்பாடுகள்

■ சேரலாதன்

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் புதிய சிக்கல்களுக்கு முகம் கொடுக்கவேண்டியதொகு நிலை உருவாகி வருகின்றது. அவருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் தொடர்பாக எழுந்த குழப்ப நிலை தணிந்துள்ள நிலையில், புதிய குழப்பங்கள் உருவாகுவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

**புதிய விசாரணைக்குழுவின் முன்னால் உள்ள சவால்கள்**

அமைச்சர்களான சத்தியலிங்கம், டெனிஸ்வரன் ஆகியோரை விசாரிப்பதற்குப் புதிய விசாரணைக்குழுவொன்றை நியமிப்பதற்கான முதலமைச்சரின் நடவடிக்கையும், புதிய அமைச்சர்களின் நியமனமும் குழப்பங்களுக்கு வழிகோலுமென எதிர்பார்க்கப்படுகிறது. முதலமைச்சரால் நியமிக்கப்படவிருக்கும் விசாரணைக்குழு சட்டவலுவற்றது என்ற காரணத்தால், அதனால் மேற்கொள்ளப்படவிருக்கும் விசாரணைகளுக்குத் தாம் முன்னிலையாவதில்லையென இந்த இரண்டு அமைச்சர்களும் தீர்மானித்துள்ளனர் என்று தெரியவருகின்றது.

இந்த விடயம் தொடர்பாக அமைச்சர் டெனீஸ்வரன் கருத்துத் தெரிவிக்கையில், வடக்கு மாகாணசபையில் நான்கு அமைச்சர்கள் மீது மட்டுமல்லாது முதல்மைச்சரின் பொறுப்பில் உள்ள அமைச்சுக்கள்மீதும் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. இதனால் அவைகள் தொடர்பாகவும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். ஆனால் தற்போது முதலமைச்சரால் நியமிக்கப்படும் விசாரணைக் குழு, முதலமைச்சரின் கீழ்வரும் அமைச்சுக்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளமாட்டாது என்பது தெளிவாகத் தெரிகின்றது. இதனால் புதிய விசாரணைக் குழுவின் விசாரணைகள் நீதியான முறையில் இடம்பெறுமென எவருமே எதிர்பார்க்க முடியாது. எனவேதான் மாகாண சபையின் தெரிவுக் குழுவொன்றை நியமிக்குமாறு நாம் கோரிக்கை விடுத்துள்ளோம். இந்தக் குழு இரண்டு அமைச்சர்களிடம் மட்டுமல்லாது முதலமைச்சரிடமும் விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும் என்பது எமது எதிர்பார்ப்பாகும். சட்டபூர்வமானதும், சுயாதீனத் தன்மை கொண்டதுமான விசாரணைக்குழுவொன்று





நியமிக்கப்பட்டால் சில மாதங்கள் பதவிகளிலிருந்து விலகியிருக்கவோ அல்லது பதவிகளைத் துறந்துவிட்டு விசாரணைகளுக்கு முகம்கொடுக்கவோ நாம் தயாராகவுள்ளோமென அவர் மேலும் தெரிவித்தார். இதைவிட முன்பு முதலமைச்சரால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவும் சட்டபூர்வமற்ற தன்மையைக் கொண்டிருந்த போதிலும், வடக்கு மாகாணசபையில் குழப்பங்கள் ஏற்படுவதைத் தவிர்க்கும் முகமாகவே அதன் முன்பாக முன்னிலையாகித் தாம் வாக்குமூலம் அளித்தனர் என இந்த இரண்டு அமைச்சர்களும் தெரிவித்துள்ளமை இங்கு கவனிக்கத்தக்கது. இவற்றையெல்லாம் ஆராய்ந்து பார்க்கும்போது அமைச்சர்களான டெனீஸ்வரன் மற்றும் சத்தியலிங்கம் ஆகியோரின் நிலைப்பாட்டை ஏற்றுக்கொள்ளவேண்டியதொரு நெருக்கடி முதலமைச்ச ருக்கு ஏற்படுகிறது. அமைச்சுக்கள் மீது விசாரணை என்ற வகையில் விசாரணைகள் இடம்பெறும்போது முதலமைச்சர் வசமுள்ள அமைச்சுக்களைப் புறமொதுக்கி விட முடியாது. அவற்றின் மீதும் விசாரணைகள் இடம்பெற வேண்டும். விசாரணைக் குழுவின் முன்பாக முதலமைச்சரும் முன்னிலையாகி வாக்குமூலம் அளிக்கத்தான் வேண்டும். ஆனால், இது சாத்தியப்படுமா? என்பதுதான் இன்று பெரும் கேள்வியாக உருவெடுத்துள்ளது.

> தான்தோன்றித்தனமாகவும், சர்வாதிகார மனப்பான்மையுடனும், நம்பகத்தன்மையற்ற வகையிலும் வடக்கு முதலமைச்சர்செயற்படும்வரை வடக்கு மாகாணசபையில் மட்டுமல்ல, வடக்கிலும் சிக்கல்கள் தொடரத்தான் செய்யும்.

**அமைச்சர்கள் நியமனத்திலும் குழப்பம்**

இதேவேளை பதவி நீக்கப்பட்ட இரண்டு அமைச்சர்களுக்குப் பதிலாகப் புதியவர்கள் இருவர் முதலமைச்சரால் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் இருவரும் முதலமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்போது முதலமைச்சருக்கு ஆதரவாகச்செயற்பட்டவர்கள். அவர்களில் ஒருவர் திருமதி அனந்தி சசிதரன்; மற்றையவர் க.சர்வேஸ்வரன். இவர் ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரனின் சகோதரர் என்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன், இவருக்கு அமைச்சர் பதவியை வழங்குமாறு முன்னரும் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.


முன்னர் தமிழ் அரசுக் கட்சியைச் சேர்ந்த த.குருகுலராசா கல்வி அமைச்சராகப் பதவி வகித்ததால் அதே கட்சியைச் சேர்ந்த மாகாணசபை உறுப்பினரான ஆனோல்ட்க்கு கல்வி அமைச்சை வழங்குமாறு இலங்கைத்தமிழ் அரசுக் கட்சி முதலமைச்சரிடம் கோரிக்கை விடுத்திருந்தது. ஆனால் முதலமைச்சர் அதை நிராகரித்துவிட்டு ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சியைச் சேர்ந்த சர்வேஸ்வரனுக்கு அந்தப் பதவியை வழங்கியுள்ளார். தமிழ் அரசுக்கட்சியைச் சீண்டி விடுகின்ற முதலமைச்சரின் கபடத்தனமான செயலாகவே இதனைக் கருத முடிகின்றது. தமிழ் அரசுக்கட்சி இனியும் பொறுமையைக் கடைப்பிடிக்குமா? என்பது சந்தேகமே.

மேலும், கூட்டமைப்பின் ஒரு பங்காளிக் கட்சியான ஈ.பி.ஆர்.எல்.எவ்க்கு வழங்கிய கௌரவத்தை, டி தம்மைப் பதவியில் அமர்த்திய தமிழ் அரசுக் கட்சிக்கு அவர் வழங்காமை ஏற்கத்தக்கதல்ல. ஆகவே தமிழ் அரசுக்கட்சி இந்த விடயத்தில் இறுதியானதும், உறுதியானதுமான தீர்மானம் ஒன்றை மேற்கொள்ள வேண்டியதொரு சூழ்நிலை தற்போது ஏற்பட்டுள்ளது.

**குழப்பங்களுக்கு எல்லாம் முதலமைச்சரே காரணம்**

தான்தோன்றித்தனமாகவும், சர்வாதிகார மனப்பான்மையுடனும், நம்பகத்தன்மையற்ற வகையிலும் வடக்கு முதலமைச்சர் செயற்படும்வரை வடக்கு மாகாணசபையில் மட்டுமல்ல, வடக்கிலும் சிக்கல்கள் தொடரத்தான் செய்யும். ■

---



## ஆசிரியருக்கான கடிதம்

### சுவாமிநாதனின் பொருத்து வீட்டுத் திணிப்பும் தமிழ்த் தலைமைகளின் கையறுநிலையும்

ஐயா, இந்த நாட்டில் ஒன்பது மாகாணங்கள் உள்ளன. வடமாகாணத்தைத் தவிர வேறு எந்த ஒருமாகாணத்திலும் பொருத்து வீட்டுக் கதை கிடையாது. மகிந்த ராஜபக்ச தலைமையிலான இனவாத சிங்கள அரசும், ஜனநாயகம் பேசும் பன்னாட்டுத் தரப்பும் சேர்ந்தே இந்த நாட்டில் இன அழிப்புப் போரை நடத்தி முடித்தன.

உயிர் உடமைகள் அத்தனையையும் இழந்து தவித்த குடும்பங்களுக்கு உதவித்தொகையாக வழங்கப்பட்டது வெறும் இருபத்தி ஐயாயிரம் ரூபாய் மட்டுமே. அத்துடன் வீட்டுத்திட்டம் என்ற பெயரில் 'நியாப்' திட்டத்தால் வழங்கப்பட்டது மூன்று இலட்சத்து முப்பதாயிரம் ரூபாய் மட்டுமே. பின்வந்த இந்திய வீட்டுத்திட்டத்துக்கு ஐந்து லட்சத்து ஐம்பது ஆயிரம் ரூபா. இந்த வீட்டுத்திட்டங்களால் பலர் கடனாளிகளாகித் தவித்துக் கொண்டு இருக்கும் நிலையிலேயே பொருத்துவீட்டை தமிழ் மக்களின் முதுகில் சுமத்த முயல்கிறார் பழைய இரும்பு வியாபாரிகளின் தரகர், அமைச்சர் சுவாமிநாதன். இதை ஏன் வெள்ளப்பெருக்கில் அழிவுகளைச் சந்தித்த தென்பகுதி மக்களுக்கு வழங்கக்கூடாது? வெள்ளத்தால் ஏற்பட்ட அழிவுக்கு நட்ட ஈடாக அரசு இருபத்துஐநது இலட்சம் ரூபா பணம் வழங்குகிறது. அத்துடன் வீடு கட்டுவதற்கும் மேலதிகமாகப் பணம் வழங்க உள்ளது. சிங்கள அரசாலும் பன்னாட்டுத் தரப்புக்களாலும் சிங்கள மக்களுக்கு வழங்கப்பட்ட நிவாரண உதவித் தொகையில் பத்தில் ஒருபங்குகூட போரால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு வழங்கப்படவில்லை. சுவாமிநாதன் ஒரு தமிழராய் இருந்தும் இதைச் சிந்தித்துப் பார்ப்பதாய் இல்லை. வடக்கின் தலைமைகளும் இதைப் பொருட்ப்டுத்துவதாகத் தெரியவில்லை. பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்த கதைபோன்ற நிலைதான் எமக்கு! இவற்றுக்கெல்லாம் இயற்கைதான் பதில் கூறவேண்டும் என்பதைத் தவிரவேறு என்னதான் கூற இயலும்?

தே.மாயன்
கிளிநொச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் தொடக்க நிகழ்வு

இலங்கை மத்திய வங்கியின் கீழ் நிதி சார் வாடிக்கையாளர் சேவைகளை வழங்கிவரும் தேசத்தின் வீடமைப்பு வங்கியான அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் புதிய கிளை வவுனியாவில் கடந்த புதன் கிழமை ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வின் முதன்மை விருந்தினராக வங்கி ஆலோசனை மற்றும் வழிகாட்டல் பட்டயக்கணக்காளரும் அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் பொது முகாமையாளருமான டபிள்யூ. எம். தயாசிங்க கலந்துகொண்டு நவீனமயப்படுத்தப்பட்ட வங்கியின் புதிய கிளையை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து வாடிக்கையாளர்களுக்கான கணக்கினையும், சிறுவர்களுக்கான கணக்குகளையும் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார். இந்தநிகழ்வில் சர்வமதத்தலைவர்கள், இலங்கை வங்கி ஊழியர்கள், சங்க உறுப்பினர்கள், வவுனியா கிளை முகாமையாளர், உத்தியோகத்தர்கள். அரச, தனியார் வங்கிகளின் முகாமையாளர்கள், பொதுமக்கள், வாடிக்கையாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

## சிறிலங்கன் விமான சேவைக்கு சொந்தமான விமானம் திருப்பி ஒப்படைப்பு

இலங்கையிடமிருந்து பாகிஸ்தான் குத்தகைக்குப் பெற்றிருந்த சிறிலங்கன் விமான சேவைக்குச் சொந்தமான விமானத்தை மீண்டும் இலங்கையிடமே திருப்பி ஒப்படைக்க தீர்மானித்துள்ள தகவல் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விமானத்தை பயணத்தில் ஈடுபடுத்தி பெறப்படுவதான வருமான ஈட்டத்தில் பின்னடைவுகள் இருப்பதான காரணங்களை சுட்டிக்காட்டியே விமானத்தை திருப்பி ஒப்படைப்பதற்கான முடிவுகளை பாகிஸ்தான் எடுத்துள்ளதாக கூறப்படுகின்றது.

முன்னதாக தவணைக் கொடுப்பனவு முறைமையின் கீழாக ஏ.330 ரக விமானமொன்றையே பாகிஸ்தான் இலங்கையிடமிருந்து பெற்றிருந்தது. இந்த விமானம் லண்டன் மற்றும் இஸ்லாமாபாத் விமான நிலையங்களுக்கிடையில் போக்குவரத்தில் ஈடுபடுத்தப்படவிருந்தமை நோக்கத்தக்கது.

இலங்கையிடம் இருந்து விமானக் கொள்வனவு செய்யப்பட்டதும் பாகிஸ்தானின் பெயருக்கு விமானத்தின் பெயர் மாற்றம் செய்யப்பட்டிருந்ததாகவும் தற்பொழுது மீண்டும் சிறிலங்கன் விமான சேவையின் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 'சுவசக்தி' கடன் வழங்கல் சேவை உத்தியோகபூர்வமாக ஆரம்பம்

10 மில்லியன் வேலைவாய்ப்புக்களை உருவாக்குதல் என்ற அரசின் முயற்சிக்கு அமைவாக இலங்கை வங்கி அதன் கிளை வலையமைப்புக்கு ஊடான 'சுவசக்தி' கடன்களை வழங்கும் சேவையை அண்மையில் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்துள்ளது.

இதன்பிரகாரம் இலங்கை வங்கியின் தலைவர் றொனால்ட் சி.பெரேராவின் அனுசரணையுடன் பொது முகாமையாளர் டி.எம் குணசேகர், பிரதிப் பொது முகாமையாளர் சி.அமரசிங்க மற்றும் கூட்டாண்மை உறுப்பினர்கள், நிறைவேற்று முகாமைத்துவ உறுப்பினர்கள் ஆகியோரின் பங்களிப்புடன் வங்கியின் கிளைகளுக்கு ஊடான 'சுவசக்தி' கடன்களை வழங்கும் திட்டம் இடம்பெற்றது.

குறிப்பாக இலங்கை மத்திய வங்கி தேசிய கொள்கைகள், பொருளாதார விவகாரங்கள் அமைச்சுடன் இணைந்து நாட்டில் தொழில் முயற்சிகளையும் வேலைவாய்ப்புக்களையும் முன்னின்று செய்தல் என்ற நோக்கத்தின் வெளிப்பாடாக 'சுவசக்தி' கடன் திட்டத்தை வடிவமைத்துள்ளமை நோக்கத்தக்கது.

இந்த நிகழ்வை முன்னிட்டு தகுதியுள்ள இலங்கை வங்கி வாடிக்கையாளர்களுக்கும் அன்றைய தினம் நிதி வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# சதொச நிறுவனங்கள் லாபம் ஈட்டும் வகையில் மாற்றமடைந்துள்ளன

### கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சர் ரிசாத் பதியுதீன் தெரிவிப்பு



லங்கா சதொச நிறுவனம் தற்போது லாபமீட்டும் நிறுவனமாக மாற்றமடைந்துள்ள கருத்து கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சர் ரிசாத் பதியுதீனால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பண்டாரநாயக்க பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றதான கலந்துரையாடல் நிகழ்வு ஒன்றின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும், "அரசு ஆட்சியை பொறுப்பேற்கும் வேளையில் சதொச நிறுவனம் நட்டத்தில் இயங்கிக் கொண்டிருந்தது. இந்த நிறுவனத்தின் களஞ்சியசாலைகளில் காலாவதியான பொருள்கள் விநியோகச் செயற்பாடுகளின்றி தேங்கியிருந்தன. தவிர பல வருடங்களாக அவற்றுக்குரித்தான கணக்கு ஆவணங்கள் எவையும் பேணப்படவில்லை.

அதேபோன்று சதொச கிளை அலுவலகங்கள் முன் எப்போதும் வலையமைப்பாக இயங்கியிருக்கவில்லை. ஆனாலும் தற்போது நாடு முழுமைக்குமாக பல கிளை அலுவலகங்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன் அவை பலமான வலையமைப்பாக உருவாக்கப்பட்டு இயங்கு நிலை பெற்றுள்ளன.

தற்போதைய கூட்டு அரசானது இந்த விடயங்களைப் பொறுப்பேற்றதன் பின்னதாக இலாபமீட்டும் நிறுவனமாக லங்கா சதொச மாற்றமடைந்துள்ளது. இவற்றின் வினைத்திறனான செயற்பாடுகளுக்காக பன்னாட்டு ரீதியிலே அங்கீகாரம் பெற்று நிறுவனங்களிடம் இருந்து ஆலோசனைகளும் பெறப்பட்டுள்ளன.

இந்த வருட இறுதிக்குள்ளாக சதொச கிளைகளின் மொத்த எண்ணிக்கையானது 500 ஆக அதிகரிக்கப்படும்" - எனவும் தெரிவித்துள்ளார்.

## பொருளாதார அபிவிருத்தித் திட்டம் தொடர்பில் தலைமை அமைச்சர் விளக்கம்

### சுற்றுலாத்துறை, விவசாயம் மற்றும் மீன்பிடி துறைகளை அபிவிருத்தி செய்யத் தீர்மானம்



சுற்றுலாத்துறை, விவசாயம் மற்றும் மீன்பிடி உள்ளடங்கலான அனைத்துத் துறைகளையும் இனங்கண்டுகொண்டு அந்த துறைகளை அபிவிருத்திப் பாதையில் முன்னேற்ற இரண்டு வலயங்களை அமைக்கவுள்ளதான தகவலை தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க வெளிப்படுத்தியுள்ளார்.

அலரி மாளிகையில் அண்மையில் இடம்பெற்றிருந்த வைபவம் ஒன்றின் போது தேசிய பொருளாதார அபிவிருத்தித் திட்டம் குறித்து விளக்கமளிக்கும் போதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், இந்த திட்டம் குறித்து கருத்துரைத்த அவர், "தேசிய பொருளாதார அபிவிருத்தி என்ற எண்ணக்கருவின் கீழாக அமையவுள்ள இரண்டு பெரிய வலயங்களுள் இரண்டு விமான நிலையங்கள் மற்றும் இரண்டு துறைமுகங்கள் அமையப்பெறவுள்ளன. கண்டியிலிருந்து அம்பாந்தோட்டை வரை மட்டுமல்ல வெல்லவாய, மொனராகலை வரை மிகப் பரந்த அபிவிருத்தி வலயங்களை உருவாக்கவுள்ளோம். அத்துடன் திருகோணமலைத் துறைமுகத்தின் அபிவிருத்தி குறித்து சிங்கப்பூர், இந்தியா, ஜப்பான் ஆகிய நாடுகளின் அரசுடன் நாம் பேசிவருகிறோம். போர் காரணமாக சிதைவடைந்துள்ள வடமாகாணத்தில் விவசாயம், கைத் தொழில்துறை ஆகியவற்றை அபிவிருத்தி செய்ய வடக்கு வலயத்தில் விசேட திட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளோம்" - என்றார்.


CSE COLOMBO STOCK EXCHANGE

கொழும்பு பங்குப்பரிவர்த்தனை - 147-2/3, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் - 212221455

29/6/2017 www.cse.lk

பங்குச்சந்தைத் தகவல்கள்

| சுட்டிகள் | | இன்று | நேற்று |
|---|---|---|---|
| ASPI | 5.45 | 6,702.53 | 6,697.08 |
| S&P SL20 | 4.75 | 3,903.23 | 3,898.48 |
| வியாபாரப்புரள்வு | | 539,307,710 | 1,095,786,620 |
| உள்நாடு:- கொள்வனவு | | 278,201,856 | 737,683,780 |
| விற்பனை | | 300,267,776 | 946,268,740 |
| வெளிநாடு:- கொள்வனவு | | 261,105,872 | 358,102,784 |
| விற்பனை | | 239,039,952 | 149,517,824 |



| கம்பனி-அதிகூடிய பங்குப்பரிமாற்றம் | குறியீடு | இறுதிவிலை | பங்குகள் | புரள்வு (Rs) |
|---|---|---|---|---|
| இலங்கை கொமர்ஷல் வங்கி - | COMB.N | 139.50 | 854,039 | 119,562,325 |
| கேமாஸ் ஹோல்டிங்ஸ் | HHL.N | 149.90 | 551,009 | 82,590,822 |
| மெல்ஸ்ரோஸ்கோப் | MELS.N | 68.00 | 638,626 | 43,423,782 |
| சிலோன் கொஸ்பிரல் | CHL.N | 100.00 | 402,823 | 40,282,250 |
| தேசிய அபிவிருத்தி வங்கி | NDB.N | 143.50 | 210,279 | 30,164,621 |
| டெக்ஸ்சர்ட் ஜேர்சி லங்கா | TJL.N | 41.60 | 604,235 | 25,085,735 |
| சம்பத் வங்கி | SAMP.N | 286.50 | 68,307 | 19,583,551 |
| அக்சஸ் எஞ்யினியறிங் | AEL.N | 25.60 | 550,403 | 14,115,515 |
| ஹேலிஸ் | HAYL.N | 300.00 | 37,306 | 11,127,591 |
| லங்கா மில் பூட் | LMF.N | 137.00 | 77,382 | 10,446,562 |

- பங்குலாபம் -

| | |
|---|---|
| சதோசா மேட்டார் | - ரூபா 5:00 |
| சிஜசி ஹோல்டிங்ஸ் | - ரூபா. 1:00 |
| டோக்கியோ சிமேன் | - ரூபா. 1:87 |

| சந்தைக் குறிகாட்டிகள். | |
|---|---|
| கம்பனிகள் | 296 |
| பரிமாற்றத்தில் | 244 |
| விலை உழைப்பு | 11.4 |
| புத்தகப்பெறுமதி | 1.5 |
| பங்குலாப விளை | 2.6 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி பொ.திலகவதி



# இறை நம்பிக்கை பக்திக்கு வழிகாட்டும்

இரணியன் என்று ஓர் அசுரன் இருந்தான். அவன் பல்லாயிரக்கணக்கான வருடங்கள் தவம் புரிந்து பிரம்மாவிடம் இருந்து பெற்ற வரங்கள் பலவாகும். அவற்றுள் பிரதானமானது மண்ணிலும் விண்ணிலும் சாவில்லை. ஆண்,பெண், அலி எவராலும் அழிவில்லை.நீர் நெருப்பு, காற்று முதலியவைகளாலும் முடிவில்லை. மும்மூர்த்திகளாலும் முடிவில்லை. வீட்டுக்கு வெளியேயும், உள்யேயும் சாவில்லை. பகல்,இரவு இரண்டிலும் சாவில்லை என்பதே.

தவ மகிமையாலும்,வலிமையாலும் திருலோகங்களையும் தன் ஆட்சிக்குட்படுத்திக் கொண்டு திருமூர்த்திகளது திருநாமங்களை அனைவரும் உச்சரிப்பதை தவிர்த்தான். தன் பெயரையே சதா தியானித்து வணங்கும்படி கட்டளையிட்டான். அந்தணர்கள் மேற்கொண்ட வேள்விகளையும், தேவர்கள் பொருட்டு அளிக்கப்படும் அவிர்ப்பாகங்களையும் தானே பெற்றான். தனக்கு நிகர் எவருமில்லை எனக்கூறி காலத்துடன் போட்டியிட்டு இடரான செயல்களை செய்து வந்தான்.

**இரணிய கசிபுவின் புதல்வன் பிரகலாதன்**

ஸம்ஹரதன், அனுஹரதன், ஹரதன், பிரகலாதன் ஆகியோர் இவனது நான்கு புதல்வர்களாவர். இவர்களுள் பிரகலாதன் புலி வயிற்றில் பசு பிறந்தது போலப் பதுமையான இனிய குணமுடையவனாகப் பிறந்தான். இந்தப் பாலகனை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்த்து வந்தான். பருவமடைந்ததும் வேதியனொருவனை அழைப்பித்து வித்தியாரம்பம் செய்விக்கச் சொன்னான். அம்மறையோனும் வித்தியாரம்பம் செய்வதற்கு முன்பாக பாலகனை நோக்கி வழக்கம்போலவே 'இரணியாயநம' என்று துதிபாடும் படி சொன்னான்.இதை கேட்ட பாலகனும் தனது இரு செவிகளையும் கைகளால் பொத்திய படியே இது என்ன ஆச்சரியம் 'ஓம் நமோ நராயணா..!' என்றல்லவோ எண்ணித் துதிக்க வேண்டும் என்று மறையோனிடம் எடுத்துரைத்தான். அந்தத் திவ்விய நாமத்தையே ஓதியபடி உள்ளம் குளிர்ந்தான்.

இதைக் கேட்டபடியே செய்வதறியாது திகைத்துப் போன குருவானவரும் குழந்தாய் என பாலகனை விழித்தார். பின்பு அவனை நோக்கி 'என்னையும் கெடுத்தாய், நீயும் கெட்டாய். தேவரும் இரணியாயநம என துதிப்பாரேயன்றி நீ சொன்ன மந்திரத்தை சொல்லார். உன் தந்தையின் ஆணையை அறியாது இவ்விதம் சொன்னாய்" என்று நடுநடுங்கினான். பாலகனான பிரகலாதனும் ஐயா...! 'ஓம் நமோ நாராயணா' என்ற நாமத்தை கேட்க ஏன் இவ்வளவு பயம் கொள்கிறீர்...? என வினவினான். அந்த அந்தணரும் பணிவோடு, உமது தந்தையின் கட்டளையால் மூவுலகத்தோரும் 'இரணியாயநம' என்ற நாமத்தைச் சொல்லிய பின்னரே சகல காரியங்களையும் செய்கிறார்கள் என்றார்.

**இறை நாமத்தின் ஒப்புவித்தல்**

மறையோனாக அந்தணர் ஒப்புவித்த விடயங்களைக் கேட்ட பாலகன் பிரகலாதனும் அவரைநோக்கிய படி ஆசிரிய சிரேஷ்டரே, ஆதி பகவனது பெயரையன்றி வேறு எதையும் நான் என் நாவினால் உரையேன் எனப் பதிலுரைத்தான். அந்தணரும் இரணிய மன்னனின் அவையை அடைந்து அரசே, 'நின் மைந்தன் தங்கள் திருநாமத்தைச் செப்பாது நிற்கின்றான். என்ன செய்வேன் என் அரசே..!' எனக் கூறி அழுதான். இதைக் கேட்ட மன்னவனும் அந்தணர் திலகே..! எவரும் சொல்லிவிடாத எம் மொழியை என் பாலகன் சொன்னான். அதை சொல்லும் என்றான். அந்தணரும் பயமேலீட்டோடு அந்தோ. அந்தச் சொல்லைச் சொல்ல என் நா எழவில்லை.இடம்தரவில்லை என்றான்.

அத்தனை விடயங்களையும் பொறுமையோடு கேட்டிருந்த இரணிய கசிபு மன்னனும் காவலாளனை அழைப்பித்தான். என் மகனை என்முன்னாய் அழைத்து வருக என்று ஏவல் புரிந்தான். கணப்பொழுதில் பாலகன் பிரகலாதனை மன்னவன் முன்பாகக் கொண்டு வந்து நிறுத்தினர். தந்தையை வணங்கியபடி நின்ற மைந்தனை இரணிய கசிபு வாரியெடுத்து மார்புறத்தழுவினான். என் குலக்கொழுந்தே..! மறையோன் உரைத்தமொழியை உரையாது நீர் மொழிந்த மொழியாது என்ன எனக் கனிவோடு வினவினான்.பாலகன் பிரகலாதனும் ஆசுவாசமாகத் தன்னை சுதாகரித்துக்கொண்டு அது வேறொன்றுமல்ல தந்தையே, எம் பெருமானை மேன்மையுறச் செய்யும் 'ஓம் நமோ நாராயணா' எனும் திருநாமமே அது.அதையே நான் கூறினேன் என்றான். பொறுமையிழந்து கோபமுற்ற இரணிய கசிபு மன்னன் இதற்குதான் உன்னை பெற்றெடுத்தேனா எனச் சினம் கொண்டு வெகுண்டான்.எதையும் பொருட்படுத்தாத பாலகன் பிரகலாதனோ தந்தையை நோக்கிய படி, 'தங்கள் பெயரை எவரும் ஓதி உய்ய வேண்டும் என்பது தகுமோ..?' எனப் பணிவுடன் சொன்னான்.செய்வதறியாது மன்னவனும் 'இப்பயல் குலத்தைக் கொடுக்க வந்த கோடரிக்காம்பு. என் மகன் எனக் கூறுவது தகாது' என வார்த்தைகளின் கொடூரம் கொண்டு புசற்றினான்.

> இறை எங்கும் பரந்துள்ளது.தன் பக்தர்களை எப்பொழுதும் காத்தருளும்.இறையிடம் கொண்ட மாறாத நம்பிக்கை பக்திக்கு என்றும் வழிகாட்டும். கொடியவர்கள் தண்டிக்கப்படுவார்கள் இதைத் தெரிந்துகொள்ள வேண்டும்.நல் மனிதர்களாய்ப் புரிந்துகொள்ள வேண்டும்.

**துன்பக் களைவும் நரசிம்ம அவதாரமும்**

பின்பு அஸ்திரங்களை பிர யோகித்தும், நெருப்பிலிட்டும், நாகங்களை ஏவிவிட்டும், தாயைக் கொண்டு கொடிய நஞ்சைப் பருகச் செய்தும் பாலகன் பிரகலாதனை தன் மகனென்றும் பாராது துன்புறுத்தினான். இறுதியில் அவனது செயல்நிலைகள் எவையும் பலன் தரவில்லை.இரணிய கசிபு கோபமுற்றவனாய் பிரகலாதனை விழித்தான், 'உன் ஹரி எங்கிருக்கிறான். அவன்என்முன்வருவானா..? என வினவினான். பாலகனான பிரகலாதனோ இரணிய கசிபுவை அன்போடு அப்பா என்று அழைக்காது அரசே என்று விழிப்பிட்டு 'அவன் எங்கும் உள்ளான். தூணிலுமுள்ளான், துரும்பிலுமுள்ளான். நீர் சொன்ன சொல்லிலும் உள்ளான்' என்றான். உடனேயே இரணியனும் சினம் கொண்டவனாய் தன்னருகே நிமிர்ந்து நின்ற தூணைக் கையால் உதைத்து எங்கே அவன்..? என்று பலத்த குரலில் கூக்குரலிட்டான்.அந்த சந்தர்ப்பத்திலே தூணிலிருந்து நரசிம்ம மூர்த்தி வெளிப்பட்டார். இரணியனை தம் மடி மீது தூக்கி நிறுத்தினார். தனது கூரிய நகங்கள் கொண்டே அவன் வயிற்றையும் கிழித்தார். பூமியும் இல்லை வானும் இல்லை. அரண்மனையின் கடைவாயிற்படியில் உள்ளும் அல்ல வெளியும் அல்ல. சந்தியகால காலத்தில் காலையும் அல்ல இரவும் அல்ல இரணிய கசிபு மன்னனை கொன்று அவனது குடலை மாலையாக அணிந்து கொண்டார் நரசிம்ம மூர்த்தி.

இரணியனைக் கொன்ற பின்பும் நரசிம்ம மூர்த்தியின் சினம் சாந்தமுறவில்லை. தேவர்களும் அவ்விடம் வந்துவிட்டார்கள்.செய்வதறியாது மகாலட்சுமியை அழைத்து நரசிம்ம மூர்த்தியிடம் போகச் சொன்னார்கள். மகாலட்சுமியோ மகாவிஷ்ணுவின் கோர உருவத்தைப் பார்த்த மாத்திரத்திலேயே திரும்பி வந்து தன்னிலையை அடைந்தார். இந்த சந்தர்ப்பத்திலே பிரம்மா ஓர் மாற்று யோசனையைக் கண்டு கொண்டார்.பாலகன் பிரகலாதனை அழைத்து குழந்தாய்..! நீ சென்று நரசிம்மமூர்த்தியை சாந்தப்படுத்து என்றுரைத்தார். பிரகலாதனும் அவருடைய கூற்றினை ஒப்புதலோடு ஏற்றுக்கொண்டான். பகவானின் அருகில் சென்று சாஸ்டாங்கமாக விழுந்து வணங்கியபடி தரையில் படுத்துக் கொண்டான்.

**பக்தியின் மேலீடும் அருளும்**

பகவானும் சினம் தணிந்தார். பாலகன் பிரகலாதனை தூக்கி தம் மடிமீது இருத்திக் கொண்டார். அன்பு அதிகமாகவே நாக்கால் அவன் தலையை வருடினார். பின்பு 'பிரகலாதா...! உன் பக்தி மிகவும் அபாரமானது. உனக்கு விருப்பமான வரம் கேள்' என்றார். பிரகலாதனும் பகவான் மீது பக்தி கொண்டவனாய் 'நான் என்பில்லாத புழு எனும் பிறவியை அடைந்தாலும் அப்போதும் கூட உம்மிடத்தில் பக்தி மறவாதிருக்க வேண்டும்' என்பதே எனது விருப்பம் என்றான்.மறுப்பேதுமின்றி அவன் வேண்டுதலை ஏற்றுக்கொண்டார் நரசிம்மமூர்த்தி.

பின்பு குழந்தாய் என விழித்து, வேறு வரம் கேள் என்றும் பாலகன் பிரகலாதனைப் பணித்தார். பிரகலாதனும் 'அப்படி நீங்கள் வரமருள்வதெனில் என் தந்தை தங்களை மோசமான முறையில் நிந்தித்து விட்டதை மன்னித்தருள வேண்டும். அவர் செய்த பாவங்களை நீக்கி அவரைப் புனிதனாக்குங்கள்' என்றான். அத்தனையையும் செவிமடுத்துக்கொண்ட நரசிம்ம மூர்த்தியும் 'பிரகலாதா...! உன்னைப்போன்ற பக்தனைப்பெற்ற தந்தை தன்னாலேயே புனிததன்மை அடைந்து விடுவான்' என்று அருளுரை பகர்ந்து சாந்தம் கொண்டார்.

இறுதியாக பிரமன் ஓமம் வளர்க்க, முனிவர்கள் வாழ்த்தெழுப்ப, பிரகலாதன் முடி சூடிக்கொண்டான்.

ஆக, இறை எங்கும் பரந்துள்ளது.தன் பக்தர்களை எப்பொழுதும் காத்தருளும்.இறையிடம் கொண்ட மாறாத நம்பிக்கை பக்திக்கு என்றும் வழிகாட்டும். கொடியவர்கள் தண்டிக்கப்படுவார்கள்.தெரிந்துகொள்ள வேண்டும்.நல் மனிதர்களாய்ப் புரிந்துகொள்ள வேண்டும்.

அன்பரின் அகமாகிய மலரில் வீற்றிருக்கும் கடவுளின்



சிறந்த திருவடிகளை இடைவிடாமல் நினைந்திருப்பவர்கள் இன்ப உலகில் என்றும் நிலைத்து வாழ்வர்.

*"மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்*
*நிலமிசை நீடு வாழ்வார்"*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2017 ராகு, கேது பெயர்ச்சிப் பலன்கள்



## மேடம்

அசுவினி, பரணி
கிருத்திகை 1ம் பாதம்

எண்ணியதை முடிப்பவர்களே! ஜீலை 27ஆம் திகதி தொடக்கம் 2019 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 13 ஆம் திகதி வரை உங்கள் ராசிக்கு 4இல் ராகுவும் 10இல் கேதுவும் சஞ்சரிக்க உள்ளார்கள்.

**ராகுவின் பலன்கள்:** எதையும் சமாளிக்கும் மனப்பக்குவம் ஏற்படும். சிலருக்குக் குழந்தை பாக்கியம் கிடைக்கும். பூர்வீகச் சொத்து பிரச்சினை முடிவுக்கு வரும். பிள்ளைகளின் உத்தியோகம், உயர் கல்வி தொடர்பான முயற்சிகள் சாதகமாகும். கணவன் மனைவி இடையில் அந்நியோன்யம் அதிகரிக்கும். தாயாரின் உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படக்கூடும். எந்த ஒரு காரியத்திலும், பலமுறை யோசித்துச் செயல்படுவது நல்லது.
ஜீலை 27 முதல் 2018 ஆம் ஆண்டு ஏப்ரல் 4 ஆம் திகதி வரை புதனின் ஆயில்யம் நட்சத்திரத்தில் செல்வதால், மறைமுக எதிரிகளால் ஆதாயம் உண்டாகும். இளைய சகோதர வகையில் கருத்து வேறுபாடு ஏற்பட்டாலும் அன்பு குறையாது. செலவுகள் துரத்தும்.
ஓரளவு வசதி வாய்ப்புக்கள் பெருகும். வெளிநாடு தொடர்புடைய நிறுவனத்தில் வேலை கிடைக்கும். அரசால் அனுகூலம் உண்டாகும். சிலர் புதிய தொழில் தொடங்குவார்கள்.
பிரச்சினைகளைச் சமாளிக்கும் சக்தி பிறக்கும். சுப நிகழ்ச்சிகளால் வீடு களைகட்டும். திருமணப் பேச்சுக்கள் சாதகமாக முடியும். வீடுகட்ட வங்கிக் கடனுதவி கிடைக்கும். வழக்குகள் சாதகமாகும். பொருள்கள் களவு போகக்கூடிய வாய்ப்புண்டு.
மாணவ மாணவியருக்கு இலக்கியப் போட்டிகளில் பரிசும் பாராட்டும் கிடைக்கும். வியாபாரத்தில், புதியவர்களை நம்பி முதலீடு செய்ய வேண்டாம். தற்போது கடையை வேறு இடத்துக்கு மாற்ற வேண்டாம். உத்தியோகத்தில் வேலைச்சுமையால் மன இறுக்கம் அதிகரிக்கும். உயரதிகாரிகளிடம் எச்சரிக்கையாக இருக்கவும். கலைத்துறையினரே! வதந்திகளைக் கடந்து முன்னேறுவீர்கள். சம்பள விடயத்தில் கறாராக இருக்கவும்.

**கேதுவின் பலன்கள்:** தற்போது கேது 10ஆம் வீட்டில் அமர்வதால், ஒரேநேரத்தில் பல வேலைகளையும் பார்க்கவேண்டி இருக்கும். கொடுத்த வாக்கைக் காப்பாற்ற போராட வேண்டியிருக்கும். குடும்பத்தினரை அனுசரித்துச்செல்வது நல்லது.
எதிர்பார்க்கும் பணம் கைக்கு வரும். சகோதரர்கள் உதவுவர். உடல் உஷ்ணத்தால் அடிவயிற்றில் வலி போன்ற உபாதைகள் உண்டாகும். நீண்ட நாள் விருப்பங்கள் நிறைவேறும். காரியங்கள் சுலபமாக முடியும்.
2018ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 7ஆம் திகதி முதல் 2019 பெப்ரவரி 13 ஆம் திகதி வரை சூரியனின் உத்திராடம் நட்சத்திரம் 2,3,4ம் பாதம் மகர ராசியில் கேது சஞ்சாரம் செய்ய இருப்பதால், எதிலும் தெளிவாக முடிவு எடுக்க முடியாமல் திணறுவீர்கள். பிள்ளைகள் கோபப்பட்டாலும் அவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. பூர்வீகச் சொத்தில் பிரச்னை உண்டாகும். வெளிவட்டாரத்தில் அலைச்சல் அதிகரிக்கும்.

## வரலாற்றில் இன்றைய தினம்



1859 - சாகசச் செயற்பாட்டாளரான பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த சாள்ஸ் புளொண்டின், இறுக்கமாகக் கட்டப்பட்ட கயிற்றின் மீது நடந்து நயாகரா நீர் வீழ்ச்சியைக் கடந்தார்.
1882 -அமெரிக்க அதிபர் ஜேம்ஸ் கார்பீல்டைப் படுகொலை செய்தமைக்காக சாள்ஸ் ஜே.கிற்று. வொஷிங்டனில் தூக்கிலிடப்பட்டார்.
1886-கனடா ஊடான கண்டங்களுக்கு இடையேயான முதலாவது புகையிரத சேவை, மொன்றியேலிருந்து ஆரம்பிக்கப்பட்டது.
1934 - ஜேர்மனியில் தனது அரசியல் எதிரிகளை வன்முறை மூலம் பதவியிலிருந்து அகற்றும் நைற் ஒப் லோங் நைப்ஸ் நடவடிக்கை அடொல்ப் கிட்லரால் மேற்கொள்ளப்பட்டது.
1937-உலகின் முதலாவது அவசர தொலைபேசி எண் 999 லண்டனில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.
1944 -இரண்டாம் உலகப் போர் நோர் மண்டி தரையிறக்கத்தின் ஒரு பகுதியான செர்போக் போர்த் தந்திரோபாயத்துக்கான பெறுமதிமிக்க துறைமுக மொன்று அமெரிக்கப் படைகளிடம் வீழ்ச்சியடைந்தது.
1960-பெல்ஜியத்திடமிருந்து கொங்கோ சுதந்திரம் பெற்றது.
1966-அமெரிக்காவில் மிகப் பெரிய பெண்கள் அமைப்பான `பெண்களுக்கான தேசிய அமைப்பு' உருவாக்கப்பட்டது.
1971 -சோவியத் சோயுஸ் 11 விண்கல வீரர் வாயு விநியோகம் தடைப்பட்டதால் உயிரிழந்தார்.
1977-தென்கிழக்காசிய ஒப்பந்த நிறுவனம் கலைக்கப்பட்டது.
1990 - கிழக்கு ஜேர்மனியும் மேற்கு ஜேர்மனியும் தமது பொருளாதாரத்தை ஒன்றிணைத்தன.
1997-ஹொங்கொங் மீதான இறைமையை ஐக்கிய இராச்சியம் மக்கள் சீனக் குடியரசிடம் கையளித்தது.
2005-பொதுக் கட்டமைப்புக்கு எதிரான மூன்று வழக்குகளும் ஒத்தி வைப்பு.
2005 - தனது மகள் இந்தியா வர விசா கோரி சிறையிலுள்ள நளினி மனுத் தாக்கல்.
2016- மனித உரிமைகள் சபை விவகாரத்தைக் கூட்டமைப்பு நிதானமாகக் கையண்டதால் வெற்றி கிடைத்தது என்கிறார் இரா.சம்பந்தன்.
2016-மனித உரிமைகள் கண்காணிப்பகம் இலங்கை அரசு மீது காட்டம். மைத்திரியின் கருத்துக்களாலும் அதிருப்தி.
2016 -வெளிநாட்டு நீதிபதிகளை உள்ளடக்குவது கட்டாயமென பன்னாட்டு பிரதி நிதிகள் திட்ட வட்டம்.
2016 - ஐ.தே.கவில் பொன்சேகா ஐக்கியம்.
2016- பயங்கரவாதச் சட்டத்தில் மாற்றங்கள் செய்யப்படும் என சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல தெரிவிப்பு.

## நாளை

**ஆனி - 17**
சனிக்கிழமை -01.07.2017
திதி:அட்டமி மு.இ. 11.19 வரை
நட்சத்திரம்: அத்தம் பி.இ.02.16 வரை
சுபநேரம்:02.56-04.26 வரை
ராகுகாலம்:08.56-10.26 வரை

# வெறுப்பைச் சம்பாதிக்கிறது வடக்கு மாகாண சபை

வடக்கு மாகாண சபையில் தினமும் நடக்கின்ற கூத்துக்களைப் பார்த்து, மாகாண சபைக்கு வாக்களித்த மக்கள் சலித்துப் போயிருக்கிறார்கள் வெறுத்து நொந்து போயிருக்கிறார்கள். தமது துன்பங்களை ஓரளவாவதற்கு தீர்த்து வைப்பார்கள் என்று நம்பி வாக்களித்து விட, வாக்கைப் பெற்றவர்கள் செய்கின்ற கைங்கரியங்களைப் பார்த்து வாக்களித்த மக்களுக்குத்தான் தலையிடியும், துன்பமும் அதிகமாய் வந்து சேர்ந்திருக்கிறது.
வடக்கு மாகாண சபை, மகிந்த அரசின் காலத்தில் செயற்பட ஆரம்பித்தது. முதலமைச்சர் உள்ளிட்ட ஆளும் கட்சியினர் ஒட்டுமொத்தமாகக் கொழும்பு அரசின் மீது பழியைப் போட்டுத் தமது செயற்திறன் இன்மையை மறைத்தார்கள். வடக்கு மாகாணத்தின் நிர்வாகச் சீத்துவக்கேட்டை மக்கள் உணர்ந்து கொண்டனர். ஆனால் எடுத்ததெற்கெல்லாம் ஆளுநர் முட்டுக்கட்டையாக இருக்கின்றார், கொழும்பு அரசு ஒத்துழைப்பதில்லை என்ற இவர்களது குற்றச்சாட்டில் உண்மை இருக்கலாம் என்று மக்கள் அப்போது கருதிக் கொண்டார்கள்.
ஆட்சி மாற்றத்தின் பின்னர் ஆளுநரும் மாற்றப்பட்டார். ஆனால் வடக்கு மாகாண சபையின் புராணம் மட்டும் மாறவில்லை. செய்யக் கூடியதையும் செய்யாமல் எல்லாவற்றுக்கும் இன்னொருவர் மீது பழியைப் போட்டுத் தப்பித்துக் கொண்டார்கள். 2015ஆம் ஆண்டு இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலின் போது, வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன், நடுநிலைமை வகிக்கப் போவதாகக் கூறினார். இதன் பின்புதான் வடக்கு மாகாண சபையின் ஆளும் கட்சி பிளவுபட்டது.
ஆளும் கட்சிக்குள்ளேயே எதிர்கட்சி தோன்றியது. விவசாய அமைச்சராக இருந்த ஐங்கரநேசன் மீது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு அது தொடர்பில் விசாரணை நடத்த வேண்டும் என்ற பிரேரணை, ஜி.ரி.லிங்கநாதனால் கொண்டு வரப்பட்டது. அப்போது தான் மாகாண சபையினுள் நடந்த கயிறுழுப்பு சந்திக்கு வந்தது. அமைச்சர் மீதான குற்றச்சாட்டு அரசியல் நோக்கம் கருதியது என்று முதலமைச்சர் முந்திக் கொண்டு அறிக்கை விட்டது, இறுதியில் அவருக்கே ஆப்பாகியது.
முரண்பாடுகள் நாளுக்குள் நாள் அதிகரித்தது. அவரவர் 'ஈகோக்களும்' இதில் புகுந்து விளையாடியது. இவற்றுக்கும் மேலாக, ஒவ்வொரு தரப்புக்கும் வெளியிலிருந்து ஆதரவு கொடுக்கும் அரசியல் சக்திகளும் இதனை வளர்த்து விட்டன.
மோதிக் கொண்டது என்னவோ மாகாண சபையின் ஆளும் கட்சிதான். தேர்தலில் ஒற்றுமை பேசி வாக்கைப் பெற்று அமர்ந்த உறுப்பினர்கள் 30 பேரும், மாறி மாறி ஒருவரையொருவர் கடிந்து கொண்டார்கள். இந்த முரண்பாடு இன்னமும் முற்றுப் பெறவில்லை. இரு தரப்பும் இப்போதும் போடும் ஆட்டங்களால் மக்கள் வெறுப்பின் உச்சத்தில் இருக்கின்றார்கள்.
இனியொரு தேர்தலில் மக்கள் முன் எவ்வாறு செல்லப் போகின்றோம் என்ற சிந்தனை இல்லாமல், இரு தரப்பும் செயற்பட்டு வருகின்றன. ஒருவரை ஒருவர் எப்படி வெட்டி வீழ்த்தலாம், குழிபறிக்கலாம் என்பதை மாத்திரமே இலக்காகக் கொண்டு செயற்பட்டு வருகின்றன.
இவற்றால் வருகின்ற பாதிப்புக்கள் அவர்களுக்கு மட்டுமல்ல மக்களுக்கும் உரியது. மக்கள் பற்றிச் சிந்திக்காத மக்கள் பிரதிநிதிகளாகத்தான் இவர்கள் இருக்கின்றார்கள். இதற்காக, இவர்களைக் குற்றம்சாட்டுகின்ற ஏனைய அரசியல்வாதிகளை யோக்கியர்கள் என்று கூறமுடியாது. அவர்களும் இவர்களைப் போன்று ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்தான்.




புதியதொரு அரசியல் கலாசாரம் உருவாகாதவரையில், எம்மை நாமே நொந்து கொள்வதைத் தவிர வேறு வழியில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** இடையூறு செய்பவரை அடையாளம் கண்டு விலகுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கும்.

**இடபம்:** குடும்ப சிரமம் பற்றி பிறரிடம் சொல்ல வேண்டாம். தொழில் வியாபாரத்தில் சுமாரான வளர்ச்சி இருக்கும். மிதமான இலாபம் கிடைக்கும். உடல்நலனில் அக்கறை தேவை.

**மிதுனம்:** உறவினர்களின் அன்பை பெற்று மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் தாராள பணவரவு கிடைக்கும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர்.

**கடகம்:** உங்களின் நற்செயல் பிறரால் விமர்சிக்கப்படலாம். சகதொழில் வியாபாரம் சார்ந்தவர்களுடன் சச்சரவு பேச வேண்டாம். அளவான பணவரவு கிடைக்கும். வெளியூர் பயணத்தில் திடீர் மாறுதல் உருவாகும்.

**சிங்கம்:** திட்டமிட்ட பணிகளை எளிதாக நிறைவேற்றுவீர்கள். தொழில் வளர்ச்சியால் வருமானம் பன்மடங்கு அதிகரிக்கும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். உறவினர்களுடன் சுற்றுலா செல்ல வாய்ப்புண்டு.

**கன்னி:** அறிமுகம் இல்லாதவரிடம் நெருக்கம் வேண்டாம். தொழில் வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு நிறைவேற தாமதமாகலாம். இலாபம் சுமாராக இருக்கும். பெண்கள் ஆடம்பரமாக செலவழிப்பர்.

**துலாம்:** தனித்திறமையை வெளிப்படுத்தி நற்பெயர் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வியத்தகு முன்னேற்றம் உண்டாகும். பிள்ளைகள் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**விருச்சிகம்:** கடந்த கால நற்செயலுக்கு உரிய நற்பலன் தேடி வரும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு எளிதாக நிறைவேறும். இலாபம் அதிகரிக்கும். எதிர்பார்த்த சுபசெய்தி வந்து சேரும்.

**தனுசு:** திட்டமிட்டு செயல்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் கடின உழைப்பு தேவைப்படும். பெண்களுக்கு சகோதர வழியில் உதவி கிடைக்கும். வீடு, வாகன வகையில் மராமத்து செலவு உண்டாகும்.

**மகரம்:** அன்றாட பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சிக்கான புதிய வாய்ப்பு கிடைக்கும். உறவினர் வருகையால் குடும்பச் செலவு அதிகரிக்கும். உடல்நிலை அதிருப்தியளிக்கலாம்.

**கும்பம்:** முக்கிய பணிகளை திட்டமிட்டு நிறைவேற்றுவீர்கள். குடும்பத்தினரின் ஒத்துழைப்பு கிடைக்கும். தொழில், வியா பாரத்தில் இருந்த போட்டி மறையும். இலாபம் அதிகரிக்கும். சுபச் செலவு செய்து மகிழ்வீர்கள்.

**மீனம்:** இடையூறாக செயல்பட்டவர் இடம் விலகிச் செல்வார். தொழில், வியாபார வளர்ச்சியால் இலாபம் அபரிமிதமாக இருக்கும். பணியாளர்களுக்கு எதிர்பார்த்த சலுகை கிடைக்கும்.

**யாத்திரி** @krthik
நீங்கள் அடிக்கடி கவனிக்கப்பட்டுக் கொண்டு இருக்க வேண்டுமெனில் எதிரியாக, துரோகியாக, இருந்தால் மட்டுமே சாத்தியம். அன்பு கவனிப்பாரற்றது.
6 339 285

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 4 | 7 | | 8 | | |
| | 7 | 1 | | | 6 | | 2 | |
| | | | | 5 | | 7 | | |
| | 4 | | | | | | 7 | 3 |
| | 8 | | 2 | 4 | 7 | | 5 | |
| 6 | 5 | 7 | | | | | 8 | |
| | | 6 | | 2 | | | | |
| | [illegible] | | 7 | | | 3 | 1 | |
| | | 5 | | 3 | 9 | | | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 1 | 5 | 7 | 4 | 8 | 9 | 3 | 2 |
| 7 | 8 | 9 | 6 | 3 | 2 | 5 | 1 | 4 |
| 4 | 2 | 3 | 5 | 1 | 9 | 7 | 8 | 6 |
| 3 | 4 | 1 | 2 | 7 | 5 | 8 | 6 | 9 |
| 2 | 5 | 6 | 9 | 8 | 3 | 1 | 4 | 7 |
| 9 | 7 | 8 | 1 | 6 | 4 | 2 | 5 | 3 |
| 8 | 9 | 4 | 3 | 5 | 7 | 6 | 2 | 1 |
| 1 | 3 | 2 | 8 | 9 | 6 | 4 | 7 | 5 |
| 5 | 6 | 7 | 4 | 2 | 1 | 3 | 9 | 8 |

சுடோக்கு
ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண் களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



# 'மாணிக்' விரைவில்

உச்சா பசங்க, மாமா மர்கையா வேற என்ன தமிழ் சினிமா இலக்கியம்தான்!
மேலே நீங்கள் படித்த இரண்டு வாக்கியங்களும் தமிழ் சினிமா ஒன்றின் பாட்டு வரிகளின் ஆரம்பம்.
மா.கா.பா.ஆனந்த் நாயகனாக நடிக்கும் மாணிக் படத்தில் இந்தப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன.
இந்தப் படத்தில் நாயகியாக சூஷா குமார் நடிக்கிறார். இரண்டாவது நாயகனாக வத்சன் நடிக்கிறார். அருள்தாஸ், ஏர்டெல் சூப்பர் சிங்கர் போட்டியில் கலந்துக்கொண்ட அனு, புஜ்ஜி பாபு, கோலிசோடா சீதா, ஜாங்கிரி மதுமிதா, சிவசங்கர், மனோபாலா உள்ளிட்ட பல முன்னணி நட்சத்திரங்களும் நடிக்கிறார்கள். மார்டின் இயக்கும் இந்தப் படத்தின் படப்பிடிப்பு முழுவதும் முடிவடைந்த நிலையில், தற்போது பின்னணி வேலைகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.
படம் குறித்து இயக்குநர் மார்டின் கூறுகையில், "ஆசிரமத்தில் வளர்ந்த நாயகன் மா.கா.பா.ஆனந்த் மற்றும் இரண்டாவது நாயகன் வத்சன் வீரமணி, இருவரும் ஒரு விடயத்தில் பெரிய அளவில் சாதிக்க ஆசிரமத்தில் இருந்து கிளம்புகிறார்கள், அப்படி அவர்கள் சாதிக்க நினைத்தது என்ன, அந்த சாதனை முயற்சியில் அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், இறுதியில் நினைத்ததை சாதித்தார்களா இல்லையா என்பதை சுவாரஸ்யமாக சொல்லியிருக்கிறோம். அவர்களின் சாதனை பயணம் எந்த விஷயத்திற்காக என்பது சஸ்பென்ஸ்," என்றார்.
தரன்குமார் இசையமைப்பில் மூன்று பாடல்கள். "உச்சாபசங்க", "மாமா மர்கையா", "அட பாவி" என்று தொடங்கும் இந்த மூன்று பாடல்களையும் மிர்ச்சி விஜய் எழுதியுள்ளார். எம்.ஆர்.பழனிகுமார் ஒளிப்பதிவு செய்யும் இந்தப் படத்திற்கு கே.எம்.ரியாஸ் படத்தொகுப்பு செய்கிறார். கலையை வினோத் நிர்மாணிக்க, ஆடை வடிவமைப்பை செந்தில்குமார் கவனிக்கிறார். ரஞ்சித், கே.ஆர்.பழனியப்பன், ஜெகன்நாதன் ஆகியோர் தயாரிப்பு நிர்வாகத்தை கவனிக்க, பி.ஆர்.ஓ பணியை சுரேஷ்சுகு கவனிக்கிறார்.
நகைச்சுவைப் படமாக உருவாகும் 'மாணிக்' படம் இன்னும் சில தினங்களில் வெளியாக உள்ளது.

**கூகுள்ல தேடி வெளிவராத தகவல் கூட...**



**பெண்கள் குழாயில் தண்ணீர் பிடிக்கும் போது வெளிப்பட்டு விடும்...**

**முகநூல், வட்சப்னா.. என்னன்னு தெரியாத பொண்ண லவ் பண்ணனும்டா...**



**அதுக்கு நீ ஆதிவாசி பொண்ணத்தான் லவ் பண்ணனும்**

**தலைமைத்துவம் என்பது உருவத்தைப் பொறுத்தது அல்ல**



**அது எம்முடைய நடத்தையைப் பொறுத்தது...!**

**பதில் சொல்ல முடியாத கேள்வி கேட்டா அது பொண்டாட்டி...**




**பதிலே இல்லாத கேள்வி கேட்டா அது குழந்தை...**



ஒரு வீட்டில திருடன் புகுந்துட்டான், வீட்டில உள்ள நகை, பணம் எல்லாத்தையும் சுருட்டிக் கிட்டு கிளம்புறப்ப அந்த வீட்டில உள்ள ஒரு சிறுசு பாத்திடுச்சி அது அவன பாத்து என்ன சொல்லிச்சி தெரியுமா...?
"மரியாதையா என் புத்தகப்பையையும் எடுத்துட்டு போ இல்லைன்னா அம்மாவ எழுப்பிடுவேன்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இராமாயணம் படைத்த வால்மீகி

அது ஒரு பெருங்காடு. மிருகங்களை வேட்டையாடி சீவியம் நடத்திவரும் வேடன் ஒருவன் அன்றைய வேட்டைக்காக அலைந்து கொண்டிருந்தான். வேட்டையில் அன்றைய உணவுக்குப் போதுமான மிருகம் கிடைத்துவிட்டால் அவன் திருப்தி அடைந்து வீட்டுக்குச் சென்று விடுவான்.
ஆனால் அன்றையதினம் தேவைக்கான வேட்டை உணவு மாலை வரை அவனுக்கு கிடைக்கவில்லை. ஏமாற்றம் அடைந்தவன் ஒரு மரத்தின் மேல் ஏறி உட்காந்திருந்து யோசனை செய்தான். அப்போது மூன்று வழிப் போக்கர்கள் தமது தலையில் மூட்டைகளைச் சுமந்த வண்ணம் வந்து கொண்டிருப்பது தெரிந்தது. உடனே மரத்தை விட்டுக் கீழே இறங்கி சற்று தள்ளியிருந்த புதர் மறைவில் ஒளிந்து கொண்டான். "கௌசி இன்று உனக்கு வேட்டை எதுவும் கிடைக்கவில்லை. வெறுங்கையோடு வீடு திரும்பாமல் வந்து கொண்டிருப்பவர்களது மூடைகளை என்றாலும் கைப்பற்றிச் செல்" என வேடனின் உள்மனம் உந்தியது. வந்துகொண்டிருந்த வழிப் போக்கர்களை வழி மறிந்தான் வேடன். கையிலே அம்பு வில்லும் மற்றும் மிருகங்களைக் கொல்லும் கொலைக் கருவிகளோடும் நின்ற வேடனின் கொடூரப் பார்வை அவர்களை வேடன் முன் சரணடைய வைத்தது. வழிப்போக்கரிடம் இருந்த மூடைகளை மிக எளிதில் கைப்பற்றி கைநிறையப் பொருள்களோடு வீடு நோக்கி நடந்தான் வேடன் கௌசிகன்.
அன்றிலிருந்து வேட்டையாடுவதில் அவன் மனம் செல்லவில்லை. கொள்ளையடிப்பதையே மனம் நாடியது. அடுத்தடுத்த நிலங்களில் இருந்து காட்டு வழியாக மற்றைய நிலங்களுக்குச் செல்லும் வியாபாரிகளையும், பயணிகளையும் மிரட்டி, பயமுறுத்தி கொள்ளையிடத் தொடங்கியவன். நாளடைவில் கொலையும் செய்யத் தொடங்கினான். வேட்டையாடுவதில் தொடங்கிய அவன் வாழ்க்கை வழிபறி கொள்ளை, கொலை என்ற புதிய பாதையில் சென்று கொண்டிருந்தது.
இவனது இந்த அநீதியான கொடிய செயல்களைத் தொடச்சியாக கவனித்து வந்த முனிவர் ஒருவர் "கௌசிகா! நீ ஆரம்பத்தில் மிருகங்களைக் கொன்று தீர்த்தாய். இப்போது மனிதர் பொருள்களைக் கொள்ளையிடுவதோடு, அவர்கள் உயிர் பறிக்கும் கொலைத் தொழிலிலும் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறாய். நீ செய்வது தவறு என்று உனக்குத் தெரியவில்லையா?" என்று கேட்டார்.
"என் குடும்பத்தைக் காப்பாற்றவே இப்படிச் செய்கிறேன்"என்றான் கௌசிகன். "அதற்காக அடுத்தவன் பொருளை அபகரித்தும் அடுத்தவனைக் கொன்றுமா? உன் குடும்பத்தை வாழ வைக்க வேண்டும்? நேர் வழியில் உழைத்து உன் குடும்பத்தை வாழவை. "சரி நீ செய்வது குடும்பத்துக்காக என்றால் நீ செய்யும் இந்தப் பாவத்தில் உன் குடும்பத்தவர் பங்கு கொள்வார்களை? எனக் கேட்டுப்பார்" என்றார் முனிவர்.
முனிவரிடம் விடைபெற்றுச் சென்ற கௌசிகன் தன் மனைவியிடம் பேசினான். வேட்டையாடல் பற்றிப் பேசும் போது பேசாதிருந்த அவன் மனைவி கொள்ளை கொலை பற்றி அவன் கூறியதும் வெகுண்டெழுந்தாள். "என்னையும் என் பிள்ளைகளையும் காப்பாற்றவே இப்படிச் செய்கிறேன் எனக் கூறி உன் பாவத்தில் எங்களையும் பங்கு போட வைக்காதே நீ செய்யும் பாவங்களின் சுமையை நீயே தாங்கிக் கொள். அதன் விளைவுகளும் உனக்கே. என்னையும் என் பிள்ளைகளையும் விட்டு விடு உனக்கு கடவுள் ஊனமில்லாத உடலைத் தந்துள்ளார். கஷ்டப்பட்டு உழைத்து எங்களைக் காப்பாற்று. அடுத்தவன் பாவம் எம்மைச் சேர வேண்டாம்" என்று ஆவேசமாகக் கூறினாள். மனைவியின் உரைகள் அவனைச் சிந்திக்க வைத்தன். அவரவர் சுமைகளை அவரவரே சுமக்க வேண்டும் என்பதை உணர்ந்தான். தான் செய்த கொலை கொள்ளைகளுக்காக வருந்தினான்.
ஒரு நொடியில் அவன் வாழ்க்கை மாறியது. கௌசிகன் முனிவரானான். பின்னாளில் கௌசிகன் என்ற இந்தக் கொள்ளைக்காரனே வால்மீகி என்ற முனிவராகி வடமொழியில் இராமாயணத்தைப் படைத்தார்.
**மனமாற்றம் மிருக குணம் உள்ளவனை மனிதனாக்கும். மனிதனைத் தெய்வமாக்கும்.**

# பூநாரை



வளைந்த அலகும் இளம் சிவப்பு நிற உடலும் கொண்டது நீர்கரையோரப் பறவை பூ நாரை. உப்புத் தன்மை அதிகமுள்ள ஏரிகளில் கடும் வெப்பத்தையும் தாங்கிப் பிழைக்கும். இவை கூடு கட்டி முட்டையிட்டு குஞ்சு பொரிக்கின்றன. இவை தமது கூட்டை சேற்று மண்ணைக் குவித்து கட்டுகின்றன. முட்டையிட்ட பின் ஆண், பெண் இரண்டுமே மாறி மாறி முட்டைகளை அடை காக்கும். பல்லாயிரக் கணக்கில் ஒன்றாகக் கூடி வாழ்வது இந்த நாரைகளின் இயல்பு. இத்தன்மையே இவற்றுக்குப் பாதுகாப்பும் அளிக்கின்றது.
நீண்ட கால்களையும் நீண்ட கழுத்தையும் நீட்டியபடி இவை கூட்டம் கூட்டமாகப் பறந்து செல்வது ஒரு கண் கொள்ளாக் காட்சியாகும். கால்களால் சேற்றைக் கிளறி வளைந்த அலகைக் கொண்டு நீரை அள்ளும் இந்தப் பூநாரைகள், அவற்றின் அலகினுள் இருக்கும் வடிகட்டும் அமைப்பைக் கொண்டு தமது இரையை மட்டும் எடுத்துக் கொள்கின்றன. இவற்றின் உணவாக மிதவை உயிரிகள், முட்டைப் புழுக்கள், சிறு மீன்கள் ஆகியவை அடக்கும். இவை உண்ணுகின்ற கூனியான இறால் போன்ற ஒரு வகை உயிரினம்தான் இந்த நாரைகளின் இளம் சிவப்பு நிறத்துக்கு காரணமாகும் எனக் கூறப்படுகிறது.



# விகடத்துணுக்குகள்



ஆசிரியர் :- பூமி தன்னைத் தானே சுற்றி சூரியனையும் சுற்றுமா? அல்லது சூரியன் தன்னைத் தானே சுற்றி பூமியையும் சுற்றுமா?
மாணவன் :- எனக்கு முதலில் தலையைச் சுத்துது சேர்.



தந்தை :- நீ எவர் கிட்ட பேசினாலும் டா.... டி போட்டு மரியாதைக் குறைவாகப் பேசக் கூடாது.
மகன் :- சரி... டி.... டா



நோயாளி :- முழுசா இரண்டு இடியப்பத்தைக் கூட சாப்பிட முடியல்லாமல் உள்ளது
மருத்துவர் :- என்னாலையும் முழுசா இரண்டு இடியப்பத்தைச் சாப்பிட முடியாது. பிச்சுத்தான் சாப்பிடலாம்.



ஒருவர் :- என் பூட்டை உடைத்து 5 லட்சம் கொள்ளை அடித்து விட்டார்கள்.
மற்றவர் :- பூட்டுக்குள் எப்பிடி அவ்வளவு பணம் வைத்திருந்தீர்கள்?

**மேலே உள்ள இரண்டு படங்களுக்கும் இடையில் 12 வித்தியாசங்கள் உள்ளன. கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்**







# நகைகளால் விளைந்த காவியங்கள்

பல காவியங்கள் எழுதப்படுவதற்கு பெண் நகைகள் காரணமாக அமைந்தன. மஹாகவி களிதாசரின் "சாகுந்தலம்" என்ற காவியம் துஷ்யந்தன் என்ற மன்னன் காட்டிலே வேட்டையாடச் சென்ற சமயத்தில் சகுந்தலை என்னும் பெண்ணைக் கண்டு விரும்பி மணந்து, பின்னர் பிரியும் போது தனது ஞாபகமாக அவளுக்கு அணிந்து சென்ற கணையாழியை (மோதிரம்) அவள் தவறவிட்டதால் உருவானது.
மதுரை மாநகரிலே தனது மனையாள் ஆகிய கண்ணகியின் காற்சிலம்பை விற்கச் சென்ற கோவலனை, அரசனின் காவலர்கள் கைது செய்து கள்வன் என்று கொன்றதால் கண்ணகியின் கற்பின் கனல் மதுரை மாநகரைக் கரித்ததால் தோன்றியது சிலப்பதிகாரம்.
பஞ்ச பாண்டவர்கள் நடாத்திய இராசசூய யாகத்துக்கு வருகை தந்த கௌரவர்களில் மூத்தவனான துரியோதனன் அங்கு தரைக்குப் பதிக்கப்பட்டிருந்த பளிங்குகளை நீரென்றும், நீர்த் தடாகங்களைப் பளிங்கென்றும் எண்ணி ஏமாந்து நிலை தடுமாறிய வேளை, அவன் செயலைப் பார்த்து பாண்டவர் மனைவி திரௌபதி நகைத்ததால் மூண்டதே பாரதயுத்தம். இந்த யுத்தத்தால் விளைத்தது மகாபாரதம்.
இராமாயண யுத்தம் நடைபெற்றதற்கும் நகைதான் காரணம். சூர்ப்பன (ந)கை காட்டிலே இராமனைக் கண்டு மையல் கொள்ள, அதனால் அவள் இலக்குவனால் மூக்கறுக்கப்பட்டதால் எழுந்ததே இராம இராவண யுத்தம். அதனால் எழுந்த காவியம் இராமாயணம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வட்டு. மத்தியின் பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூன்30
வட்டுக்கோட்டை மத்திய கல்லூரியின் பரிசளிப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணிக்கு கல்லூரி முதல்வர் திருமதி பஞ்சாட்சரம் தலைமையில் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

இந்தவிழாவில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், திருமதி யசோதா சரவணபவன் ஆகியோரும், சிறப்பு விருந்தினராக வலிகாமம் வலய கல்விப் பணிப்பாளர் செ. சந்திரராசாவும் கலந்து கொள்ளவுள்ளனர். நிகழ்வில் நிறுவுநர் நினைவுப் பேருரையை யாழ்ப்பாண பல்கலைக்கழக கல்வியியற்துறை முன்னாள் தலைவர் மா.சின்னத்தம்பி நிகழ்துவார் எனவும் தெரிவிக்கப்பட்டது. (21)

## முதியவரின் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், ஜூன்30
தெல்லிப்பளை வைத்தியசாலையின் பின்புறமாக உள்ள வத்தவிளான் பகுதியில் இருந்து நேற்று இரவு 9மணியளவில் முதியவர் ஒருவருடைய சடலம் கண்டுபிடிக்கப்பட்டது, என்று தெல்லிப்பளை பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம், கீரிமலையைச் சேர்ந்த குமாரசுவாமி (வயது-65) எனும் முதியவருடைய சடலமே மீட்கப்பட்டது.

வலிப்பு காரணமாக குறித்த முதியவர் கடந்த திங்கட்கிழமை தெல்லிப்பழை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு 5ஆம் இலக்க விடுதியில் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று முந்தினம் அவர் வைத்தியசாலையில் இருந்து காணாமற்போயிருந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (21,26)

## ஆனிப் பொங்கல்

யாழ்ப்பாணம், ஜூன்30
நீர்வேலி தெற்கு மனோன்மணி அம்மன் ஆலயத்தின் வருடாந்த ஆனிப் பொங்கல் உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறும் என அறிவிக்கப்பட்டது.
காலையில் சிறப்பு அபிசேகம், வழிபாடுகள் இடம்பெற்று இரவு 8மணிக்கு பொங்கல், கூட்டு வழிபாடுகள் இடம்பெறும் என மேலும் தெரிவிக்கப்பட்டது. (21, 17)

ස◎වර්ධන වාසනාව
Development Fortune
அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம் ▸ 52
சீட்டிழுப்பு திகதி ▸ 29.06.2017 வியாழக்கிழமை

வெற்றி இலக்கங்கள்: 25 40 50 55
சுப்பர் இலக்கம்: 05
அதிர்ஷ்ட மாதம்: பெப்.

| அடுத்த மிகப்பெரிய ஜக்பொட் | அடுத்த சுப்பர் ஜக்பொட் | அடுத்த ஜக்பொட் |
| --- | --- | --- |
| ரூ. 13, 211, 726/= | ரூ. 3,280, 292/= | ரூ. 1, 089, 140/= |

01.07.2017 ம் திகதி சனிக் கிழமை இளஞ்சிவப்பு நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் த சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 011 333 546-47 துரித அழைப்பு: 0114 824 824 www.dlb.lk

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### தவராசா தர்ஷிகா
(தங்கா)
30.06.2017

எமதருமை செல்வமே எமை விட்டு
நீ பிரிந்து ஆண்டுகள் ஐந்து
ஆனதம்மா ஆறவில்லை துயரம்
நீ பொழிந்த செல்லங்கள்
நாம் கொண்ட சந்தோசம்
எல்லாமே உன் மறைவால்
கனவாகிப் போனதம்மா

தோற்றம் 28.06.1994
மறைவு 26.06.2012

தம்பி அண்ணை சி. தவராசா
(உழவு இயந்திர உரிமையாளர்)
புதிய செம்மணி வீதி, லயன் வெளி,
கந்தசுவாமி கோயிலடி, கல்வியங்காடு.

## மரண அறிவித்தல்

பிறப்பு 23 . 02 . 1943



இறப்பு 27 . 06 . 2017

### திரு. சீனிவாசகம் தேவராஜா
(முன்னாள் பிரதம மருந்தாளர் – யாழ் போதனா வைத்தியசாலை)

யாழ். சரவணை மேற்கு வேலணையைப் பிறப்பிடமாகவும், கோண்டாவில் கிழக்கு, கொழும்பு கல்கிசை ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட சீனிவாசகம் தேவராஜா அவர்கள் 27-06-2017 செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னார், காலஞ்சென்ற சீனிவாசகம், மற்றும் செல்லம்மா (கனடா) தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரும், காலஞ்சென்றவர்களான வலந்தலை காரைநகரைச் சேர்ந்த வீரகத்தி தம்பிப்பிள்ளை, தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், உத்தரை அவர்களின் ஆருயிர்க் கணவரும், சயந்தன் (பிரித்தானியா), காண்டீபன், வாகீசன்(பிரித்தானியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், பத்மாவதி, சண்முகராஜன் (கனடா), கனகராஜா (பிரித்தானியா), பஞ்சாட்சரதேவி, ஆனந்தராஜன் (ஜெர்மனி), காலஞ்சென்ற மங்கையற்கரசி ஆகியோரின் அன்புச் சகோதரரும், கேதீஸ்வரி (சாந்தி- பிரித்தானியா), ஷாமினா (பிரித்தானியா) ஆகியோரின் அன்பு மாமனாரும், புஸ்பநாதன், மஞ்சுளாதேவி, சுகுணாதேவி, ஞானசேகரவேல், நாகேஸ்வரி, ஜெயபாலன், காலஞ்சென்றவர்களான சிவகலை, மகேஸ்வரி, பராசக்தி, பத்மாவதி, சுந்தரலிங்கம், இராசமலர், மகேந்திரன் மற்றும் ஞானகலை, இராசேந்திரா, சுகிர்தமலர் ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்றவர்களான கனகரத்தினம், சோமசுந்தரம், நச்சிதேத்தா, பாலகிருஷ்ணன், தியாகராஜா மற்றும் தனலட்சுமி, சந்திரகாந்தா, செந்தில்நாதன் ஆகியோரின் அன்புச் சகலனும், ஆரணி, ஹரிணி, ஆருஷ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.


அன்னாரின் பூதவுடல் 01-07-2017 சனிக்கிழமை அன்று மு.ப 09:00 மணிமுதல் பி.ப 04:00 மணிவரை கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் பார்வைக்கு வைக்கப்பட்டு பின்னர் 02-07-2017 ஞாயிற்றுக்கிழமை அன்று மு.ப 11:00 மணியளவில் இறுதிக்கிரியை நடைபெற்று பி.ப 01:00 மணியளவில் கல்கிசை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

**இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

**தகவல் - குடும்பத்தினர்**

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

பூமித்தாயின் மடியில்
12 . 07 . 1947



சொர்க்கபுரியின் வாசலில்
01 . 06 . 2017

### அமரர் சின்னர் குணரத்தினம் (பேபி)
(ஸ்தாபகர் - மாவடி ஞானவைரவர் ஆலயம்)

அன்பினை எமக்கூட்டி அரவணைத்து வழிகாட்டி
பார்போற்றும் மக்களாய் பாரினில் நாம் வாழ
பாதை தந்த அப்பாவே எந்நாளும் எமைவிட்டு
அகலாது உங்கள் நினைவுகள் உங்கள் ஆத்ம சாந்திக்காய்
பிரார்த்திக்கிறோம் இந்நாளில்.

அன்னாரின் அந்தியேட்டி கிரியைகள் இன்று (30.06.2017) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறுகின்றது.
மரணச்சடங்கின் போது எமக்கு உதவியும் ஒத்தாசையும் புரிந்து ஆறுதல் அளித்த அனைவருக்கும் எமது அன்பான நன்றிகள். இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அந்தியேட்டி கிரியைகளிலும் தொடர்ந்து நடைபெறவுள்ள மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**பருத்தித்துறை வீதி,
அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.
071 427 3035**

**குடும்பத்தினர்.**

## நினைந்து மனம் உருகுகின்றோம்



### வேலுப்பிள்ளை அரசறட்ணம்

நல்லையம்பதியின் எழில் அரசியாம் அன்னை வீரமாகாளியின் இராஜகோபுர திருப்பணியை யாழ் மண்ணிலே முதல் முதலாக தனிப்பட்ட உபயமாக ஏற்று நிறைவேற்றி வைத்து வீரமாகாளித்தாயின் கோபுர தரிசனத்தின் ஊடாக எம்மை யெல்லாம் கோடி புண்ணியம் பெற வைத்த பெருந்தகை **ஸ்ரீமதி இராஜேஸ்வரி அம்மா** அவர்களின் கணவர் காரை நகரை பிறப்பிடமாகவும் ஆனைப்பந்தியை வதிவிடமாகவும் தற்போது நியூசிலாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட **வேலுப்பிள்ளை அரசறட்ணம்** அவர்கள் இறைவனடி சேர்ந்த செய்தியறிந்து மனம் நெகிழ்ந்து எமது கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்குகின்றோம். அன்னாரின் பிரிவால் துயர் கொண்டிருக்கும் ஸ்ரீமதி இராஜேஸ்வரி அம்மா அவர்களுக்கும் அவர்தம் பிள்ளைகளின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை கூறி நிற்கின்றோம். அன்னாரின் ஆத்மா வீரமாகாளியம்மன் பாதத்தில் சரணடைந்து சாந்திபெற பிரார்த்திக்கின்றோம்.

**ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!**

**வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலய
பூங்காவனத்திருவிழா, மணிமண்டபத் திருப்பணி
உபயகாரரும், அவர்தம் குடும்பத்தினரும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திமிங்கிலங்கள்

## கடல் ஆழங்களை ஆட்கொண்டு விடுதலை வேண்டும் ஆச்சரியங்கள்

**விற்பனைக்குண்டு**
நல்ல நிலையில் உள்ள பஜாஜ் முச்சக கரவண்டி விற்பனைக்குண்டு. லீசிங்வசதி செய்து தரப்படும். தொடர்புகளுக்கு
077 529 0183

**வாகனம் விற்பனைக்குண்டு**
TATA வாகனம் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு
077 494 4653

**பணியாளர் தேவை**
01) விற்பனைப்பிரதிநிதிகள்
02) பொருள்கள் ஏற்றி இறக்குபவர்கள்
Siva Brothers
No. 15, 4th Lane, Brown Road,
Jaffna. 077 772 2215

**தவறிவிட்டது**
A9 வீதியில் மூக்குகண்ணாடி ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.
தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
தொடர்பு :- 077 958 6697

**விற்பனை**
Pleasure(பிளசர்), Scooty, Water Pump, Motor, Solar Panel, அலுமாரி, முதிரைக்கட்டில் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு 071 531 5500

**தேவை**
பளை நகர்ப்பகுதியில் இயங்கும் தையல் நிலையம் ஒன்றிற்கு தையல் வேலையில் அனுபவமுள்ள பெண்கள் தேவை. தொடர்பு
076 371 4827,076 317 6279

MAJESTIC CINEPLEX
A CEYLON THEATRES CINEMA Jaffna
கார்கிள்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்




விசாரணை ☎ 021- 2227712
MajesticCineplexSL
www.ceylontheatres.lk

திமிங்கிலங்கள் (whales ) ஏறத்தாழ 56 மில்லியன் வருடங்களாக வாழ்ந்துவருகின்ற கடல் விலங்கு என்பதுடன் இவை உலகின் மிகப்பெரிய வாழும் விலங்குகளாகவும் விளங்குகின்றன. இவற்றில் 80 வகைகள் காணப்படு கின்றன.

**ஸ்பேர்ம் திமிங்கிலங்கள் அல்லது மோபி டிக்** (Sperm whale /Moby dick)
இவை மிகப் பெரிய மூளை மற்றும் அதிக பற்களைக் கொண்டவை. 20.5 மீற்றர் நீளம் வரை வளரக் கூடியவை. மூன்று கிலோ மீற்றர்களுக்கு ஒரு பாய்ச்சலை (டைவ்) மேற்கொள்பவை. கடலின் அதிக ஆழத்தில் குறிப்பாக 7 ஆயிரம் அடி ஆழத்தில் வசிக்கும் விலங்குகள் இவை. அதிக சப்தங்களை எழுப்பக்கூடியவை. ஐ.யூ.சி.என் ( International Union for Conservation of Nature ) இணைவால் ஆபத்தான மிருகம் என வகைப்படுத்தப்பட்டுள்ளது.

**பைலட் திமிங்கிலம்** ( Pilot whale / killer whale )
இவை பார்ப்பதற்கு டொல்பின் போலவே தோற்றத்தைத் தருபவை. டொல்பின் இனத்தோடு சம்பந்தமுடையவை. கப்பல்களைத் தொடர்ந்து வந்து நட்பு முறையில் பழக்ககூடியவை. 15 நிமிடங்களைக் கொண்ட அதி வேக நீச்சலில் ஒரு கிலோ மீற்றர் ஆழத்தில் உள்ள ஸ்கிவிட்களை உண்பதற்கு பாய்ச்சலை மேற்கொள்வதுடன் அதே வேகத்திலேயே மூச்செடுக்கக் கடல் மட்டத்திற்கு மேல் வருகை தரும். வயதான பெண் திமிங்கிலங்களுக்கு இவையே வழிகாட்டிகள்.

**பறங்கித் தலை திமிங்கிலங்கள்** ( melon headed whale )
இவற்றுக்கும்பைலட்திமிங்கிலங்களுக்கும் அதிக தொடர்புகள் உண்டு. இவை இலகுவில் பார்க்கமுடியாதவை ஏனெனில் கடலின் ஆழத்தில் வசிக்கக் கூடியவை. அடர் சாம்பல் நிறத்தில் இவை இருக்கும். குடும்பமாக வசிக்ககூடியவை. இவை கூட்டமா இருப்பதுடன் அவற்றின் எண்ணிக்கையானது அண்ணளவாக 100 ஆக இருக்கும்.

**படகுத் தலை திமிங்கிலம்** (Bow head whale Baleen)
படகுத் தலை திமிங்கிலங்கள் 200 ஆண்டு காலம் உயிர் வாழக்கூடியவை. நீண்ட பெரிய வாயைக் கொண்டமைந்தவை. 136 தொன் அளவுடைய நிறையைக் கொண்டது. இவை நீலத்திமிங்கிலத்திற்கு அடுத்தபடியாகப் பேசப்படுபவை. ஆர்டிக் கடற்பகுதியில் அதிகம் வசிப்பவை. உணவுகளை பற்களில் வடிகட்டி விழுங்கும் உணவு உள்ளீட்டுத் தன்மையைக் கொண்டவை. இந்த வகையான பற்களின் அமைப்பை ஆங்கிலத்தில் 'பேலென்' எனக் குறிப்பிடுகின் றனர்.

**மீன் துடுப்புத் திமிங்கிலம்** ( Fin whale Baleen)
மீன் துடுப்பு திமிங்கிலம் 27 மீற்றர் நீளம் வரை வளரக்கூடியது. போலார்க் கடற்பகுதி மற்றும்பெரும்பாலானகடல்பிரதேசங்களில் இவை காணப்படுகின்றன. இவை அருகிவரும் கடல் விலங்குகள். 85 தொடக்கம் 95 வருடங்கள் உயிர் வாழக்கூடியவை. இவற்றுள் சிலவகை 140 ஆண்டுகளும் வாழக்கூடியவை.

திமிங்கிலங்களுக்கும், மீன் இனத்திற்கும் தொடர்புகள் ஏதும் கிடையாது. மீன்கள் குளிர் குருதிப் பிராணிகள். திமிங்கி லங்கள் வெப்பக் குருதிப் பிராணிகள். மீன்களுக்கு செதில்கள் உண்டு. திமிங்கி லங்களுக்கு செதில்கள் கிடையாது ஆனாலும் நுரையீரல்கள் உண்டு. குட்டி போட்டுப் பாலூட்டுபவை.

ஒலியை கிரகிக்கும்(எக்கோ லோகேசன்) சிறப்புடையதான உணர் உறுப்புகளைக் கொண்டவை. இவற்றை கொண்டே கடலின் ஆழம், திசை என்பவற்றை கணித்துக்கொள்கின்றன. அதிக புத்திசாலித் தனம் கொண்டவை. வடதுருவப்பகுதியில் அதிகம் வசிப்பவை. குளிர் காலங்களில் நிலநடுக்கோட்டு பிரதேசங்களுக்கு இடம் பெயர்கின்றன. இவற்றின் உடலமைப்பு கடும் குளிரையும் தாங்கக் கூடிய இயைபாக்கத்தைக் கொண்டுள்ளன.

தூக்கத்தில் இவற்றின் பாதி மூளை விழித்திருக்கும். இந்தச் செயல்நிலைகள் இயல்பாகவே கடலின் மேல் தளத்திற்கு அவற்றை மூச்செடுக்க வந்து செல்வதற்கு உணர்த்து கின்றன.

**நீலத்திமிங்கிலம்**
நீலத்திமிங்கிலங்கள் 30 மீற்றர் நீளம்(சரசரியாக 100 அடி) கொண்ட உலகின் பெரிய விலங்கினமாகும். இவற்றின் நிறை 30 யானைகளின் நிறைக்குச் சமமானது.

நீலத்திமிங்கிலங்களின் இதயம் 600 கிலோ கிராம் நிறையைக் கொண்டது. இவற்றின் இதயம் நிமிடத்துக்கு பத்து தடவைகள் மட்டுமே துடிக்கும் தன்மை கொண்டது என்பது ஆச்சரியமான விடயமே.

பிறக்கும் போதே குட்டி நீலத்திமிங்கிலம் 3 தொன் எடையுடன் 9 மீற்றர் நீளத்தையும் கொண்டி ருக்கும். தினமும் 200 லிற்றர் தாய்பால் குடித்து நாளொன்றுக்கு 90 கிலோ சதை போடும். நீலதிமிங்கிலதிற்கு ஒரு நாள் இயக்கத்திற்கு, 1.5 மில்லியன் கலோரி சக்தி தேவைப்படுகிறது மனிதர்களுக்கு 2ஆயிரத்து500 கலோரி தேவைப்படுகின்றது.

ஆண் ஹம்பேக் திமிங்கிலங்கள் பாடக்கூடியவை. நீண்ட நேரம் சப்தமிட்டுப் பாடுவன.



இந்தச் சப்தங்களின் மீடிறன் என்பது 20 முதல் 9 ஆயிரம் ஹெட்ஸ் கொண்டது. அதாவது பியானோவின் மீச்சிறு நாதம் போலவும் இவை சப்தங்களை வெளிப்படுத்தும். இவை ஒன்றுகொன்று ஒலி சமிக்கைகள் மூலமாகவே தொடர்பு கொள்கின்றன.

இனப்பெருக்கத்திற்காக (மைக்ரேசன்) 20 ஆயிரம் முதல் 30 ஆயிரம் கடல் மைல்கள் வரை பயணிக்கக் கூடியவை. அதாவது நீலத்திமிங்கி லங்கள் உலகையே வலம் வந்து விடுகின்றன.

உலக திமிங்கில பாதுகாப்பு அமைப்பு 1986 ஆம் ஆண்டு முதல் திமிங்கிலங்களை அழிப்பதனை தடைசெய்தது. ஆனாலும் தொடர்ந்தும் இவை வேட்டையாடப்படுகின்றன. 1963 ஆம் ஆண்டு ஆய்வுத் தகவலடிப்படையில் அந்தாட்டிக்கா பகுதியில் எடுக்கப்பட்ட ஆய்வு மாதிரிகளின் படி 25 லட்சம் திமிங்கிலங்கள் இருந்தன. ஆனாலும் இன்று சில ஆயிரம் மட்டுமே உள்ளன. 17 மற்றும் 18 ஆம் நூற்றாண்டுகளில் இவற்றில் இருந்து பெறப்பட்ட கொழுப்பு எண்ணையில் இருந்து விளக்கு எரித்த தகவல்களும் சொல்லப்படுகின்றன.

உணவுக்காகவும், கொழுப்பு எண்ணெய் மற்றும் எலும்புகளுக்காகவும் இவை வேட்டையாடப்படுகின்றன. இவற்றின் அடுத்த எதிரியாக விளங்குபவை அணுக் கழிவுகளே. கடல் மாசு (எண்ணை கழிவுகள்), சுற்றுச் சூழல் பாதிப்புகள் இவற்றின் அழிவுக்கு மிகப் பிரதான காரணங்களாக விளங்கு கின்றன.

இவற்றுள் சில கடற்கரைக்கு ஒதுங்கி தற்கொலை செய்து கொள்வதாவும் அதற்கான காரணங்கள் தெரிய வில்லையெனவும் தகவல்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

fin whale,sei whale,. humpback whale, Bryde|s whale and minke whale என்பவையும் திமிங்கிலங்களின் சில வகைகளாக விளங்குகின்றன.

**ப்ளப்பர்** ( blubber )
திமிங்கிலத்தின் உடலின் மேல் தோல் மற்றும் உடலின் சதைப்பகுதிக்கும் இடைப்பட்ட கொளுப்பு பகுதியையே ஆங்கிலத்தில் ப்ளப்பர் என்கிறார்கள். இவை உடலை வெப்பமாக வைத்துக் கொள்ளவும், நீரில் மிதக்கவும் உதவுகின்றன.

**திமிங்கில குடும்பங்கள்**
பொரும்பான்மையான இனங்கள் குடும்பமாகவே வசிக்கின்றன. கூட்டங்கூட்டமாக வசிக்கும் இவற்றை ஆங்கிலத்தில் போட்ஸ் (pods ) என்று சொல்கிறார்கள். இனப்பெருக்கத்திற்காக இடம் விட்டு இடம் இடம் பெயர்கின்றன.

**மீனின் வாலிற்கும் திமிங்கில துடுப்புக்கும் (Flukes) இடையேயான வித்தியாசம்**
இரண்டின் வடிவத்தைப் பார்க்கும் போதும் அவை இரண்டும் ஒன்று போலவே தோன்றும். ஆனாலும் மீன் முன்னே நீந்தி செல்ல வால் பகுதியை இடது வலதாக அசைக்கும். திமிங்கிலங்கள் மேலும் கீழுமாக அசைக்கும்.

**ஊது துளைகள்** (Blow holes)
திமிங்கிலத்தின் தலைபகுதியில் உள்ள ஊது துளைகள் திமிங்கிலங்கள் சுவாசிக்கும் உறுப்பாக விளங்குகின்றன. நீர் மட்டத்தின் மேல் பகுதிக்கு வரும் திமிங்கிலங்கள் காற்றை ஊதி உறிஞ்சும் போது நீருற்று மேற் கிளம்பும். இதை அடையாளம் கண்டு கொண்டே திமிங்கிலங்களை அதிகம் வேட்டை ஆடுகின்றனர்.

ஆக, இவை கடல் ஆழங்களை வரையறுத்து ஆட்கொண்டு விடுதலை வேண்டும் ஆச்சரியங்களாக விளங்குகின்றன.

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1376
சீட்டிழுப்பு திகதி 2017.06.29
வெற்றி இலக்கங்கள்
23 40 47 58 T
அடுத்த திங்கட்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 14,208,164/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

SUPER BALL
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 669
சீட்டிழுப்பு திகதி 29.06.2017 வியாழக்கிழமை
M 04 33 57 59
சுப்பர் ஜக்பொட்
ரூ. 50,413, 128/=
வெல்லப்படவில்லை
தொ.பே : 011 4062002 / 011 4062062 Web: www.dlb.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வித்தியா...

அன்னலிங்கம் பிரேமசங்கர், மாணிக்கவாசகர் இளஞ்செழியன் ஆகியோர் அடங்கிய தீர்ப்பாயத்தின் இரண்டாம் நாள் அமர்வு நேற்றுக் காலை 9.30 மணியளவில் யாழ்ப்பாணம் நீதிமன்றக் கட்டடத் தொகுதியின் 2ஆவது மாடியிலுள்ள திறந்த மன்றில் கூடியது.

வழக்குத் தொடுனர் சார்பில் பிரதி மன்றாடியார் அதிபதி பி. குமாரரட்ணம் தலைமையில் அரச சட்டவாதிகள் நாகரத்தினம் நிஷாந்த், ஷகிப் ஸ்மாயில் , லக்சி டீ சில்வா மற்றும் மாலினி விக்னேஸ்வரன் ஆகியோர் முன்னிலையாகி இருந்தனர்.

1ம் ,2ம் , 3ம் , 5ம் மற்றும் 6ம் எதிரிகள் சார்பில் அரச தலைவர் சட்டத்தரணி சரங்க பாலசிங்க மற்றும் சட்டத்தரணி மகிந்த ஜெயவர்த்தன ஆகியோரும் 5ஆம் எதிரியின் சார்பில் சட்டத்தரணி ஆறுமுகம் ரகுபதியும் 4ஆம், 7ஆம் , மற்றும் 9ஆம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி சின்னராசா கேதீஸ்வரன் ஆகியோர் முன்னிலையாகி இருந்தனர். அத்துடன் மன்றினால் 9 எதிரிகள் சார்பில் நியமிக்கப்பட்ட சட்டத்தரணி விக்னேஸ்வரன் ஜெயந்தாவும் முன்னிலை ஆகியிருந்தார்.

எதிரிகளான பூபாலசிங்கம் இந்திரகுமார், பூபாலசிங்கம் ஜெயக்குமார், பூபாலசிங்கம் தவக்குமார் , மகாலிங்கம் சசிதரன் , தில்லைநாதன் சந்திரகாசன் , சிவதேவன் துஷாந்த் , பழனி ரூபசிங்கம் குகநாதன் , ஜெயதரன் கோகிலன் , மற்றும் மகாலிங்கம் சசிக்குமார் ஆகிய ஒன்பது எதிரிகளும் மன்றில் முற்படுத்தப்பட்டனர்.

இரண்டாம் நாள் சாட்சி பதிவுகள் ஆரம்பமானது, அதன் போது இந்த வழக்கின் ஐந்தாவது சாட்சியும் சட்டமா அதிபரால் நிபந்தனைகளுடன் பொது மன்னிப்பு வழங்கப்பட்ட அரச சாட்சியுமான உதயசூரியன் சுரேஷ்கரன் சாட்சியம் அளித்தார்.

அவர் தனது சாட்சியத்தில் தெரிவித்ததாவது: நான் புங்குடுதீவு 10ஆம் வட்டாரத்தை சேர்ந்தனான். பல வருடங்களாக கொழும்பில் கடை ஒன்றில் வேலை செய்தேன். இந்த வழக்கு தொடர்பில் கொழும்பு 4ஆம் மாடியை சேர்ந்த புலனாய்வு துறையினர் முதலில் என்னை கைது செய்து விசாரணை செய்த பின்னர் விடுவித்தனர். பின்னர் மீண்டும் நான் சில நாட்களில் கைது செய்யப்பட்டேன். இந்த வழக்கு தொடர்பில் ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவானின் சமாதன அறையில் எனது வாக்கு மூலத்தை வழங்கி இருந்தேன்.

**ஒரு தலை காதல்**

கொலை செய்யப்பட்ட வித்தியாவை எனக்குத் தெரியும். அவரது குடும்பத்தினரையும் எனக்கு நன்கு தெரியும். வித்தியா எவரையும் காதலித்தாரா? என்பது எனக்கு தெரியாது. ஆனால் பெரியம்பி என அழைக்கப்படும் துஷாந்த் (6ஆவது எதிரியான சிவதேவன் துஷாந்த்) என்பவர் வித்தியாவை காதலிப்பதாக கூறினார்.

அதனால் நானும் பெரியாம்பியும் வித்தியா பாடசாலை செல்லும் நேரம் பாடசாலையால் வீடு திரும்பும் நேரங்களில் தினமும் வித்தியாவின் பின்னால் பெரியாம்பியின் மோட்டார் சைக்கிளில் சென்று வருவோம். அந்தவேளைகளில் வித்தியாவுடன் பெரியம்பி கதைக்க முற்படுவார். ஆனால் வித்தியா கதைக்க மாட்டார். வித்தியா சில வேளைகளில் அவரின் அண்ணாவுடன் மோட்டார் சைக்கிளில் பாடசாலை சென்று வருவார். அண்ணா இல்லை என்றால் சைக்கிளில் சென்று வருவார்.

பெரியம்பியும் நானும் கிட்டத்தட்ட மூன்று மாதங்கள் வித்தியாவின் பின்னால் மோட்டார் சைக்கிளில் சென்று வந்தோம். அந்த வேளைகளில் அவருடன் கதைக்க முற்பட்டால் அவர் கதைப்பதில்லை. ஒரு நாள் தன்னுடன் கதைக்க வேண்டாம் எனவும் வித்தியா பெரியாம்பியிடம் கூறி இருந்தார்.

**வித்தியா செருப்பால் எறிந்தார்**

கொலை செய்யப்படுவதற்கு ஒன்று ஒன்றரை மாதங்களுக்கு முன்பு ஒருநாள் வித்தியா பெரியாம்பிக்கு செருப்பால் எறிந்து பேசி இருந்தார். அப்போது நான் சொன்னேன் "அந்த பிள்ளைக்கு விருப்பம் இல்லை போல அந்த பிள்ளையை விடு" என்று.

**காலையிலேயே கள்ளுக் குடிப்போம்**

நாங்கள் புங்குடுதீவில் மாப்பிளை (நடராஜா புவனேஸ்வரன்) என்பவரிடம் கள்ளு வாங்கி குடிப்போம். அவர் சீவல் தொழில் செய்பவர். அவரின் வீட்டுக்கு நானும் என்னுடன் கொழும்பில் இருந்து வந்திருந்த சந்திரஹாசன் , நிஷாந்தன் , கண்ணா மற்றும் சசி என்போரும் கள் குடிக்க போறனாங்கள். காலையில் பத்து மணிக்கு முன்னர் நாம் கள்ளு குடிக்க போயிடுவோம்.

**போதையில் வித்தியா வீட்டுக்குச் சென்றனர்**

சம்பவ தினத்துக்குச் சில நாள்கள் முன்னர் மாப்பிள்ளை வீட்டில் கள் குடித்த பின்னர் , மதியம் 12 மணி போல பெரியாம்பியும் நானும் கடற்கரை வழியாக வித்தியாவின் வீட்டுக்கு சென்று இருந்தோம். நான் வீட்டுக்கு சற்று தொலைவில் நின்று கொண்டேன். பெரியாம்பி மாத்திரம் வீட்டுக்குச் சென்று பார்த்து விட்டு ஒருவரும் வீட்டில் இல்லை என வந்து கூறினார்.

அன்று பின்னேரம் மீண்டும் கள் குடிக்கப் போனோம். அப்போது எம்முடன் சந்திரஹாசனையும் அவரது வீட்டுக்கு சென்று அழைத்துச் சென்றோம். நாங்கள் கள் குடித்துக்கொண்டு இருந்த நேரம், அங்கே தவக்குமார் மற்றும் ரவி ஆகியோர் வந்திருந்தனர். அவர்களுடன் சேர்ந்து கள் குடித்தோம்.

அந்நேரத்தில் தவக்குமாருக்கும் ரவிக்கும் , பெரியம்பி வித்தியா தனக்கு செருப்பால் எறிந்து போட்டாள் என்று கூறினார். அதற்கு ரவி ' நீ வித்தியாவை காதலிக்கிறியா ? ' என கேட்டான். அதற்கு பெரியாம்பி ஓம் என்று சொன்னான்.

**வித்தியாவை தூக்கித்தாரேன்**

பின்னர் போகும் போது ரவி, பெரியாம்பிக்கு "ஏதேனும் உதவி தேவை என்றால் சொல்லு, வித்தியாவை தூக்கி தாறது என்றால் தூக்கி தாறேன் " என சொன்னார். அதற்கு பெரியாம்பி தேவை என்றால் சொல்லுறேன் என சொன்னார்.

அதன் பிறகு இரண்டு மூன்று நாள் கழித்து நாங்கள் மாப்பிள்ளை வீட்டில் கள் குடித்துக் கொண்டு இருந்த போது, அங்கே வந்த ரவியிடம் வித்தியாவை தூக்கி தர சொல்லி பெரியாம்பி கேட்டார். அப்போது அந்த இடத்தில் நானும் பெரியாம்பி, ரவி, சந்திரஹாசன் மற்றும் தவக்குமார் ஆகியோர் இருந்தோம்.

**ரூ. 20,000 பேரம்**

வித்தியாவை தூக்கி தாறது என்றால் எனக்கு 20 23 ஆயிரம் ரூபாய் பணம் தரவேண்டும் என ரவி பெரியம்பிக்கு கூறினார். அதற்கு பெரியாம்பி தான் சம்பளம் எடுத்த உடனே பணத்தை தருகிறேன் எனக் கூறினார்.

அதன் படி ரவிக்கு பெரியாம்பி பணம் கொடுத்தார். வித்தியாவை தூக்கி தர கூறி என தனது சாட்சியத்தை அளித்தார். அதன் போது எவ்வளவு பணம் ரவிக்கு கொடுக்கப்பட்டது என பிரதி மன்றாடியார் அதிபதி சாட்சியிடம் கேள்வி எழுப்பிய போது , இந்த கேள்விகளுக்கு நான் பதில் அளித்தால் எனது அம்மா மற்றும் தங்கைகளுக்கு பாதிப்பு ஏற்படும் என " தீர்ப்பயம் முன்னிலையில் கூறினார்.

**சாட்சிக்கு பாதுகாப்பு வழங்க முடியும்**

நான் இந்த விடயத்தைச் சொன்னால் (மன்றில் சாட்சி சொல்வதனால்) என்னுடைய அப்பா, அம்மாவுக்கு ஏதாவது பிரச்சினை வருமா? என்று சாட்சி தீர்ப்பாயத்திடம் கேட்டார். "அப்படி பிரச்சினைகள் ஏற்படாது. நீங்கள் சுயமாகத் தானே வாக்குமூலம் அளிக்க வந்தீர்கள்? நீங்கள் நீதிமன்றுக்கு உண்மையைச் சொல்வதால்தான் சட்டமா அதிபர் தரப்பு உங்களுக்குப் பொதுமன்னிப்பு வழங்கினார்கள்" என்று தீர்ப்பாயம் சாட்சிக்குத் தெரிவித்தது.

"எனக்கு அம்மாவும் தங்கச்சியும்தான் இருக்கிறார்கள். அவர்களுக்கு இதனால் ஏதாவது பிரச்சினை வருமோ? என்று பயப்படுகின்றேன்" என்று சாட்சிக் கூண்டில் நின்றபடியே சுரேஸ்கரன் அச்சம் வெளியிட்டார்.

"நாங்கள் கட்டாயப்படுத்தவில்லை. ஆனால் சாட்சி சொல்வதாக நீங்கள்தான் கூறினீர்கள். உங்களுடைய தங்கைக்கும் தாயாருக்கும் உரிய பாதுகாப்பை மன்று வழங்கும். எனவே நீங்கள் பயமின்றி சாட்சியமளிக்கலாம்" என்று தீர்ப்பாயம் சாட்சியிடம் தெரிவித்தது.

வழக்குத் தொடுனர் மற்றும் எதிரிகள் தரப்பு சட்டத்தரணிகளுடனும் தீர்ப்பாயம் கலந்துரையாடியது. சாட்சியின் பாதுகாப்புக் கருதி மூடிய மன்றில் சாட்சியப் பதிவு இடம்பெறவுள்ளதால் செய்தியாளர்கள் மற்றும் பார்வையாளர்களை திறந்த மன்றிலிருந்து செல்லுமாறு தீர்ப்பாயம் கேட்டுக் கொண்டது. பின்னர் மூடிய மன்றில் சாட்சி சாட்சியமளித்தார்.

தொடர்ந்து பிற்பகல் 3.30 மணிக்கு 3ஆவது சாட்சியான மாப்பிள்ளை என்று அழைக்கப்படும் நடராஜா புவனேஸ்வரனின் சாட்சியப் பதிவு நடைபெற்றது.

"நான் கள்ளுச் சீவறனான். பெரியாம்பியும், சுரே (சுரேஸ்கரன்), ஆகியோரும் வழமையாக எனது வீட்டுக்கு வந்து கள் வாங்குவார்கள். அவ்வாறே ஒருநாள் எனது வீட்டுக்கு வந்த பெரியாம்பி, "வித்தியாவைக் காதலிப்பதாகவும் அவரைத் திருமணம் செய்யப்பேவாதாகவும் என்னிடம் கூறினார். சம்பவம் நடைபெறுவதற்கு மூன்று நாட்களுக்கு முன்பு என்னை வித்தியா பாடசாலைக்குச் செல்லும் வழியால் கூட்டிக்கொண்டு போனார்கள். சம்பவம் இடம்பெற்ற அன்று வித்தியா இன்னொரு பிள்ளையுடன் பாடசாலைக்குச் சென்றார். ஆலடிச் சந்தியால்தான் வித்தியா வருகிறவா, நான் அவளைக் காதலிக்கிறேன். கலியாணம் செய்யப்போகிறேன் என்று கூறித்தான் பெரியாம்பி என்னக் கூட்டிக்கொண்டு போனவர். என்னையும் சரேஸ்கரனையும் ஒளிந்திருந்து பார்க்கச் சொல்லி பெரியாம்பி சொன்னவர். ஜெயக்குமாரும் தவக்குமாரும் அந்த இடத்துக்கு வந்தவர்கள்.

**வித்தியா கடத்தல்**

அவர்கள் இருவரும் வித்தியாவுக்கு அருகில் சென்று அவரைக் கட்டிப்பிடித்தவர்கள். பாடசாலை வெள்ளைச் சீருடையுடன்தான் வித்தியா வந்தவர். சப்பாத்துப் போட்டிருந்தவர்: சைக்கிள் கூடைக்குள் குடையிருந்தது. பெரியாம்பியும் சந்திரகாசனும் பற்றைக்குள் வித்தியாவை இழுத்துக்கொண்டு சென்றார்கள். பின்பு வித்தியா அணிந்திருந்த உடுப்புக்கள் அனைத்தையும் கழற்றினவர்கள். நான் அங்காலப் பற்றைக்குள் நின்று பார்த்துக்கொண்டு நின்றனான். சுரேஸ்கரனும் அவர்களைப் பார்த்துக்கொண்டு நின்றவர்.

**கதறக் கதற வன்புணர்வு**

பெரியாம்பி வித்தியாவைப் பார்த்து நான் காதலிப்பது உனக்கு விருப்பமில்லையா? என்று பேசினார். அந்த நேரம் வித்தியா ஐயோ விடுங்கடா ஐயோ விடுங்கடா என கதறினார். வித்தியாவின் வாயைப் பெரியாம்பி பொத்தினார். உடுப்பைக் கழற்றிய இடத்தில் இருந்து பிள்ளையை வன்புணர்வு செய்த இடத்துக்கு இழுத்துக்கொண்டும், கைத்தாங்கலாகவும் கொண்டு சென்றார்கள். வித்தியா கதறி அழுதும் சந்திரகாசனும் பெரியாம்பியும் அவரை விடவில்லை. அந்த நேரம் ஒரு பாழடைந்த வீட்டுக்குள் வித்தியாவை அவர்கள் கொண்டு சென்றார்கள். செந்தில், ரவி, பெரியாம்பி, சந்திரகாஸ் இவர்கள் நான்கு பேரும்தான் அந்த பாழடைந்த வீட்டுக்குள் சென்றவர்கள். நான் அந்த நேரம் கத்திக்கொண்டு ஓடத் தயாராகினான். பெரியாம்பி கத்தியக்காட்டி நின்று ஆக்கள் யாரும் வருகிறார்களா? எனப் பார்த்துக்கொள் என்றார். சுரேஸ்கரனும் பற்றைக்குள் நின்றார். அந்த வீட்டுக்குள் வைத்து பிள்ளையை மாறி மாறி ஒளிப்படம் எடுத்தார்கள். பெரியாம்பியும் சந்திரகாசனும் பிடிக்க ஏனையவர்கள் ஒளிப்படமும் எடுத்தார்கள். முதலில் வித்தியாவை பெரியாம்பிதான் வன்புணர்வுக்குட்படுத்தினார். இரண்டாவதாக சந்திரகாசனும் மூன்றாவதாக செந்திலும் சந்திரகாசனும் ஒளிப்படம் எடுக்க ஜெயக்குமார் வித்தியாவை வன்புணர்வுக்குட்படுத்தினார். பின்புதான் அந்தப்பிள்ளை மயங்கி விட்டது. ஒளிப்படம் எடுத்து சுவிஸ்குமாருக்கு கொடுக்க வேண்டும் என்றும் அவர் வெளிநாட்டுக்கு கொண்டு போகப் போறார் என்றும் அவர்கள் கதைத்துக்கொண்டனர்.

**ஒளிப்படம் எடுத்தனர்**

பெரிய தொடுதிரை அலைபேசி கொண்டுதான் ஒளிப்படம் எடுத்தார்கள். பிறகு கைத்தாங்கலாக பிள்ளைய தூக்கிக்கொண்டு வந்து அலரி மரத்தில கட்டினார்கள். கூப்பிடு தூரத்தில்தான் நான் நின்றேன். பிள்ளையின் வெள்ளைச் சீருடையின் சட்டையின் இடுப்புப்பட்டியால் கைகள் இரண்டையும் கழுத்துப்பக்கமாக வளைத்துக் கட்டினார்கள். பின்பு கால்களை விரித்து சப்பாத்து நூல்களினால் அலரி மரத்து கிளைகளுடன் கட்டினார்கள். பின்பு பிள்ளையின் ஆடைகளை அவரது உடம்பின் மேல் போட்டார்கள்.

பிறகு நான் சீவலுக்கு போறதுக்காக வீட்ட போய்விட்டேன். பின்னர் காலை 9.30 மணிக்கு அந்த நான்கு பேரும் கள்ளுக்குடிப்பதற்காக வீட்டுக்கு வந்தார்கள். பின்னேரமும் வந்தார்கள். நான் மழை என்றதும் சீவவில்லை. சந்திரகாசன், பெரியாம்பி மூன்று பேர் வந்தார்கள். கள் சீவவில்லை என்றதும் திரும்பிச் சென்றுவிட்டார்கள். சிறிது நாட்கள் கழித்து என்னை அலைபேசி மூலம் தொடர்பு கொண்டு மிரட்டினார்கள். நான் ஊர்காவற்றுறை நீதிமன்றில் இது பற்றி வாக்குமூலம் அளித்தேன். சுவிஸ்குமாரை எனக்கு அறிமுகப்படுத்தியது சுரேஸ்கரன்தான். சுவிஸ்குமாரின் மனைவியின் தம்பிதான் பெரியாம்பி. சுவிஸ்குமார் வெளிநாட்டுக்கு கொண்டு போறதுக்குத்தான் காணொலி எடுத்ததாகப் பெரியாம்பி கூறினார்.

எதிரிக்கூண்டில் 6ஆவது இலக்க எதிரிதான் பெரியாம்பி என்று கூறப்படும் துசாந்தன், 5ஆம் எதிரி சந்திரகாசன், 3ஆம் எதிரி தவக்குமார், 2ஆம் எதிரி ஜெயக்குமார், 9ஆம் எதிரி சுவிஸ்குமார், 4ஆம் எதிரி சசி, 7ஆம் எதிரி நிசாந்தன், 8ஆம் எதிரி கண்ணன் எதிரிகளைச் சாட்சி அடையாளம் காட்டினார். கூடையையும் சீற்றையும் வைத்து இது வித்தியாவினுடைய சைக்கிள்தான் என அடையாளம் காட்டினார். நேற்றைய விசாரணை இரவு 8 மணிவரை தொடர்ந்தது. மூன்றாம் நாள் விசாரணை இன்று காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகும். (வ-12-37)

## பன்னாட்டு...

நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரி வித்ததாவது:

பயங்கரவாதத்தை ஒழித்து நாட்டில் நிலையான அமைதியை ஏற்படுத்தித் தந்த எமது படையினரும் இப்போது ஆபத்தை எதிர்நோக்கியுள்ளனர். அவர்களைத் தண்டிப்பதற்கான ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன. போலியான போர்க் குற்றச்சாட்டுக்கள் அவர்கள்மீது சுமத்தப்பட்டுள்ளன.

அந்தக் குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்காக பன்னாட்டு நீதிபதிகள் இலங்கைக்கு வர இருக்கின்றனர். பன்னாட்டு நீதிபதிகள் அனுமதிக்கப்படமாட்டார்கள் என்று அரசு கூறினாலும் அனுமதிப்பதற்கான வாக்குறுதியை அரசு பன்னாடுகளுக்கு வழங்கியுள்ளது. இவ்வாறு ஐ.நாவுக்கு இரண்டு தடவைகள் வாக்குறுதி வழங்கப்பட்டது என்று நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கியின் ஆளுநராக சிங்கப்பூர் குடிமகன் மகேந்திரன் நியமிக்கப்பட்டதுபோல் வெளிநாட்டுக் குடிமக்கள் நீதிபதிகளாக நியமிக்கப்படமுடியும் என்று சுமந்திரன் கூறுகின்றார். அதுதான் நடக்கப் போகின்றது. அதுமாத்திரமன்றி பௌத்த மதத்துக்கு இருக்கின்ற முதன்மை அந்தஸ்தும் நீக்கப்படவுள்ளது - என்றார். (த-3)

## வடக்குக்...

இந்தியத் தூதுவர் தரன்ஜித் சிங் சந்து, வடக்கு மாகாண முதலமைச்சரை நேரில் சந்தித்துப் பேச்சு நடத்தினார். வடக்கு மாகாண சபையில் கடந்த சில வாரங்களாக ஏற்பட்டிருந்த உட்கட்சிக் கட்ட குழப்பம், அதன் பின்னரான நிலைமைகளிலேயே இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

இதன்போது, வடக்கு மாகாண உட்கட்டமைப்பு அபிவிருத்தி, வாழ்வாதாரங்களைக் கட்டியெழுப்புவதற்கு உங்களிடம் ஒன்றுபட்ட ஒற்றுமை இருக்க வேண்டும். அரசியல் தீர்வை எடுப்பதற்கும் ஒற்றுமையாக இருப்பது உதவியாக இருக்கும் என்று சாரப்பட, முதலமைச்சரிடம் இந்தியத் தூதுவர் எடுத்துரைத்துள்ளதாக நம்பகரமாகத் தெரிய வருகின்றது.

உள் அரசியல் விவகாரங்களில் நேரடியாகத் தலைப்போடுவதை அவர் தவிர்த்து மறைமுகமாகவே விடயங்களைச் சுட்டிக்காட்டியதாக, கூட்டத்தில் கலந்து கொண்ட பிரமுகர் ஒருவர் தெரிவித்தார். (5)

## போராட்டத்தை...

யான பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தை நடத்துவதற்கு, அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்திய செயற்குழு இணக்கம் தெரிவித்துள்ளது.

மாலபே தனியார் மருத்துவக் கல்லூரி மற்றும் நெவில் பெர்னாண்டோ மருத்துவமனை ஆகியன தொடர்பில் ஏற்பட்டுள்ள பிரச்சினை தொடர்பில் நேற்று இடம்பெற்ற அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் சிறப்பு மத்திய செயற்குழு கூட்டத்தில் இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளது. பணிப் புறக்கணிப்புப் போராட்டம் மேற்கொள்ளப்படும் தினம் சங்கத்தின் செயற்குழுவால் தீர்மானிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-10)

## விகாரை...

ஆண்டுக்கு முன்னரான காலப் பகுதியில் தையிட்டிப் பிரதேசத்தில் 20 பரப்புக் காணியில் விகாரை அமைந்திருந்ததாக வலி. வடக்குப் பிரதேச சபைத் தகவல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்தக் காணியை தற்போது அடையாளப்படுத்தி அளவிடும் நடவடிக்கைகளே நேற்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

1983ஆம் ஆண்டின் பின்னர் விகாரையை விட்டு பிக்குகள் இடம்பெயர்ந்து சென்றனர். அந்தக் காணியில் தமிழ் மக்கள் குடியமர்ந்தனர். அவர்கள், 1990 ஆம் ஆண்டு போர் நடவடிக்கை காரணமாக இடம்பெயரும் வரையில் அந்தக் காணியிலேயே வாழ்ந்து வந்தனர். தையிட்டிப் பிரதேசம் அண்மையில் விடுவிக்கப்பட்டது. விகாரைக் காணியில் முன்னர் தங்கியிருந்த 7 குடும்பங்கள் அந்தக் காணியில் மீளக்குடியமர்ந்திருந்தனர். இந்த நிலையில், விகாரை முன்னர் அமைந்திருந்தமைக்கான ஆவணம், காணி உறுதிப் பத்திரம் என்பவற்றுடன் விகாரைக்குச் சொந்தமான பிக்குகள், யாழ்ப்பாணத்திற்கு வந்து வலி. வடக்குப் பிரதேச செயலருடன் சந்தித்துப் பேசியிருந்தனர். விகாரைக்கான காணிக்கு அயலிலுள்ள காணி உரிமையாளர்களும் அழைக்கப்பட்டு, விகாரைக் காணி நேற்று அளவீடு செய்யப்பட்டுள்ளது.

அந்தக் காணியில் தங்கியுள்ள 7 குடும்பங்களுக்கும் தலா ஒரு பரப்பு வீதமாவது வழங்குமாறு வலி.வடக்குப் பிரதேச செயலகத்தினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பீற்றர்ஸ், யங்கம்பன்ஸ், ஆதிசக்தி முன்னேற்றம்

யாழ்ப்பாணம், ஜூன் 30
உதயதாரகையின் கால்பந்தாட்டத் தொடரில் சென். பீற்றர்ஸ் விளையாட்டுக் கழகம், கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் மற்றும் ஆதிசக்தி விளையாட்டுக் கழகம் என்பன வெற்றிபெற்று அடுத்தசுற்றுக்குமுன்னேறியுள்ளன.
உதயதாரகையின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் பொற்பதி சென். பீற்றர்ஸ் விளையாட்டுக் கழகமும் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகமும் பலப்பரீட்சை நடத்தின. 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றது சென். பீற்றர்ஸ் அணி.
தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் வரணி நியூஸ்ரார் விளையாட்டுக் கழகமும் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதின. இதில் 4:1என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம்.
பிறிதொரு ஆட்டத்தில் வல்வை ஆதிசக்தி விளையாட்டுக் கழகமும் வரணி யுத் விளையாட்டுக் கழகமும் மோதின. ஆட்டத்தில் தனித்துஆதிக்கம்செலுத்திய ஆதிசக்தி அணி 6:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றது. (ம-108)

# கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூன் 30
வடமாகாண மட்ட தடகளத் தொடருக்காகத் தெரிவுசெய்யப்பட்ட யாழ்ப்பாண கல்வி வலயத்துக்குட்பட்ட வீரர் வீராங்கனைகளின் பொறுப்பாசிரியர்களுக்கான கலந்துரையாடல் யாழ்ப்பாண கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் இன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.
கலந்துரையாடலில் கலந்து கொள்ளும் பொறுப்பாசிரியர்கள் வீரர்களின் பெயர், பிறந்த திகதி, பிறப்புச் சான்றிதழ் இலக்கம், அடையாள அட்டை இலக்கம் என்பவற்றுடன் வருகை தருமாறு யாழ்ப்பாண கல்வி வலய பிரதிக் கல்வி பணிப்பாளர் ஏ.அகிலதாஸ் அறிவித்துள்ளார். (ம-422)

# கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி கரப்பந்தில் வென்றது கிண்ணம்

யாழ்ப்பாணம், ஜூன் 30
யாழ்ப்பாண மாவட்ட அணிகளுக்கு இடையிலான 20 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான கரப்பந்தாட்டத்தில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.
கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரிஅணியை எதிர்த்து அத்தியார் இந்துக் கல்லூரி அணி மோதியது. இதில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அணி 25:16, 25:15 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முதலிரு செற்களையும் கைப்பற்றி 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது. (ம-422)





# உடுவில் சம்பியன்

யாழ்ப்பாணம், ஜூன் 30
யாழ்ப்பாண மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் இளநிலைப் பிரிவினருக்கான கூடைப்பந்தாட்டத் தொடரில் 17 வயது பெண்கள் பிரிவில் உடுவில் மகளிர் கல்லூரி அணி சம்பியனானது.
உடுவில் மகளிர் கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் நேற்றுமுன்தினம் மாலை 5 மணிக்கு இடம்பெற்ற 17 வயதுப் பிரிவு பெண்களுக்கான ஆட்டத்தில் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அணியை எதிர்த்து உடுவில் மகளிர் கல்லூரி அணி மோதியது.
முதலாவது கால்பாதியில் 08:07 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முன்னிலை வகித்தது உடுவில். இரண்டாவது கால்பாதியில் இரு அணிகளும் தலா 8 புள்ளிகளைப் பெற்றன. முதல் பாதியின் முடிவில் 16:15 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முன்னிலை வகித்தது உடுவில்.
மூன்றாவது கால்பாதியில் உடுவிலின் ஆதிக்கம் மிகையாக அதிகரித்தது. அந்த அணி 14:07 என்ற புள்ளிகளின் அடிப்படையில் மூன்றாம் பாதியைத் தனதாக்கியது. நான்காம் பாதி 06:04 என்ற புள்ளிகளின் அடிப்படையில் உடுவிலின் வசமானது. முடிவில் 36:26 என்ற புள்ளிகளின் அடிப்படையில் உடுவில் மகளிர் கல்லூரி அணி வெற்றி பெற்று கிண்ணம் வென்றது. (ம-23)

# இன்றைய மோதல்கள்



யாழ்ப்பாணம், ஜூன் 30
**கலைமதி வி.க.**
**கால்பந்தாட்டம்**
நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகம் யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் சுப்பர் 8 ஆட்டங்கள் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன.
இந்தத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகமும் மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது ஆட்டத்தில் பாசையூர் சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து யாழ்ப்பாண பல்கலைக் கழகமும் மோதவுள்ளன.
**நண்பர்கள் வி.க.**
**கால்பந்தாட்டம்**
அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழகம் நடத்திவரும் கால்பந்தாட்டத் தொடரின் காலிறுதி ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
இன்று மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வல்வை ஆதிசக்தி விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (ம-108)

# அரையிறுதியில் விண்மீன் அணி

யாழ்ப்பாணம், ஜூன் 30
அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகம் அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.
அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது காலிறுதியாட்டத்தில் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகம் மோதியது.
ஆட்டத்தின் 18ஆவது நிமிடத்தில் மனோகரா வீரர் மதுசன் முதல் கோலைப் பதிவுசெய்தார். இதுவே முதல் பாதியில் பதிவான ஒரே கோலுமாக அமைந்தது. இரண்டாம் பாதியின் 35ஆவது நிமிடத்தில் விண்மீன் அணியின் நிக்சன் தனது அணியின் சார்பாக கோலைப் பதிவு செய்து பதிலடி கொடுத்தார். நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்கள் நிறைவில் இரு அணிகளும் தலா ஓர் கோலைப் பெற்றிருந்த நிலையில் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. முடிவில் 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது விண்மீன். (ம-108)



# கூடைப்பந்தாட்ட இறுதிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 30
யாழ்ப்பாண மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் இளநிலைப் பிரிவினருக்கான தொடரில் 17 வயது ஆண்கள், 20 வயது பெண்கள் பிரிவினருக்கான இறுதியாட்டங்கள் இன்று நடைபெறவுள்ளன.
கொக்குவில் இந்துக் கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெறும் 20 வயதுப்பிரிவு பெண்களுக்கான ஆட்டத்தில் கொக்குவில் இந்து கல்லூரி அணியை எதிர்த்து உடுவில் மகளிர் கல்லூரி அணி மோதவுள்ளது.
தொடர்ந்து இடம்பெறும் 17 வயதுப் பிரிவு ஆண்களுக்கான ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து மானிப்பாய் ஏஞ்சல் பன்னாட்டு பாடசாலை அணி மோதவுள்ளது. (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுதியில் சிலி!



ரஷ்யாவில் நடைபெற்று வரும் கான்பெடரேசன் கிண்ணத்துக்கான தொடரில் போர்த்துக்கலை வீழ்த்தி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது சிலி.

இந்தத் தொடரில் மொத்தம் எட்டு அணிகள் விளையாடு கின்றன. லீக் சுற்றின் முடிவில் போர்த்துக்கல், சிலி, மெக்சிக்கோ, ஜேர்மனி அணிகள் அரையிறுதிக்கு முன்னேறின. நேற்றுமுன்தினம் நடைபெற்ற முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் சிலி - போர்த்துக்கல் அணிகள் மோதின.

சிலியின் நம்பிக்கையாக விடால் இருந்தார். போர்த்துக்கலின் நம்பிக்கையாக உலக ஜாம்பவான் ரொனால்டோ அமைந்தார். இரு அணிகளும் விடாப் போராட்டத்தை வெளிப்படுத்தின. கோல்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது .முதல் பாதி. இரண்டாம் பாதியிலும் மாற்றங்கள் ஏற்படவில்லை. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்கள் நிறைவு வரை கோலெதுவும் பதிவாகாததை அடுத்து சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

முதல் மூன்று வாய்ப்புக்களையும் சிலி கச்சிதமாகப் பயன்படுத்தியது. போர்த்துக்கலின் உதைகள் அத்தனையையும் தடுத்தார் சிலியின் கோல் காப்பாளர். முடிவில் 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது சிலி.

கடந்த வருடம் நடைபெற்ற யூரோ கிண்ணத் தொடரில் போர்த்துக்கல் அணி சம்பியனானது. இதனால் அந்த அணியின் மீது இந்த வருடம் பெரியளவில் எதிர் ...ப்புக்கள் நிலவின. ஆனால் பலம் வாய்ந்த போர்த்துக்கலுக்கு தனது கோல் ...ப்பாளரின் உதவியுடன் அதிர்ச்சி கொடுத்தது சிலி. (ம)

கோல் காப்பாளரின் சிறப்பான செயற்பாட்டால் பலம் வாய்ந்த போர்த்துக்கலுக்குச் சமநிலைத் தவிர்ப்பில் வைத்து அதிர்ச்சி கொடுத்து இறுதிக்குத் தகுதி பெற்றது சிலி.

## பிபாவின் தில்லுமுல்லு அம்பலம்

2022ஆம் ஆண்டு, கால்பந்தாட்ட உலகக் கிண்ணத்தை நடத்துவதற்கான வாய்ப்பு, கட்டாருக்கு வழங்கப்பட்டமை தொடர்பான விசாரணை அறிக்கையை, பன்னாட்டு கால்பந்தாட்டச் சம்மேளனம் (பிபா) வெளியிட்டுள்ளது. ஏற்கனவே குற்றஞ் சாட்டப்பட்டதைப் போன்று ஏகப்பட்ட மோசடிகள் இதில் இடம்பெற்றுள்ளன.

இந்த அறிக்கையின் சில பகுதிகள், ஜேர்மனியப் பத்திரிகையொன்றால் வெளியிடப்பட்ட பின்னணியிலேயே, முழு அறிக்கையும் வெளியிடப்பட்டுள்ளது. இந்த அறிக்கையில், ஏற்கனவே வெளிப்படுத்தப்பட்டமை போன்று, பிபா அதிகாரியொருவரின் 10 வயதான மகளுக்கு, கட்டாருடன் சம்பந்தப்பட்டோரிடமிருந்து 2 மில்லியன் ஐ.அமெரிக்க டொலர்கள் அனுப்பப்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அத்தோடு, பல நூறாயிரம் யூரோக்களை அனுப்பியமைக்காக, கட்டாருக்கு நன்றி தெரிவிக்கும் மின்னஞ்சல்களை, முன்னாள் பிபா அதிகாரியொருவர் அனுப்பியமையும்வெளிப்படுத்தப்பட்டுள்ளது. (ம)

## மானிப்பாய் ஏஞ்சல் கிண்ணம் வென்றது



...ப்பாணம், ஜூன் 30

யாழ்ப்பாண மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்திய இளநிலைப் பிரிவினருக்கான கூடைப்பந்தாட்டத் தொடரில் 13 வயது ஆண்கள் பிரிவில் மானிப்பாய் ஏஞ்சல் பன்னாட்டுப் பாடசாலை அணி வெற்றிபெற்று சம்பியனானது.

மானிப்பாய் ஏஞ்சல் பன்னாட்டுப் பாடசாலையின் கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் மானிப்பாய் ஏஞ்சல் பன்னாட்டுப் பாடசாலை அணியை எதிர்த்து சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அணி மோதியது.

முதல் பாதியின் முடிவில் 15:11 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முன்னிலை வகித்தது மானிப்பாய் ஏஞ்சல் பன்னாட்டுப் பாடசாலை அணி. அந்த அணி தொடர்ந்தும் ஆதிக்கம் செலுத்தி முடிவில் 35:32 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது. (ம-23)

## சோமஸ்கந்தா சம்பியனானது

யாழ்ப்பாணம், ஜூன் 30

யாழ்ப்பாண மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டத்தில் 17 வயது ஆண்கள் பிரிவில் புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி அணியை எதிர்த்து ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய அணி மோதியது. முதலாவது செற்றில் புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி அணி 25:20 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது. இரண்டாவது செற்றில் ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய அணி 25:20 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது. மூன்றாவது செற்றில் வெற்றியாளரைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 25:21 என்ற செற் கணக்கில் அந்த செற்றைக் கைப்பற்றிய புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி அணி முடிவில் 2:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று சம்பியனானது.

மூன்றாமிடத்தை சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணி பெற்றது. (ம-422)





## என்னாகப்போகிறது சிம்பாப்வே அணி

இலங்கை - சிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான ஒருநாள் தொடர் இன்று ஆரம்பமாகிறது.

சிம்பாப்வே அணி இலங்கைக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரு அணிகளுக்கும் இடையில் 5 ஒருநாள் ஆட்டங்கள் கொண்ட தொடரும் ஓர் டெஸ்ட் ஆட்டமும் நடைபெறவுள்ளன. ஒருநாள் தொடர் காலியில் இன்று ஆரம்பமாகிறது.

சிம்பாப்வே அணி பன்னாட்டுத் தரப்படுத்தலில் முதல் பத்து இடங்களுக்குள் இல்லை. இலங்கை அணியும் தரப்படுத்தலில் கடும் பின்னடைவைச் சந்தித்துள்ளது. இதனால் இந்தத் தொடரைப் பயன்படுத்தித் தரப்படுத்தலில் சிறு ஏற்றம் காண இலங்கை எத்தனிக்கும். இரு அணிகளும் காலியில் நேற்று கடும் வலைப்பயிற்சியில் ஈடுபட்டன என்று கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)

இன்றும் இந்தியா வெற்றிபெற்றால் குறைந்த பட்சம் தொடரைச் சமநிலையில் முடிப்பதற்கு அடுத்த இரண்டு ஆட்டங்களிலும் வெற்றிபெற வேண்டும் என்ற நிலை தீவுகளுக்கு ஏற்படும்.

## மேற்கிந்தியத் தீவுகளின் தலை தப்புமா?

இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரில் மேற்கிந்தியத் தீவுகள் தனது இருப்பைத் தக்கவைக்குமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

இந்திய அணி மேற்கிந்தியத் தீவுகளுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரு அணிகளுக்கும் இடையிலான ஒருநாள் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. முதலாவது ஆட்டம் மழை காரணமாகக் கைவிடப்பட்டது. இரண்டாவது ஆட்டத்தில் இந்தியா வெற்றிபெற்றது. இந்த நிலையில் மூன்றாவது ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது. இன்றும் இந்தியா வெற்றி பெற்றால் குறைந்த பட்சம் தொடரைச் சமநிலையில் முடிப்பதற்கு அடுத்த இரண்டு ஆட்டங்களிலும் வெற்றி பெற வேண்டும் என்ற நிலை தீவுகளுக்கு ஏற்படும். எனவே தொடரில் தனது இருப்பைத் தக்கவைக்க இன்றைய ஆட்டத்தில் வெற்றிபெற வேண்டும் என்ற சிக்கல் நிலை உருவாகும். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை கிரிக்கெட் வீரர்களுக்கு மூன்று மாதங்கள் காலக்கெடு



இலங்கை அணி வீரர்கள் மூன்று மாதங்களுக்குள் தங்கள் உடல் தகுதியை மேம்படுத்தாவிட்டால் அணியில் இருந்து வெளியேற்றப் படுவார்கள் என தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

"இலங்கை அணியில் எவரும் பன்னாட்டுத் தரத்துக்கு ஏற்ற திருப்திகரமான உடல் தகுதியுடன் இல்லை. இருப்பினும் இந்த முறை மட்டும் அவர்களுக்கு விலக்கு அளிக்கப்படுகிறது. தேசிய அணியை தனிப்பட்ட குழுவினர் தெரிவு செய்தாலும் நாட்டுக்காக விளையாடும் அந்த அணிக்கு இறுதி ஒப்புதல் அளிக்க வேண்டியது விளையாட்டுத்துறை அமைச்சர்தான்.

கிரிக்கெட் வீரர்களின் உடலில் கொழுப்பின் அளவு 16 சதவீதம்தான் இருக்க வேண்டும். ஆனால் இலங்கை அணி வீரர்களில் பலருக்கு கொழுப்பின் அளவு 26 சதவீதத்துக்கு அதிகமாக உள்ளது. 3 மாதங்களுக்குள் இலங்கை அணி வீரர்கள் தங்கள் உடல் தகுதியை மேம்படுத்த வேண்டும். உடலில் கொழுப்பு 16 சதவீதத்துக்கு அதிகமாக இருக்கும் வீரர்கள் இலங்கை அணியில் விளையாட அனுமதிக்கப்படமாட்டார்கள்" என்று ஜயசேகர மேலும் தெரிவித்தார். (ம)

## அத்தப்பத்து ஜெயங்கனி தனிநபராகப் போராட்டம்

### இருப்பினும் தோற்றது இலங்கை



பெண்களுக்கான உலகக்கிண்ணத் தொடரில் நேற்று நடைபெற்ற ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஆட்டத்தில் இலங்கை அணியின் முன்னணி வீராங்கனை அத்தப்பத்து ஜெயங்கனி 178 ஓட்டங்களைக் குவித்து அசத்தினார். எனினும், அவரது போராட்டம் இலங்கைக்கு கைகொடுக்கவில்லை.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஆஸ்திரேலியா முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இலங்கையின் ஆரம்ப வீராங்கனைகளான ஹன்சிகா ஓட்டமெதனையும் பெறாமல், ஆட்டமிழந்தார். எனினும் மூன்றாம் நிலை வீராங்கனை ஜெயங்கனி 178 ஓட்டங்களை விளாசினார். இந்த ஓட்டங்களை அவர் வெறுமனே 143 பந்துகளில் பெற்றார். இவற்றில் 22 பவுண்டரிகளும், 6 சிக்சர்களும் உள்ளடங்குகின்றன. எனினும் ஏனைய வீராங்கனைகள் பெரியளவில் பிரகாசிக்கவில்லை.

இதனால் இலங்கை அணியால் வெறும் 257 ஓட்டங்களையே பெற முடிந்தது. பதிலுக்குக் களமிறங்கிய ஆஸ்திரேலிய அணிக்கு அணித்தலைவி லன்னிங் ஆட்டமிழக்காது 152 ஓட்டங்களைக் குவித்து மிரட்டினார். முடிவில் 37 பந்துகள் மீத மிருக்க வெறும் 2 இலக்கு களை இழந்து வெற்றிபெற்றது ஆஸ்திரேலியா. (ம)

# மலிங்கவுக்கு மகேல ஆதரவு



விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறியை விமர்சித்தமைக்காக ஒத்திவைக்கப்பட்ட ஒரு வருடத் தடை விதிக்கப்பட்டுள்ள இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர் மலிங்கவுக்கு முன்னாள் அணித்தலைவர் மகேல ஜெயவர்த்தன ஆதரவு தெரிவித்தார்.

இலங்கை அணியின் வீரர்களின் உடல்தகுதி தொடர்பாக, விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர முன்வைத்த விமர்சனத்துக்கு, மறைமுகமாகப் பதிலளித்திருந்த லசித் மலிங்க, "கிளியின் கூடு பற்றி, குரங்குக்கு என்ன தெரியும்" எனக் கேள்வியெழுப்பியிருந்தார்.

சம்பியன்ஸ் கிண்ணத் தொடரிலிருந்து நாடு திரும்பிய பின்னர், தனது ஒப்பந்தத்துக்கு முரணாக, மலிங்க நடந்துகொண்ட 2ஆவது தடவை இதுவெனத் தெரிவித்த இலங்கை கிரிக்கெட் சபை, அது தொடர்பாக விசாரிக்க, விசாரணைக் குழுவை அமைத்தது.

விசாரணைக் குழுவிடம் மலிங்க, தன் மீதான குற்றச்சாட்டுகளை ஏற்றுக் கொண்டதோடு, உத்தியோகபூர்வமான மன்னிப்பைச் சமர்ப்பித்தார். அதைத் தொடர்ந்து, 6 மாதங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட, ஒரு வருடத் தடை, அவருக்கு விதிக்கப்பட்டது.

அத்தோடு, அவரது அடுத்த ஒருநாள் ஆட்டத்தின் ஊதியத்தின் 50 சதவீதம், தண்டமாக விதிக்கப்பட்டது.

இந்த நிலையில், கீச்சகத் தளத்தில் மகேலவிடம் கருத்தொன்றை முன்வைத்த ரசிகரொருவர், 'வீரர்களைக் கேலியாகப் பேசுவதற்கு விளையாட்டுத்துறை அமைச்சருக்கு அனுமதியுண்டு. ஆனால், வீரர் கருத்துத் தெரிவித்தால், அவருக்கு 6 மாதத் தடை (குறிப்பு: ரசிகரின் கருத்தில், தண்டனை பற்றித் தவறாகக் குறிப்பிடப்பட்டது) விதிக்கப்படுமா? இலங்கை கிரிக்கெட் சபை, அதன் மோசமான நிலையில்' என்று கூறியிருந்தார். அவரது கருத்தை ஆமோதித்த மகேல, 'இதனோடு முழுவதுமாக ஒத்துப் போகிறேன்' என்று குறிப்பிட்டார்.

தான் விளையாடும் காலத்திலேயே இலங்கை விளையாட்டுத்துறையுடன் முரண்பாடுகளைக் கொண்டிருந்த மகேல, ஓய்வின் பின்னர் தற்போதும் அதே நிலையிலேயே தொடர்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

> வீரர்களைக் கேலியாகப் பேசுவதற்கு விளையாட்டுத் துறை அமைச்சருக்கு அனுமதியுண்டு. ஆனால், வீரர் கருத்துத் தெரிவித்தால், அவருக்குத் தடை இலங்கை கிரிக்கெட் சபை, அதன் மோசமான நிலையில்.

## வில்லியர்ஸ் விலகவேண்டும்

### சிமித் வலியுறுத்தல்

தென்னாபிரிக்க அணியின் தலைமைப் பொறுப்பிலிருந்து வில்லியர்ஸ் விலக வேண்டும் என்று அந்த அணியின் முன்னாள் தலைவர் சிமித் வலியுறுத்தினார்.

அண்மையில் முடிவடைந்த மினி உலகக்கிண்ணத் தொடரில் தென்னாபிரிக்க அணி படுதோல்வியடைந்து அரையிறுதிக்குக் கூடத் தகுதிபெறாமல் வெளியேறியது. இதனால் அவர்மீது கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. அவர் பதவியில் இருந்து விலக வேண்டும் என்று எதிர்புக் குரல்கள் வலுத்தன. தற்போது வில்லியர்ஸுக்கு எதிராக அவரது சக நண்பரும் தென்னாபிரிக்க அணியின் முன்னாள் தலைவருமான சிமித் போர்க் கொடி தூக்கியுள்ளார்.

"ஓகஸ்ட் மாதம் தன்னுடைய எதிர்காலம் குறித்து தென்னாபிரிக்க கிரிக்கெட் சபையுடன் வில்லியர்ஸ் பேச இருக்கிறார். என்னுடைய அறிவுரை என்னவென்றால், அடுத்த இரண்டு வருடம் அவர் மூன்று வகையிலுமான ஆட்டங்களிலும் விளையாட வேண்டும். ஆனால் தனது தலைமைப் பதவியை அவர் தியாகம் செய்து அந்த இடத்துக்கு பிறிதொருவரை பயிற்றுவிக்க வேண்டும். வில்லியர்ஸ் தலைவராகத் தொடருவது என்பது தூர நோக்கின் அடிப்படையில் தென்னாபிரிக்க கிரிக்கெட்டுக்கு ஆபத்து" என சிமித் மேலும் தெரிவித்தார். (ம)



போட்டிப் பரீட்சை வகுப்புகள்
சகல பரீட்சைகளுக்கும் பரீட்சைவரை தொடர்ச்சியான வகுப்புகள், குறைந்த கட்டணம், கூடியநேரம், எதிர்பார்க்கை வினாக்கள்
முகாமைத்துவ உதவியாளர்
புதியபிரிவு சனி (1/7), ஞாயிறு (2/7) காலை 10.00 → 2.00
SLAS
பிரதி ஞாயிறு 9.00 → 4.00
முன்பள்ளி ஆசிரியர்
பிரதி ஞாயிறு 11.00 → 3.00
சுங்க பரிசோதகர்
சனி 12.30 → 4.00
வடமாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர்
பிரதி சனி 10.00 → 2.00
தொடர்புகளுக்கு, 076 688 3394
யாழ்ப்பாணக் கல்லூரி, பட்டப்படிப்புகள் பிரிவு (யாழ். ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கியருகில்)

பணியாளர் தேவை
தொடர்புகளிற்கு :- 070 305 5001

காணி விற்பனைக்கு
மானிப்பாய் மத்திய சந்தைக்கு அருகில் 2 பரப்புக் காணி விற்பனைக்குள்ளது.
076 311 0929

பிற்போடப்பட்டுள்ளது

வேலை ஆள்கள் தேவை
Furniture Show Room இற்கு வேலை ஆள்கள் தேவை.
விற்பனைப் பிரதிநிதிகள்
கனரக வாகனச் சாரதி
கூலி ஆள்கள் (ஏற்றி இறக்குதல்)
தொடர்புகளுக்கு
077 713 9899

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30.06.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org